# அரசியற் கட்சிகள்
# அமுக்கக் குழுக்கள்
# பொதுசன அபிப்பிராயம்

வேலுப்பிள்ளை குணரத்தினம்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்சிகள்,
அமுக்கக் குழுக்கள்,
பொதுசன அபிப்பிராயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கட்சிகள், அழுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்

வேலுப்பிள்ளை குணரத்தினம்
தலைவர், சமூக விஞ்ஞானத்துறை
கலைகலாசார பீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு – சென்னை
2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண்: 367

அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்

– வேலுப்பிள்ளை குணரத்தினம்

பதிப்புரிமை: வேலுப்பிள்ளை குணரத்தினம் ©

பதிப்பு : 2009

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது

–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 060 209 7608, மி. அஞ்சல்: kumbhlk@gmail.com
– 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12,

Araciyal Katcikaḷ, Amukkak Kuḻukkaḷ, Potucaṉa Apippirāyam
(Political Parties, Pressure Groups and Public Opinion)

by: Velluppillai Gunaratnam ©

First edition: 2009

*Published by* Kumaran Book House
- 361,1/2 Dam Street, Colombo -12, Tel. - 060 209 7608, E.mail: kumbhlk@gmail.com
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
- 361,1/2 Dam Street, Colombo -12

ISBN 978 - 955 - 659 - 181 - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஜனநாயக நாடுகளில் நல்லாட்சியைக்காண விளையும் இன்றைய சமூகத்தில் அரசியல் கட்சிகள், அமுக்கக்குழுக்கள், பொதுசன அபிப் பிராயம் பற்றிய விதப்புரைகள் பலராலும் பேசப்படும் விடயமாக மாறிவருகின்றது. ஜனநாயகவாட்சியின் சிறந்த தொழிற்பாட்டிற்கு அரசியல் கட்சி அவசியமானதாகும். பல குழுக்களிடையே போட்டி யிட்டு ஓர் அரசியல் அங்கமாக பணிபுரிந்து மக்களின் வாக்குரிமை சக்தியால் அரசாங்க அதிகாரத்தை கைப்பற்றி தமது இலக்குகளை அடைய முயலும் குழுக்களான அரசியல் கட்சிகளே பாராளுமன்ற அரசியலின் இதயமாகும்.

இந்தவகையில் அரசியல் கட்சிகள் பற்றிய ஆய்வில் அதன் தோற்றம், ஒழுங்கமைப்பு, பணிகள், வகைப்பாடுகள் என்பவை பற்றிய கோட்பாட்டு வடிவங்களும் கருத்தியல் சார் விடயங்களும் ஆய்வு செய்யப்படுவதுடன் இவ்விடயங்கள் தெரிவு செய்யப்பட்ட நாடு களில் எவ்விதம் பிரயோகிக்கப்படுகின்றன என்பதை பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் ஆய்வு செய்யப்படுகின்றன.

இந்நூலின் அடுத்த பகுதி அமுக்கக்குழுக்கள் பற்றியதாகும். இதில் அமுக்கக்குழுக்கள் பற்றிய ஆய்வுகளுக்கு அடித்தளமான குழுக் கோட்பாடு பற்றி முதலில் ஆய்வு செய்யப்படுகின்றது. அதன் பின்னர் அமுக்கக்குழுக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையிலான தொடர் புகளும் வேறுபாடுகளும் ஆய்வு செய்யப்படுவதுடன் இதன் வகைப் பாடுகள் பற்றியும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதனடிப் படையிலேயே தற்கால ஜனநாயகத்தில் அமுக்கக்குழுக்கள் பெறும் முக்கியத்துவம் பற்றியும் ஆய்வு செய்யப்படுகின்றது. இதனை மேலும் சிறப்பாக்கும் முகமாக அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளின் அமுக்கக்குழுக்களின் நடைமுறைப்பிரயோகம் பற்றியும் ஆய்வு செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலின் கடைசிப்பகுதி பொதுசன அபிப்பிராயம் பற்றிய தாகும். சாதாரண மக்களுக்கு அரசியல் ரீதியான விழிப்புணர்வூட்டும் இவ்விடயம் பல முகவராண்மைகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவதும், ஜனநாயகத்தில் இப்பொதுசன அபிப்பிராயம் பெறும் முக்கியத்துவம் விளக்கப்படுவதும் சிறந்ததாகும்.

மொத்தத்தில் இந்நூலின் உள்ளடக்கமானது ஜனநாயக விழுமி யங்களின் கூட்டுச் செயற்பாட்டினை எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது. இதனை வாசகர் மத்தியில் எந்தளவு எடுத்துச் சென்றுள்ளேன் என்பது உங்களுடைய விமர்சனங்களிலேயே தங்கியுள்ளது. எனவே இந்நூலைப் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை நன்றியுடன் எதிர்பார்ப்பதுடன் வழமைபோல் வாசகர்கள் எனது நூல்களுக்கு காட்டும் பேராதர வினையும் எதிர்பார்க்கின்றேன்.

**வேலுப்பிள்ளை குணரத்தினம்**
முதுநிலை விரிவுரையாளர்
சமூக விஞ்ஞானத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அரசியற் கட்சிகள், அமுக்கக்குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் ஆகிய அரசறிவியற் பாடப்பரப்பில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை உள்ளடக்கிய நூலினை கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. வே.குணரத்தினம் அவர்கள் ஆக்கியுள்ளார். இத்தகையதோர் நூலிற்கு அணிந்துரை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நூலாசிரியரால் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்த மூன்று விடயங்களும் ஒரு நாட்டில் ஜனநாயகத்தின் உயிர் நாடிகளாக விளங்குகின்றன எனின் மிகையாகாது. இவை ஆட்சியாளரை தீர்மானிப்பதிலும், அரசாங்கத்தின் உறுதித்தன்மை, பலம், பலவீனம், கட்சி பற்றிய பொதுமதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் துணையாகக் கொள்ளப்படுகின்றன. மேலும் மக்களது அரசியல் பங்கு பற்றுதலினை (Political Participation) அரசியல் சமூகமயமாக்கத்திலும் (Political Socialization) காத்திரமான பங்கினை ஆற்றி வருவது வெளிப்படையாகவுள்ளது.

இந்நூலானது பிரதானமான விடயங்களை மூன்று அத்தியாயங்களாக பகுத்துள்ளதுடன் ஒவ்வோர் அத்தியாயங்களிலும் எளிமையான முறையில் உப பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்கள் இலகுவாக புரிந்து கொள்ளத்தக்க வகையில் தனித்தனியாக ஒவ்வொரு விடயங்களும் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளதுடன் அவை அறிமுகம், வரையறை, வகைப்பாடு, முக்கியத்துவம், குறைநிறைகள். (Merits and Demerits) ஆகிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளன.

அரசியற் கட்சிகள், அமுக்கக்குழுக்கள் மற்றும் பொதுசன அபிப்பிராயம் தொடர்பாக நூலாசிரியர் கோட்பாட்டு ரீதியான சில விடயங்களை விளக்க முற்பட்டுள்ளதுடன் பல்வேறு நாடுகளது நடைமுறை விடயங்களையும் அவற்றின் அனுபவங்களின் வாயிலாக தெளிவுபடுத்தியுள்ளார். இவர் எடுத்துக்கொண்ட நூலின் தலைப்பு உண்மையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தனித்தனி நூல்களாக வரையக் கூடிய விடயங்களை ஒரே நூலில் தருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நூலானது அரசறி வியல் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது பல மட்டங்களிலும் ஆர்வம் உடையோருக்கும் பயனுடையதாக அமையும் என்பது எனது எண்ணமாகும். தெரிவு செய்யப்பட்ட நாடுகளிலும் இம் மூன்று விடயங் களையும் பிரயோகித்து, நடைமுறைசார் விடயங்களையும் ஆய்வு செய்வது சிறப்புக்குரியது.

அரசறிவியலைப் பொறுத்தமட்டில் நூல்களை தமிழில் வெளி யிடுவது இன்றைய காலத்தின் தேவையாகும். தமது தாய் மொழியில் கல்வி பயிலும் மாணவ சமூகத்தினர் எதிர்நோக்கும் நெருக்கடிகளை கருத்திற்கொண்டு மேலும் பல தமிழ் நூல்களை வெளியிடுவது நூலாசிரியரின் கடமையாகும். இத்தகையதோர் பின்புலத்தில் திரு.வே. குணரத்தினத்தின் பணி அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகின்றது. மேலும் இப்பணியானது வாசகர்களுக்கு மட்டு மல்லாது இவருடைய உயர்வுக்கும் ஓர் ஏணிப்படியாக அமைகின்றது.

இவர் தனது துறை சார்ந்த நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதேவேளையில் அதற்கு ஈடுகொடுக்கத்தக்க வகையில் கல்விப்பணி யிலும் ஆர்வம், ஈடுபாடு உடையவர் என்பதற்கு சான்றாக இந்நூல் அமைகின்றது. இவர் மேலும் பல நூல்களை எமது கல்வியுலகத்துக்கு தந்தும் மென்மேலும் சிறந்த பணியினைத் தொடர எனது மனமார்ந்த நல்லாசிகள் உரித்தாகட்டும்.

**கலாநிதி. க. இரகுநாதன்**
அரசறிவியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னுரை v

அணிந்துரை vii


## அத்தியாயம் - I

## அரசியல் கட்சிகள்


1. அறிமுகம், தோற்றம், முக்கியத்துவம் 1
2. அரசியல் கட்சிகள் தோன்றுவதற்கான காரணிகள் 6
3. அரசியல் கட்சிகளின் ஒழுங்கமைப்பு 8
4. ஒரு சிறந்த ஜனநாயக கட்சிக்குரிய பண்புகள் 13
5. அரசியல் கட்சிகளின் பணிகள் 15
6. அரசியல் கட்சிகளின் சிறப்புக்கள் 19
7. அரசியல் கட்சிகளின் பலவீனங்கள் 20
8. அரசியல் கட்சி முறைமைகள் 21
   - அ. ஒரு கட்சி முறை - 22
   - ஆ. இரு கட்சி முறை - 25
   - இ. பல கட்சி முறை - 27
9. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் அரசியல் கட்சிகள் 28
   - அ. பிரித்தானியா - 28
   - ஆ. அமெரிக்கா - 36
   - இ. இந்தியா - 44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - II

## அமுக்கக்குழுக்கள்

1. அறிமுகம் 62
2. குழுக்கோட்பாடுகள் 63
3. அமுக்கக்குழுக்கள் - அறிமுகமும் முக்கியத்துவமும் 66
4. அமுக்கக்குழுக்களும் அரசியல்கட்சிகளும் 68
5. அமுக்கக்குழுக்களின் வகைப்பாடுகள் 69
6. தற்கால அரசுகளில் அமுக்கக்குழுக்களின் பங்களிப்பு 73
   அ. சட்டமன்றம் - 73
   ஆ. நிருவாகத்துறை - 74
   இ. நீதித்துறை - 75
7. பணித்துறை ஆட்சியில் அமுக்கக்குழுக்களின் பங்களிப்பு 75
8. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் அமுக்கக்குழுக்கள் 77
   அ. பிரித்தானியா - 77
   ஆ. அமெரிக்கா - 79
   இ. பிரான்ஸ் - 81
   ஈ. இலங்கை - 82

## அத்தியாயம் - III

## பொதுசன அபிப்பிராயம்

1. அறிமுகம் 85
2. பொதுசன அபிப்பிராயம் - பொருள் விளக்கம் 87
3. பொதுசன அபிப்பிராயத்தின் முக்கியத்துவம் 88
4. பொதுசன அபிப்பிராயமும் ஜனநாயகமும் 88
5. பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் முகவர்கள் 91
   அ. வெகுசனத் தொடர்பு சாதனங்களும் அச்சு ஊடகமும் - 91
   ஆ. பிரச்சாரம் - 95
   இ. அரசியல் கட்சிகள் - 96
   ஈ. கல்வி - 98
   உ. சட்டவாக்க சபைகள் - 99

உசாத்துணை நூல்கள் 102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 1

# அரசியல் கட்சிகள்

## (Political Parties)

### 1. அறிமுகம் : தோற்றம், முக்கியத்துவம்

ஜனநாயக அரசுகளின் சிறப்பான அரசியல் செயல்பாட்டிற்கு அரசியல் கட்சிகள் இன்றியமையாதவைகளாகும். இவை ஆரம்பத்தில் இருந்தே ஜனநாயக பிரதிநிதித்துவ ஆட்சி முறையில் பெரும் பங்கு வகிக்கின்றது. இதன்படி அரசியல் கட்சி என்பது ஒழுங்கமைக்கப்பட்ட சமூக நிறுவனங்களாக விளங்கி, தேர்தல் மூலமாக ஆட்சியாளர்களைத் தெரிவு செய்து அரசாங்கத்தை நடாத்தும் அமைப்புக்களாகும் எனக்கூறலாம்.

அரசியல் கட்சிகள் என்ற பதம் 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் ஏற்பட்ட பிரதிநிதித்துவ ஒழுங்கமைப்புடனும், வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்டதில் இருந்தும் தோற்றம் பெற்றது. ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட கட்சிகள் தேர்தல் போட்டியினூடாக பொதுப் பதவிகளை கைப்பற்றும் நோக்கத்துடன் தோற்றம் பெற்ற அமைப்புக்களையே இப்பதம் குறிக்கின்றது. இங்கு கட்சி என்பது 'partitire' என்ற பிரஞ்சு மொழிப்பதத்திலிருந்து தோன்றிய ஒன்றாக காணப்படுவதுடன் இச்சொல் 'பிரித்தல்' என்ற பதத்தைக் குறித்து நிற்கின்றது. அதே சமயம் 'Partoger' என்ற லத்தீன் பதத்துடனும் தொடர்புபட்டு கட்சி என்பது 'பங்குகொள்ளல்' என்ற பொருளையும் தருகிறது. இவ்வாறு பொருள்படும் கட்சியானது பிரித்தானிய பாராளுமன்ற ஆட்சியின் தோற்றத்தின் போதே ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இந்த வகையில் அரசியல் கட்சி என்ற பதத்திற்கு நாம் வரைவிலக்கணம் கூற முற்படும் போது பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதாவது பொதுவான வரைவிலக்கணத்தை வரையறுப்பதில் அரசியல் அறிஞர்களும் இத்தகைய நிலைமையையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இருக்கின்றனர். காரணம் என்னவெனில் ஒவ்வொரு நாட்டினதும் வரலாறு, அரசியல், பொருளாதாரம், சமூகசூழ்நிலை, மக்களின் மனநிலை போன்ற வேறுபட்ட அம்சங்களிலேயே கட்சிகள் தோன்றுகின்றன. அதனால் அந்தந்த நாட்டின் சூழ்நிலை பற்றியே அரசியல் அறிஞர்கள் தமது கருத்தை முன்வைத்தனர்.

அந்தவகையில் எட்மன்ட் பேர்க், பேராசிரியர் செயிட், சிக்மன் நியூமன், ஸ்ரீவன் யூகொக், மொறீஸ் டுவேஜர் போன்ற அறிஞர்கள் முக்கியமானவர்களாக உள்ளனர். இங்கு ஸ்ரீவன் யூகொக் கட்சி பற்றிக் குறிப்பிடுகையில் 'ஓர் இணைந்த அரசியல் சமூகமாக செயற்படுவதும், ஓரளவுக்கு நெறிப்படுத்தப்பட்டதுமான ஓர் அமைப்பு என்றும் அது குடிமக்களால் உருவாக்கப்படுமேயானால் அதுவே அரசியல் கட்சி' என்று குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் சைட் கூறுகையில் 'அரசியல் கட்சிகள் ஓர் அமைப்பாகவும் இந்த அமைப்பு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முயலுகின்றது என்றும் ஓர் அரசாங்கத்தை அமைக்கவும் அரசாங்கத்தில் உள்ள நிர்வாகிகளை கட்டுப்படுத்தவும் கட்சிகள் எத்தனிக்கின்றன' என்றார்.

டிஸ்ரயலி என்ற அறிஞர் கூறுகையில் 'அரசியல் கட்சிகளை, கொள்கைகளை அமுல்படுத்தும் ஓர் அமைப்பாக' கூறியுள்ளார். கட்சிகள், கொள்கைகள், சித்தாந்தங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய அமைப்புக்கள் என்ற கருத்தும் கூறப்பட்டது. எனவே அரசியல் கட்சிகள் என்பது ஓர் அரசியல் அலகாக ஒன்றுபட்டு செயற்படும் குடிமக்களை உள்ளடக்கிய ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட குழு எனலாம்.

அரசியல் கட்சிகள் பற்றிய ஆய்வு 1951 க்கு பின்னரே அரசியலில் முக்கிய பங்கு வகித்தது எனலாம். குறிப்பாக மொறிஸ் டுவேஜர் மேற்கொண்ட கட்சிகள் பற்றிய ஆய்வு, கட்சி பற்றிய கோட்பாடு ரீதியான அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தது எனலாம். மொறீஸ் டுவேஜர் என்ற பிரான்சிய அறிஞரின் கருத்துப்படி கட்சிகள் பொதுமக்களை அரசியல் முறையோடு கொண்டு செல்ல உதவும் சாதனம் என்றார். ஆனால் அண்மைக்காலம்வரை அரசியல் ஆய்வு விடயத்தில் கூடியளவு கவனத்திற்கு உட்படுத்தப்படாத இவ் எண்ணக்கரு 1951 இன் பின் ஆய்வுக்குரிய விடயமாக வளர்த்தெடுக்கப்பட்டது. இதற்கு அடித்தளமிட்டவர் மொறீஸ் டுவேஜரேயாவார். இவரின் கருத்துப்படியும் ஏனைய சிந்தனையாளர்களின் கருத்துப்படியும் சிக்மன் நியூமன் என்பவர் கருத்தை வெளியிட்டார். அதாவது காலம் கடந்து இறுதியாக எமது ஆய்வினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்து அரசியல் கட்சிகள் மத்திமமான ஒரு கருத்தினைப் பெறத் தொடங்கியுள்ளது என்றார். இக்கருத்தைப் பொறுத்தவரையில் நவீன அரசியல் கருத்துக்களின் புவியீர்ப்பு மையமாகவும் அரசியல் ஆய்வின் பிரதான பகுதியாகவும் அரசியற்கட்சிகள் அமைந்துள்ளன. அரசியல் கட்சிகள் ஊடாக வேறுபட்ட இலக்குகள், அவற்றில் மாறிவரும் அம்சங்கள் என்பன வெளிக்கொண்டு வரலாம் என வாதிட்டார்.

வரலாற்று ரீதியாக அரசியல் கட்சிகளுடைய தோற்றமானது நவீன வாக்காளர் தொகுதியுடன் தோற்றம் பெற்ற ஒன்றாக காணப்படு கின்றது. இவ்வாறான வாக்காளர் தொகுதியினை சட்டமன்றத்தில் பிரதி நிதித்துவப்படுத்துவதன் மூலம் அரசியல் கட்சிகள் பெருமளவிலான மக்களை ஒன்றிணைத்த வகையில் மிகப்பெரும் அமைப்புக்களாக மாறியுள்ளன. இவ்வரசியல்கட்சிகள் தங்களது சொந்த நிறுவனங்களை அமைத்து விருத்தி செய்கின்றன.

இந்த வகையில் அரசியல் கட்சிகளின் தோற்றம் ஐரோப்பா விலேயே இருந்து ஆரம்பமாகின்றது. பிரித்தானியாவில் 200, 300 வருடங்களாக முடியாட்சியில் ஏற்பட்ட மோதலினால் அதாவது ஜன நாயகப் போராட்டத்தின் விளைவாக அரசியல் கட்சிகள் தோன்றின. மக்கள் தமது உரிமைகளை பாராளுமன்றத்தினூடாக பெற முயன்ற போது இம் முடியாட்சிக்கு எதிரான போராட்டம் வளர்ந்தது. அதாவது முடியாட்சியில் மக்கள் மீது வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது. இத னைத் தொடர்ந்தும் மக்கள் வரி செலுத்த விரும்பாததுடன் இவ்வாறு வரி செலுத்த வேண்டுமாயின் அரசியல் ஆலோசகர்கள் சிலரை நியமிக்க வேண்டும் என்றனர். இதனைத் தொடர்ந்தே அரசியல் கட்சிகள் தோன்றின. அத்துடன் இக்கட்சிகள் மக்களின் பிரதிநிதித்துவத்தை எற்படுத்த தோன்றியது. அது மட்டுமல்லாது தேர்தல் மூலமான பிரதி நிதித்துவ தேர்வும் உருவாக்கப்பட்டது. ஆயினும் இக்கட்சிகள் கோட் பாடாக உருவாக பல காலம் சென்றது.

அடுத்து ஐக்கிய அமெரிக்காவை நோக்கின் பிரித்தானிய அனுப வத்தை மையமாகக் கொண்டு இரு கட்சிகள் தோன்றி செயற்பட்டு இருக்கின்றது என்றும் அமெரிக்காவின் தீர்மானத்தின் அடிப்படை யிலேயே கட்சிகள் தோற்றம் பெற்றது என்பதும் சுட்டிக்காட்ட வேண்டி யுள்ளது. பிரித்தானிய குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தின் பின் கட்சிகள் தோன்றின. ஆயினும் 3ம் மண்டல நாடுகளில் கட்சிகளின் தோற்றமானது ஒரு வரலாற்று நிகழ்வாக அன்றி பிரித்தானியாவின் வழி நடத்தலா லேயே பெரும்பாலும் தோற்றம் கண்டது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ம் மண்டல நாடுகள் தமது சமூக, பொருளாதார விடயங்களுக்கும், பல்லின சமூக சூழ்நிலைக்கும் ஏற்பவும் கட்சிகளின் தோற்றம், வளர்ச்சி மாற்றம் கண்டது. கட்சி உருவாக்கமானது இன்னுமொரு புதிய முறையில் ஆய்வுக்குட்படுத்தப்படும் வகையில் மாற்றம் கண்டுள்ளது. இங்கு அரசியல் கட்சிகள் என்பதற்கு பொதுவானதொரு விளக்கத்தை கூற முற்படின் நாட்டின் பெரும்பாலும் ஒரே விதமான அபிப்பிராயங்களைக் கொண்ட மக்களின் இணைப்பு என்றும் குறிப்பிட்ட இலக்குகளை கைப்பற்றும் அமைப்பு என்றும் மக்களை கூட்டாக இணைத்து செயலாற்றத் தூண்டும் கருவி என்றும் ஆள்வதற்குரிய திட்டங்களையும் கொள்கைகளையும் தேர்ந்தெடுத்தல் அபிப்பிராயத்தை உருவாக்குதல் செயற்படுத்துதல் போன்ற பண்புகளைக் கொண்ட அமைப்பு என்றும் கூறலாம்.

ஜனநாயக தன்மயுடைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அரசியல் கட்சிகள் இன்றியமையாதவைகளாக உள்ளன. நிர்வாக சக்கரம் தொடர்ந்து இயங்குவதற்கு தேவையான உந்து சக்தியினை இவை வழங்குகின்றன. மக் ஐவர் (Migiver) என்பவர் தன்னுடைய கருத்தில் 'அரசியல் கட்சிகள் இல்லாமல் கொள்கை அளவில் ஒன்றிணைவு இருக்க முடியாது, பாராளுமன்ற தேர்தலுக்கான சரியான செயன்முறை இருக்காது' என்று குறிப்பிடுகின்றார்.

அரசியல் கட்சிகளானவை அரசாங்கத்தினை அமைப்பதனை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன. இவை நிரந்தரமான அமைப்புக்களாக இருக்கின்றன. இவற்றினுடைய அடிப்படையான செயற்பாடானது தேர்தலில் வெற்றியடைவதற்கு உகந்தவகையில் குறித்த வாக்காளர் தொகுதியுடன் செல்வாக்கினை பேணிக்கொள்வதாகும். இதன் காரணத்தினால் ஜனநாயக முறையில், சிறந்த முறையில் செயற்பட வேண்டும் என்பதற்காக அரசியல் கட்சிகள் தம்மை தொடர்ச்சியாக இயக்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

அரசியல் கட்சிகள் எப்போதும் தமது தனித்துவமான சித்தாந்தங்களையும் கோட்பாடுகளையும் பிரச்சாரம் செய்கின்றன. இதன் மூலம் சமூகம் ஒன்று உருவாகுவதற்கு அரசியல் கட்சிகள் பிரதான பங்கு வகிக்கின்றன. மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிக்கொணரவும் சிறந்த சாதனமாக அரசியல் கட்சிகளே விளங்குகின்றன என்று சிக்மண்ட் நியூமன் என்பவர் குறிப்பிடுகின்றார்.

மேலும் பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதிலும் அரசியல் கட்சிகள் உந்து சக்தியாக செயற்படுகின்றன. அத்துடன் ஜனநாயகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் செயற்படு தன்மையை ஒன்றிணைக்கும் முகவராகவும் அரசியல் கட்சிகள் விளங்குகின்றன. மேலும் பொதுமக்களுக்கும் அரசாங்கத் தினுடைய பிரதிநிதித்துவ குழுக்களுக்கும் இடையில் இன்றியமையாத தொடர்பினை ஏற்படுத்தும் சாதனங்களாகவும் உள்ளன. இதன் ஊடாக தனிநபர்களும் குழுக்களும் அரசியல் அதிகாரத்தினை கைப்பற்றுவ தற்கும் அவ்வதிகாரங்களை பயன்படுத்தவும் செய்கின்றனர்.

அரசியல் கட்சிகள் மக்களிடையே அரசியல் அறிவினை விருத்தி செய்கின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றன. தமது பிரசாரத்தின் மூலமும் செயற்பாடுகள் மூலமாகவும் அரசியல் கல்வியை ஊட்டுகின்றன. கட்சிகள் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பதுடன் பிரசாரக்கூட்டங்கள் கருத்தரங்குகள் மூலம் சாதாரண மக்களின் கல்வித்தரத்தினை உயர்த்து கின்றன. அவை உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நடைமுறைகளை மக்கள் முன் வைக்கின்றன. இவற்றில் பங்கு கொள்ளும் சாதாரண மக்களுடைய அறிவும் விருத்தியடைகின்றது.

அரசியலுக்கு ஆட்சேர்ப்பு விடயத்தில் கட்சியின் பங்களிப்பு அவசியமானது. அதாவது சமூகத்தில் செல்வாக்கு, தகைமை மற்றும் ஆளுமை உள்ளவர்களை அரசியலில் ஈடுபடுத்துவதற்கு கட்சிகளே முக்கிய பங்காற்றுகின்றன. இந்த அரசியல் ஆட்சேர்ப்பு தேர்தல் காலங்களில் மிகவும் தீவிரமாக நடைபெறுகின்றது. ஆர்வம் உள்ள இளைஞர்களை இணைத்து அரசியல் தலைமைத்துவ பணிகளை ஏற்றுக்கொள்ளச் செய்யும் மிக உன்னதமான பணியினை அரசியல் கட்சிகள் மேற்கொள்கின்றன.

மேலும் பாராளுமன்ற அரசியல் முறைகளை பின்பற்றும் நாடு களில் அரசியல் கட்சிகள் இன்றியமையாதவைகள் ஆகும். அதாவது பொதுத்தேர்தலில் பெரும்பான்மையான ஆசனங்களைப் பெறும் கட்சி ஆட்சி அமைப்பதும், ஏனைய கட்சிகள் எதிர்க்கட்சியாக செயற்படு வதும், ஆளும் கட்சியின் செயற்பாடுகளை எதிர்க்கட்சி கண்டித்தும் ஊக்குவித்தும் செயற்படுகின்ற தன்மையானது சிறந்த ஜனநாயக அரசியல் முறையினை ஏற்படுத்த உதவுகின்றது எனலாம்.

அரசியல் கட்சிகளின் இன்றியமையாத பங்களிப்பாக அவை தேசிய உணர்வை ஏற்படுத்துகின்ற ஒன்று என்ற வாதமும் முன்வைக் கப்படுகின்றது. அதாவது அரசியல் கட்சிகள் மக்களை ஒன்றிணைத்து மக்களின் தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்து மக்களை ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் உணர்வு ரீதியாக ஒன்றுபடுத்தும் சாதனங்களா கவும் செயற்படுகின்றன. பல வளர்முக நாடுகளில் மக்களின் போராட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகளை ஒன்றிணைத்து தேசிய சமுதாயத்தை உருவாக்க அரசியல் கட்சிகள் பாடுபடுகின்றன. எனவே ஜனநாயகமும் தேர்தல்களும் ஒன்றிணைந்த மனித சமூகத்தில் அரசியல் கட்சிகள் மிகச் சிறந்த பங்களிப்பினைச் செய்கின்றன.

## 2. அரசியல் கட்சிகள் தோன்றுவதற்கான காரணிகள்

காலத்திற்குக் காலம் சூழ்நிலைகளுக்கும் மாறுபட்ட தன்மைகளுக்கும் ஏற்ற வகையில் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன. அரசியல் கட்சிகளின் தோற்றத்திற்கு பல்வேறு காரணிகள் பங்களிப்புச் செய் துள்ளன. இந்த வகையில் பின்வரும் காரணிகளை அடையாளப்படுத் தலாம்:

1. அடிப்படை உரிமை, சுதந்திரம் : அதாவது ஒரு நாட்டில் அடிப் படை உரிமைகள் சுதந்திரங்கள் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் வேளையில் அங்கு அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுகின்றன. அதேவேளை இவ்வடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள் சில பிரிவினருக்கு மறுக்கப்படுகின்ற வேளையிலும் தமது உரிமை கள், சுதந்திரத்தை பேணவும் சில அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுகின்றன.

2. பல்லின சமூக அமைப்பு: ஒரு நாடு பல்லின சமூக கட்டமைப் பைக் கொண்டு காணப்படுமாயின் அத்தந்த சமூகங்களுக்கு வெவ்வேறு வகையான தேவைகள், விருப்பங்கள், நலன்கள் காணப்படும். இவற்றினைப் பூர்த்தி செய்ய வெவ்வேறு வகை யான கட்சிகள் தோற்றம் பெறுகின்றன.

3. பொருளாதாரக்காரணிகள்: கட்சிகளின் தோற்றத்திற்கு பொருளா தாரக்காரணிகளும் முக்கிய பங்களிப்பு செய்கின்றன. இது தொடர் பில் ஆதர் ஹல்கொம் (Arthur Halcombe) குறிப்பிடும்போது தேசிய கட்சிகளானவை நிலையற்ற உந்துதல்களினாலேயோ தற்காலிக தேவைகளினாலோ பிரிவு சார்ந்த ஆர்வங்கள் மீது நிறுவப்பட் டிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலான பொருளாதாரப் பண்புகளின் மீது கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். உடமைகளைப் பெற்றிருப்பதில் வேறுபாடு, பொருளாதாரம் தொடர்பான பார்வை நிலை, பொருளாதாரநிலை என்பன அரசியற்கட்சிகளின் தோற்றத்திற்குப்பின்னால் மிகவும் உயர்வாக தாக்கம் செலுத்தும் காரணிகளாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சூழலின் தாக்கங்கள்: மனிதர்கள் தங்களுடைய மதம், அரசியல் என்பவற்றினை வாரிசான முறையில் பெறுகின்றனர் எனக் குறிப்பிடப்படுகின்றது. கட்சியினுடைய தோற்றம் என்பது மனிதன் வாழ்கின்ற சமுதாயத்தினுடைய மக்களின் சூழ்நிலை யின், குடும்ப அமைப்பின் அழுத்தம் காரணமாகவும் இருக் கலாம். சில அரசியல் கட்சிகள் குடும்ப செல்வாக்கின் காரண மாகவும் தோற்றம் பெறலாம். சொத்துக்களினைப்போன்று கட்சி விசுவாசமும் ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலை முறைக்கு மாற்றப்படுகின்றது.

5. மதம் மற்றும் வகுப்புவாத உணர்வு : அரசியல் கட்சிகள் சமய ரீதியான ஒற்றுமைத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டும் தோற்றுவிக்கப்படலாம். மேலைத்தேய நாடுகளில் சமய வகுப்பு சார் உணர்வுகள் அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளில் இருந்து விலக்கப்பட்டவைகளாக உள்ளன. ஆனால் இந்தியாவில் அரசியல் கட்சிகள், சமயக்குழுக்களினை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இது தேசிய வாத சக்தி யினை தோற்கடித்து தங்களது இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தினைக் கொண்டதாக உள்ளது. இன்று இந்தியாவானது மதச் சார்பற்ற நாடாக இருந்த போதிலும் பாரதீய ஜனதாகட்சி, முஸ்லிம் லீக் உட்பட மற்றும் பல கட்சிகள் இன்றும் தமது வகுப்பு சார் இலட்சியத்துடனேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. வகுப்பு வாத தன்மையுடன் இயங்கிக் கொண்டிருக்கின்ற கட்சிகள் தேசிய ஒருமைப்பாட்டினை கட்டி யமைக்கும் செயன்முறைக்கு தடையாக அமைவதுடன் பாராளு மன்றத்தில் முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத் துச் செல்வதிலும் தடைகளினை ஏற்படுத்துகின்றன. இத்தன் மையை இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகளில் பொதுவாக காணக்கூடியதாக உள்ளது.

6. கொள்கை ரீதியானது: கம்யூனிசம், முதலாளித்துவம், கலப்பு என்ற வகையில் கட்சிகள் தோன்றலாம். இவை வலதுசாரி, இடதுசாரி கட்சிகளாக அமையும்.

7. சமூகக் காரணிகள்: இலங்கையின் வரலாற்றை எடுத்தால் பிரித் தானியாவில் படித்து பட்டம் பெற்றவர்களால்தான் இங்கு கட்சி உருவாக்கப்பட்டது. அதாவது பரம்பரை ஆதிக்கம், கல்வி, பணம் என்பனவும் கட்சியைத் தோற்றுவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வரலாறு: பிரித்தானியாவில் கட்சியைத் தோற்றுவித்தது வரலாறு தான். அதுபோல் தான் இந்தியாவிலும் நேரு, காந்தி இவர்களின் வரலாறுதான் இந்திய காங்கிரஸ் தோன்றக் காரணம்.

9. பிரதேச வேறுபாடுகள்: ஒரு பிரதேசம் தாழ்ந்து அல்லது அடக்கு முறைக்கு உட்பட்டாலோ அது கட்சிகளை தோற்றுவிக்கும். (கண்டி, வடக்கு, கிழக்கு) 1990 களில் இருந்து வடகிழக்கு தமிழ் ஆயுதக்குழுக்கள் பல அரசியற் கட்சிகளாக மாறின.

10. தலைமைத்துவத்துக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள்: ஒரு கட்சிக்குள் தலைமைத்துவத்துள் ஏற்படுகின்ற முரண்பாடுகளும் கட்சிகளைத் தோற்றுவிக்கலாம். ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பிரமுகராக இருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா கட்சியின் தலைவர் டி.எஸ். சேனநாயக்காவுடன் தலைமைத்துவ முரண்பாடு கொண்டு கட்சியில் இருந்து வெளியேறி 1951 இல் தனது தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை தோற்று வித்தமையினைக் குறிப்பிடலாம்.

## 3. அரசியல் கட்சிளின் ஒழுங்கமைப்பு

ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் கட்சி பற்றி ஒரு தெளிவற்ற கருத்தே காணப்பட்டது. அடக்கி ஒடுக்கப்பட்டவர்களின் குழுக்களில் இருந்து தான் கட்சிகள் தோன்றுகின்றன. பணம் படைத்தவர்களின் தலைமைத்துவம் இவர்களை பாதிப்படையச் செய்தது, இதனால் கட்சி என்பதை மக்கள் வெறுக்கப்பட்ட ஒன்றாகவே எண்ணி இருந்தனர்.

கட்சிகளின் ஒழுங்கமைப்பு என்பது நாடளாவிய ரீதியில் அதன் செயற்பாடு தேவைப்படும் போது இதன் ஒழுங்கமைப்பு அவசியம். இது இருந்தால் தான் கட்சியில் அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்வதற்கும் கொள்கை தீர்மானங்களை எடுக்கவும் சட்ட திட்டங்களை உருவாக்கி சேர்க்கவும் உறுப்பினர்களிடையே பொறுப்புணர்ச்சியை உருவாக்கவும் அதனூடாக கட்சிகள் செயற்பாடுகளை செயற்படுத்தவும் கட்சிகளின் ஒழுங்கமைப்பு அவசியம். ஆயினும் அரசியல் கட்சிகள் தொடர்பாக பொதுவான சட்டவிதிகள் கிடையாது.

அரசியல் கட்சிகளுடைய அடிப்படையான செயற்பாடானது தேர்தலில் பொதுமக்கள் அபிப்பிராயத்தினை ஒன்றிணைத்து பலப் படுத்துவதாக இருக்குமாயின் நிரந்தர தன்மையும், அமைப்பு முறையும் கட்சி முறைக்குரிய முன்நிபந்தனைகளாக உள்ளன. கட்சிகள் பூரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கமைக்கப்படாதவைகளாக இருப்பின் அவை வெறுமைத்தன்மை யானவையாகவும் வடிவம் அற்றவையாகவும் இயலுமை அற்றவை களாகவும் காணப்படும். எனினும் கட்சிகள் நிரந்தரமானவைகளாக இருந்தால் மட்டுமே அவை முறையாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்க முடியும். குறுகிய கால வாழ்நாளினை உடைய கட்சிகளும் உள்ளன. ஆனால் உண்மையிலேயே இவை கட்சிகள் அல்ல. மாறாக வாக் காளர்கள் மீது உறுதியான செல்வாக்கு, தெளிவான கொள்கைகள் இல்லாத முறையாக ஒன்றிணைக்கப்படாத குழுக்களேயாகும். இவற்றி னுடைய ஆயுள் குறுகியதாகவும், நிச்சயமற்றதாகவும் இருப்பதனால் இவை அரிதாகவே நிரந்தரமான விசுவாசத்தினையும் பெற்றுக்கொள் கின்றன. இவை அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதும் இல்லை. பதிலாக மதிநுட்பம் மிக்க அரசியல் வாதிகளுடைய கைக்கருவிகளாக மாறிப்போகின்றன.

முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட கட்சியானது மொத்தத்தில் ஒரு சிறிய அரசாகவே உள்ளது. இது தன்னுடைய செயற்திறன் மிக்க உறுப் புரிமையினையும் நேர்நிலையான ஆதரவாளர்களையும் பெற்றுக் கொள்கின்றது. இவர்கள் தங்களுக்கென அலுவலக கட்டிடங்கள், பத்திரிகைகள், அச்சகங்கள், விளம்பர நிபுணர்கள், பாடல்கள், சுவ ரொட்டிகள், சுலோகங்கள், பேச்சாளர்கள், எதிர்வு கூறுபவர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளனர்.

இவ்வாறு கட்சிகள் தொடர்ச்சியான வகையில் செயலாற்று கின்றன. இத்தொடர்ச்சித் தன்மையும் அமைப்புகளுடைய நிலையான தன்மையும் செயற்பாடுகளும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த கட்சிகளில் இருந்து தற்போது உள்ள கட்சிகளை வேறுபடுத்துவதாக உள்ளது. கடந்த நூற்றாண்டில் அரைப்பகுதிக்கு முன்னர் அரசியல் கட்சிகள் குறைவாக ஒழுங்கமைக்கப்பட்டவைகளாகவும், தேர்தலுக்கு முன்னர் மந்தமான தன்மை கொண்டனவாகவும் இருந்தன. அவை தேர்தலுக்கு சற்றுமுன்பே ஆட்களையும் வளங்களையும் ஒன்றுபடுத் திக் கொள்கின்றன. தேர்தல் முடிந்த பின்னர் கலைந்தும் விடுகின்றன. ஆனால் இன்று கட்சிகள் தொடர்ச்சியான வகையில் செயற்படுகின்றன. இல்லை எனின் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி என்பது சாத்திய மற்றதாகிப் போகின்றது. மேலும் இன்றைய காலத்தில் உள்ளூராட்சி தேர்தல் மாகாண, மாநில தேர்தல்கள் என்பன இன்றியமையாததாக உள்ளன. இவை பொதுமக்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்வ தற்குரிய குறிகாட்டிகளாக உள்ளன. ஏனெனில் இத் தேர்தல் முடிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாளர்களுடைய நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இம் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டே பொதுத் தேர்தல் தொடர்பான முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் ஓர் அரசியல் கட்சியினை ஒழுங்கமைப்பதற்கு பின்வரும் ஐந்து நிபந்தனைகள் அவசியமாக உள்ளன:

1. ஓர் அரசியல் அலகாக மக்களை ஒன்றிணைக்கக்கூடிய அடிப் படைக்கொள்கைகளில் குறிப்பிடத்தக்களவு உடன்பாடு இருத்தல் வேண்டும். அவை விளக்கத்தில் மாறுபட்டவையாக இருக்கலாம். ஆனால் அவர்கள் கொள்கின்ற கொள்கைகளில் மாறுபாடுகள் இருத்தல் கூடாது. அடிப்படையான விடயங்களில் உடன்பாடு இல்லை எனின் அவர்கள் ஒருவர் மற்றவருடன் இணைந்து செயற்படவும் அல்லது தங்களுடைய அரசியல் இலக்குகளை அடையவோ முடியாது.

2. ஆண்களதும் பெண்களதும் ஒத்த பொதுநோக்குகள் காரணமாக ஒழுங்கமைக்கப்பட்டவைகளாக இருக்க வேண்டும். சிறப்பான ஒழுங்கமைப்பு இல்லாமல் மக்கள் ஒழுங்கற்ற ஒரு நிலையில் சேர்கின்றனர். இது அவர்கள் தாங்கள் என்ன விடயத்தில் ஒன்று படுகின்றனர் என்பதனை தீர்மானிப்பதில் சாத்தியமற்ற தன்மை யினை உண்டாக்குகின்றது.

3. தமது ஆதரவை தேர்தல் களத்தில் வென்றெடுக்கும் பொருட்டு சகல சாத்தியமான வழிகளையும் பேணும் பொருட்டும் தெளி வான விசேடமான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அவர்கள் ஒருங் கமைப்பது அவசியம்.

4. அரசியல் யாப்பு வழிகளின் ஊடே தனது கொள்கை நிறை வேற்றங்களை ஓர் அரசியல் கட்சி செய்துகொள்ள வேண்டும். வாக்குப்பெட்டியே அரசியல் கட்சிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றது. அரசியல் யாப்பற்ற முறைகளை நாடும் எந்தவொரு அமைப்பையும் ஒரு கட்சியாக நாம் பாக்க முடியாது.

5. அனைத்து அரசியல் கட்சிகளும் தேசியநலனை உயர்த்துவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். இதனை பேர்க் (Burke) என்பவர் அரசியல் கட்சி என்பது ஒன்றிணைந்த மனிதர்களுடைய ஓர் அமைப்பு அது அவர்களது ஒன்றிணைந்த முயற்சியினால் தேசிய நலனை உயர்த்துவதற்காக தங்களிடையே உடன்பட்டுக்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கொள்கைகளினை அடிப்படையாகக் கொண்டுள்ளது என வரையறை செய்கின்றார்.

கட்சி அமைப்பு என்பதை பொதுவாக பார்க்கும் போது மொறிஸ் டுவேஜர் எனும் அறிஞரே முதன் முதல் கருத்து தெரிவித்தார். கட்சி அமைப்பை அவர் பின்வருமாறு நான்கு வகையாக அடையாளம் காண்கிறார்:

1. குழு அமைப்பு
2. கிளை அமைப்பு
3. கள அமைப்பு
4. இராணுவ அமைப்பு

குழு (Group) அமைப்பு எனும் போது தனித்து ஒரு குழுவினரின் செல்வாக்கு மட்டுமே காணப்படும். ஏனையவர்களின் குழுக்கள், கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் பங்களிப்பு என்பது இங்கு மறுக்கப்பட்ட தாகவே காணப்படும்.

கிளை அமைப்பு (Branch)இங்கு பிரதேச ரீதியான தொடர்புகள் காணப்படும். கொள்கை உருவாக்கத்தில் அமுலாக்குவதில் மத்திய மையத்துடன் தொடர்பே காணப்படும்.

கள அமைப்பு (Cell) இது ஓர் இறுக்கமான அமைப்பாக காணப்படும். இது சோசலிச சமூகத்திலேயே குறிப்பாக முன்னைய சோவியத் யூனியனில் இது தேவைப்பாடாக காணப்பட்டது. இவர்கள் தேர்தல் மூலமான வெற்றியை அவசியப்படுத்தவில்லை. தங்கள் கருத்துக்கள், கொள்கைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதே அவசியமாகின்றது. அவர்களது கொள்கைகளுக்கு மாறாக ஏனைய கொள்கைகள் பரவுவதை அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

இராணுவ அமைப்பு என்பதும் ஒருவகையில் இது 'Miliria' என்ற ஆங்கில பதத்தால் அழைத்தது. இது பெரும்பாலும் ஹிட்லர், முசோலினி போன்றோர்களால் பொதுவாக நடைமுறைப்படுத்தப் பட்டது. எனினும் இவ்வாறான நடைமுறைகள் இல்லை என மொறீஸ் டுவேஜர் வாதிடுவார்.

மேலும் ஒவ்வோர் அரசிலும், அரசியல் கட்சிகளானவை வேறு பட்ட வகையில் ஒழுங்கமைக்கப்பட்டவைகளாக உள்ளன. பொது வாகப்பார்க்கின்ற போது ஐரோப்பிய அரசுகளில் எல்லா அரசியல் கட்சிகளும் தங்களுடைய தலைவர்களுக்கு இடையிலான வருடாந்த கூட்டத்தில் தங்களது கொள்கைகளைத் தீர்மானிக்கவும், செயற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை மேற்கொள்ளவும் செய்கின்றன. இங்கு இடம்பெறும் விவாதங்களும் கலந்துரையாடல்களும் கட்சியின் அனைத்து தரங்களில் உள்ள உறுப்பினர்களும் தங்களது கொள்கைகளின் நிலைப்பாட்டினை உணர்ந்து கொள்வதற்கு உதவும் ஒன்றாக அமைந்துள்ளது. கட்சியின் கொள்கைகள் ஒருதடவை நிர்ணயம் செய்யப்பட்டால் கட்சியின் உறுப்பினர்கள் அதனைப் பின்பற்றும்படி கட்டாயமாக கோரப்படுகின்றனர். பிரித்தானியாவில் கட்சி ஒழுங்கு என்பது பிரத்தியேகமான வகையில் உறுதித் தன்மை கொண்டவையாக உள்ளன.

இவை தவிர ஜனநாயக, சோசலிஷ, பாஸிஸ அரசுகளில் வெவ்வேறுபட்டவகையில் கட்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். இதன்படி ஜனநாயக அரசுகளில் கட்சி ஒழுங்கமைப்புகள் திறந்தவையாகவும் பன்முகப்படுத்தப்பட்டவையாகவும் இருக்கையில் கம்யூனிச, பாஸிசக்கட்சி ஒழுங்கமைப்புக்கள் மூடப்பட்டவையாகவும் மத்தியமயப்படுத்தப்பட்டவையாகவும் இருக்கின்றன.

ஜனநாயக அரசுகளின் கட்சி ஒழுங்கமைப்பில் கட்சியின் சகல அமைப்புக்களும் பங்குபற்றும் வருடாந்த மகாநாடு முக்கியமானது. இம்மகாநாட்டிலேயே கட்சியின் கொள்கை உருவாக்கமும் தீர்மானங்களும் நிர்வாகக்குழு உறுப்பினர் தெரிவும் இடம் பெறுகின்றன. ஆனால் கட்சி மகாநாடுகள் வருடாந்த சம்பிரதாய நிகழ்ச்சிகள் என்றும் கட்சியின் பாராளுமன்றப் பிரிவே ஒழுங்கமைப்பின் சகல விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துவதாக சிலரால் சுட்டிக் காட்டப்படுகிறது. ஜனநாயக முறைகளில் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் தளர்ச்சியான ஒழுங்கமைப்பை அமெரிக்க கட்சிகள் கொண்டுள்ளன. இங்கு கட்சிகள் தேர்தல் காலங்களில் மட்டுமே உயிர்ப்புப் பெற்று செயற்படுவதனால் அவை 'தேர்தல் தொகுதிகளின் இயந்திரங்கள்' என்று வர்ணிக்கப்படுகின்றன.

ஜனநாயக அரசுகளைப் பொறுத்தவரை தமதுகட்சிப் பரிபாலனத்துக்கும், தேர்தல் செலவுகளுக்கும் சமூகத்தின் பொருளாதார, வர்த்தக அமைப்புக்கள் வழங்கும் நிதியையே நம்பியுள்ளன. மேற்கு ஜேர்மனியிலும், இந்தியாவிலும் தமது தேர்தல்செலவுகளைத் தாங்கவும் கட்சி நிதிக்கு தாராளமாக வழங்கும் வல்லவர்களுக்கே அபேட்சகர் நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இத்தகைய பணபலத்தின் தீமைகளை மட்டுப்படுத்தும் சில நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரித்தானியாவிலும் அண்மையில் இந்தியாவிலும் அபேட்சகர்கள் தேர்தலுக்குச் செலவிடும் பணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஜப்பான், இஸ்ரேல், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கட்சி பெறும் நிதியுதவிகள் திட்டவட்டமான வழிமுறைகள் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தப்படுகின்றன. மேற்கு ஜேர்மனி, ஸ்பெயின், சுவீடன் போன்ற நாடுகளில் கட்சிகளின் தேர்தல் தொகுதிபலத்துக்கமைய அரசாங்கம் மானியம் வழங்குகின்றது.

பாட்டாளிகளின் முன்னணி படை என்று வர்ணிக்கப்படும் கம்யூனிச கட்சி மிகவும் இறுக்கமான அரசியல் - இராணுவ ஒழுங்கமைப்பினைக் கொண்டுள்ளது. புரட்சி நோக்கம் கொண்ட கம்யூனிஸ்டுகள் ஒழுங்கமைப்பில் அங்கத்துவத்தை மட்டுப்படுத்தி கட்டுப்பாட்டில் வைத்திருக்க விளைகின்றனர். லெனினின் ஜனநாயக மத்திய வாதம் (Democratic Centralism) என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே கம்யூனிஸ்டுக்கள் கட்சியை ஒழுங்கமைக்கின்றனர். ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான ஜனநாயகத்தையும், மத்திய முரணான ஜனநாயகத்தையும், மத்திய மயமாக்கத்தையும் வலியுறுத்தும் இந்த விசித்திரமான தத்துவத்தின் நடைமுறையினை பார்க்கின்றபோது ஜனநாயகம் என்பதே பெயரளவில் இருக்க மத்திய மயமாக்கம் என்பதே முனைப்படைந்து காணப்படுகின்றது. மத்திய குழுவின் செல்வாக்கு மிக்க சில அங்கத்தவர்களை உள்ளடக்கிய பொலிற்பீரோ (Politburo) என்ற அமைப்பே கம்யூனிச கட்சி ஒழுங்கமைப்பில் மிகவும் சக்தி வாய்ந்த அமைப்பாகும்.

அதி தீவிர தேசிய வாதிகளாகவும் ஆக்கிரமிப்பு தன்மை கொண்ட ஏகாதிபத்திய வாதிகளாகவும் காணப்படும் பாசிச வாதிகளின் கட்சி ஒழுங்கமைப்பு கம்யூனிச கட்சியினை விட மேலும் இறுக்கமானதாகவும், முற்றிலும் இராணுவ பாணியிலானதாகவும் அமைகின்றது. இராணுவ சீருடையின் நிறத்தின் அடிப்படையில் முசோலினியின் பாசிச கட்சி அங்கத்தவர்கள் 'கருஞ்சட்டையினர்' (Black Shirts) என்றும் கிட்லரின் நாசிச கட்சி அங்கத்தவர்கள் 'மாநிறச் சட்டையினர்' (Brown Shirts) *(கிறினா 1969)* சாதாரண மக்களை நடைப் பிணங்களாக கருதும் பாசிசம், உயர் குழாம் ஒழுங்கமைப்பில் நம்பிக்கை கொண்டது.

## 4. ஒரு சிறந்த ஜனநாயக கட்சிக்குரிய பண்புகள்

1. கட்சிக்கோட்பாடுகள் சுயநலம் அற்றவையாகவும் முற்போக்கானவையாகவும் தூர நோக்குடையவையாகவும் இருக்க வேண்டும். தேசிய நலன் தொடர்பான அடிப்படை விடயங்களில் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை காணப்பட வேண்டும்.

2. ஜனநாயக முறையில் ஏற்படும் முறையான ஆட்சி மாற்றத்தில் அக் கட்சிகள் உறுதியான நம்பிக்கை கொள்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கீழிருந்து மேலாகவும் மேலிருந்து கீழாகவும் இரு வழி தொடர் பாடலும் சகல மட்டங்களிலும் மக்கள் பங்கு பற்றலும் கட்சி அமைப்பில் வலிமை பெறுதல் வேண்டும். உட் கட்சி ஜனநாயகம் இல்லாமல் வெளிக் கட்சி ஜனநாயகம் சாத்தியப்படுவது இல்லை.

4. கட்சிக்காக தலைவர்களேயன்றி தலைவர்களுக்காக கட்சி என்ற நிலை தோன்ற இடம் அளிக்கக்கூடாது. தனிநபர் ஆளுமை வலுப்படுத்தல் கட்சியினை தவறான வழியில் திசை திருப்பி விடும்.

5. அர்த்தமுள்ளதும் ஆக்க பூர்வமானதுமான கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன்வைப்பதன் மூலம் உண்மையான பொது சன அபிப்பிராயத்தினை உருவாக்கவும் பின்னர் அதனை மதிக்கவும் கட்சிகள் முற்பட வேண்டும். ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு அவசியமாக அறிவுபூவமாக சிந்தித்து தொழிற் பட வல்ல பிரசைகளை உருவாக்கும் பணியில் கட்சிகள் ஈடு படுதல் வேண்டும்.

6. கட்சி விவகாரங்கள் அளவுக்கு மீறியும் அனாவசியமாகவும், அந்தரங்கமாகவும் இருத்தல் கூடாது. தமது உண்மையான தன்மையினை வெளிக்காட்ட பின் நிற்கும் அல்லது மறுக்கும் அல்லது பயப்படும் கட்சிகளை மக்கள் மதிப்பது இல்லை.

7. நாட்டின் அரசியல் திட்டமும் தேர்தல் விதிகளும் நீதித்துறையும் கட்சிகளை கட்டுப்படுத்தி கண்காணித்து நெறிப்படுத்தும் பாங் கினை பெற்றிருத்தல் வேண்டும். உள்வாரியான அம்சங்களைப் போல் வெளிவாரியான சில அம்சங்களும் கட்சி முறை ஜன நாயகத்துக்கு பங்களிப்புச் செய்ய முடியும்.

8. இலட்சிய ஜனநாயகத்துக்கு இருகட்சி முறையினுடைய வளர்ச்சி இன்றியமையாதது. பல கட்சி முறை காணப்பட்டாலும் கட்சி களின் கட்டமைப்பும் மக்களின் வாக்களிப்பு முறையும் இரு கட்சிமுறைப்போக்கை ஏற்படுத்த வேண்டும்.

இத்தகைய பண்புகளை ஓரளவுக்கு கொண்டுள்ள ஒரு முன்னுதாரண நாடாக சுவிற்சலாந்து விளங்குகின்றது. இந்நாடு பன்மைச்சமூக அமைப் பையும் பல கட்சி முறையையும் பெற்றிருப்பினும் கட்சிகளுக்கிடை யிலான வேறுபாடுகள் அருகிக்காணப்படுவதுமே இதற்குக்காரண மாகும். இத்துடன் சுவிஸ் பிரஜைகள் கட்சியடிப்படையிலன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையடிப்படையில் அபேட்சகர்களைத் தெரிவுசெய்ய வாய்ப்பளிப்பதுவும் நிர்வாகத்துறையின் அமைப்பும் இயக்கமும் தேசிய நலனைப் பேணும்விதத்தில் காணப்படுவதும், யாவற்றுக்கும் மேலாக நேரடி ஜனநாயக வழிமுறைகள் மூலம் மக்களின் அரசியல் பங்குபற்றல் அதிகரித்துள்ளமையும் இதற்கு காரணமாகும்.

## 5. அரசியற் கட்சிகளின் பணிகள்

அரசியல் கட்சிகளானவை மக்களுக்கும் அரசாங்கத்தினுடைய பிரதிநிதித்துவ அமைப்புகளுக்கும் இடையிலான அத்தியாவசியமான இணைப்பாக உள்ளன. தேர்தல் எதிர்நோக்கப்பட்டிருக்கும் போது அவர்களுடைய வகிபங்கு மிகவும் தெளிவானதாக அமைந்துள்ளது. ஆனால் ஒரு ஜனநாயக முறைமை பயன்மிக்க வகையில் செயற்படுத்துவதற்காக அவர்கள் தொடர்ச்சியாக செயற்திறனுடன் இயங்குவது அவசியமாக உள்ளது. இவை பல்வேறு முரண்பாட்டு தன்மையுடைய கொள்கைகளினை உடைய மக்களினை ஒன்றிணைத்து செயற்படுத்த வேண்டியவர்களாகவும் அரசாங்கத்தினுடைய நிகழ்ச்சித் திட்டங்கள், செயல்முறைகள் பற்றி மக்களை அறியச் செய்ய வேண்டியவர்களாகவும் உள்ளனர். அரசியல் கட்சிகளானவை அரசியல் அதிகாரத்தினை கைப்பற்றி அரசியல் அதிகாரத்தினை பாதுகாத்து அதனை வெற்றி கரமாக செயற்படுத்துவதற்காக மக்களும் குழுக்களும் செயற்படும் ஊடகமாக இருக்கின்றன. எனவே அரசியல் கட்சிகள் அரசியலில் இல்லை எனில் காரிய சாதிப்பு என்பது சாத்தியமற்றதாகிப்போய்விடும். ஒழுங்கமைக்கப்படாத ஒரு மக்கள் கூட்டமானது கொள்கைகளினை பொதுவான அடிப்படையில் உருவாக்கவோ அல்லது ஒரு கொள்கையின் கீழ் உடன்பட்டு செயற்படவோ முடியாது.

எனவே அரசியல் கட்சிகளானவை தங்களுடைய நிகழ்ச்சிகளினை அல்லது செயற்பாடுகளினை அதிக எண்ணிக்கையான மக்களின் முன்னே முன்வைப்பதன் ஊடாகவும் கொள்கைகளின் அடிப்படையான விடயங்களில் அவர்களின் ஆதரவினை, அனுமதியினை பேணுவதன் ஊடாகவும் பெரும் குழப்ப நிலைக்கு வெளியே ஓர் ஒழுங்கினைக் கொண்டு வருகின்றன. கட்சிகளானவை திட்மிட்டு தேர்தலில் போட்டியிடுவதுடன் தங்களது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதன் ஊடாகவும் பல்வேறு கட்சிகளின் உள்ளே தங்களை தெரிவுக்குரியவர்களாக ஆக்கிக் கொள்வதன் ஊடாகவும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மிகப்பிரயத்தனம் செய்கின்றனர். அரசியல் கட்சிகளானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்திலோ அல்லது எதிர்க் கட்சியிலோ எந்தப்பக்கத்தில் இருப்பினும் பொதுமக்களுக்கு இடையில் தொடர்ச்சியான தொடர்பினை பேணிக்கொள்ள வேண்டிய ஒரு பொறுப்பினை உடையவர்களாக உள்ளனர். இதன்படி ஒரு நாட்டில் அரசியல் கட்சிகள் பின்வரும் பணிகளை ஆற்ற முடியும்.

### அ. சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயத்தினை ஒன்று திரட்டுதல்

அரசியல் சமூகத்தில் சிதறிக்காணப்படும் சிக்கல் நிறைந்த பொது விருப்பங்களை ஒன்று திரட்டி முறையாக ஒழுங்கமைத்தல் அரசியல் கட்சிகளின் பிரதான பணியாகும். பிறைஸ் பிரபு குறிப்பிடுவதன்படி பல்வேறு நலன்களையும் தேவைகளையும் உடைய வாக்காளர்களை பொது நோக்கத்திற்காக ஒன்று சேர்க்கும் பணியினை அரசியல் கட்சிகள் மேற்கொள்கின்றன. லிபரல் ஜனநாயகத்தின்படி நாட்டின் இறைமை மக்களுக்குரியதாகும். அவர்கள் அரசியல் அதிகாரத்தின் ஊற்றுக்களாவார்கள். பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தினையும் பெற்றுள்ளனர். மறுபுறம் மனிதர்கள் பிறப்பிலேயே அரசியல் பிராணிகளாவார்கள். அவர்கள் பிறப்பதும் இறப்பதும் அரசிற்குள்ளேயே ஆகும். வாழும் காலப்பகுதியில் அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்படுகின்றனர். இதன்படி தம்மை ஆட்சி புரிவதற்குரிய சட்டம் மற்றும் அரச கொள்கைகளின் குறை நிறைகள் பற்றி மனிதர்கள் பேசுவதும் கருத்து வெளியிடுவதும் ஒரு சாதாரண நிகழ்வாகும்.

மனிதர்கள் அரசியல் சமுதாயப்படுத்தலுக்கு உட்பட்டிருக்கும் அளவின் அடிப்படையில் அவ்வாறு வெளியிடப்படும் கருத்துக்களின் உண்மை, பொய் தர்க்க ரீதியான தன்மை என்பன தங்கியுள்ளன. எவ்வாறாயினும் சகல மனிதரும் எந்தவொரு அரசியல் பொருளாதார சமூக பிரச்சினைகள் தொடர்பாக தனிப்பட்ட கருத்துக்களை வகிப்பர். அதன்படி அரசியல் முறையில் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஒரு தனிக்கருத்து நிலவமாட்டாது. எண்ணிறைந்த பல்வேறு கருத்துக்களினையே காணலாம். ஆனால் அவை அனைத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு பொதுக்கருத்தை உருவாக்க வேண்டும். மறு வார்த்தையில் கூறின் வேற்றுமையில் ஒற்றுமையினை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறின்றி ஜனநாயக அரசியல் முறையினைக் கொண்டு நடத்த முடியாது. அவ்வாறாயின் ஒரு பொதுக்கருத்தினை எவ்வாறு உருவாக்கலாம் என்ற வினா இங்கு எழுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக முறையில் இப்பணியை நிறைவேற்றுவதற்குள்ள ஒரே கருவி அரசியல் கட்சிகள் ஆகும். அரசியல் கட்சிகள் சிதறிக்காணப் படும் பொது சன அபிப்பிராயத்தை ஒன்று திரட்டி அவற்றை ஒழுங்கு படுத்தி சரியான முறையில் தர்க்க ரீதியான கொள்கைகள் என்ற வகை யில் மக்களுக்கு சமர்ப்பிக்கின்றன. தனது கருத்து சமமானவையாக அல்லது அதனை நெருங்கிய வகையில் உள்ள அரசியல் கட்சிகளுடைய கொள்கைகளுடன் மக்கள் ஒன்றிணைவதனை நாம் காண்கின்றோம். அவ்வாறு அரசியல் கட்சிகள் சிதறியுள்ள பொது சன அபிப்பிராயதினை ஒன்று திரட்டுகின்றன. அவ்வாறு ஒன்று திரட்டப்பட்ட மக்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே அரச கொள்கைகள் தயாரிக்கப் படுகின்றன.

### ஆ. வாக்காளர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுதல்

அரசியல் கட்சிகள் நிறைவேற்றும் பிறிதொரு பணி இதுவாகும். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எந்தவொரு அரசியல் சமூகமும் எதிர் கொள்ளும் அரசியல் சமூக பொருளாதார பிரச்சினைகள் பல நூறு காணப்படலாம். அவற்றை தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகளும் ஏனைய தனிப்பட்டவர்களும் முன்வைக்கும் தீர்வுகளும் அதிகம் காணப்படு கின்றன. அவை ஒன்றுக்கொன்று வேறுபடுவனவாகும். அதன்படி வாக்காளர்கள் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளுக்குமிடையில் கதியற்றவர் களாகிவிடுவர். சாதாரண மக்கள் இப்பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் பற்றி பகுத்தறிவு ரீதியான தீர்மானங்களுக்கு வருவதற்கு திறனை பெற்றிருக்க மாட்டார்கள். தர்க்க ரீதியான தீர்மானங்களை எடுக்கச் செய்வதற்கு வாக்காளர்களை அறிவூட்ட வேண்டும். இப் பணியினை நிறைவேற்றுகின்ற ஓர் ஊடகம் அரசியல் கட்சியாகும்.

இதன்படி ஒரு குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக மாற்றுத் தீர்வுகள் முன்வைக்கப்பட்டிருக்கும் போது அவற்றுள் எது சரியானது என்பதனை தெரிவு செய்வதற்கு அரசியல் கட்சிகள் வாக்காளர்களுக்கு வழி காட்டுகின்றன. நாட்டின் முக்கியமான அரசியல் பொருளாதார சமூக பிரச்சினைகள் பற்றி பேச்சாளர்களுக்கு தகவல்களினை வழங்கி அவர்களை அரசியல் ரீதியாக விழிப்புடன் இருக்கச் செய்கின்றது. அதிகாரத்தில் அமர்ந்துள்ள கட்சி இதனை செய்கின்றது. அவை நன் மையா தீமையா என்பது பற்றி மக்களுக்கு அறிவூட்டுகின்றன. மக்களை அறிவூட்டுவதற்காக அரசியல் கட்சிகள் கூட்டங்கள், கலந்துரையாடல் கள், கருத்தரங்குகள், சுவரொட்டிகள், விளம்பரங்கள், பத்திரிகைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள், ஆய்வுப்பாட நெறிகள் போன்றவற்றினையும் பயன் படுத்துகின்றன.

### இ. சமூகத்தினை நவீன மயமாக்குதல்

இதனுடைய பொருள் நடைமுறையில் உள்ள நிலைமைகளை மாற்றி சமூகத்தினை முன்னெடுக்கும் ஒரு சக்தியாக அரசியல் கட்சிகள் பணி களை நிறைவேற்றுகின்றன என்பதாகும். வேறு வகையில் கூறின் மரபு முறையில் இருந்து நவீனத்துவத்திற்கு மாற்றமடைவதற்கு அரசியல் கட்சிகள் பணிகளை நிறைவேற்றுகின்றன என்பதாகும். பிறிதொரு வகையில் கூறின் அமைப்புக்களையும் பணிகளையும் மாற்றியமைத்து சமூகத்தினை முன்னெடுப்பதற்கான பணிகளை அவை நிறைவேற்று கின்றன என்பதாகும். எந்தவொரு நாட்டிலும் சமூக முன்னேற்றத்தின் வடிவங்களையும் அளவையும் தீர்மானிப்பதில் அரசியலதிகாரத்தினை பிரயோகிக்கும் அரசியல் கட்சியின் அரசியல் பொருளாதார சமூக தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்படுகின்ற நடைமுறைப்படுத்துகின்ற கொள்கையில் இயல்பு பாதிப்பு செலுத்து கின்றது. இதன்படி முழு சமூக முறையும் அரசியல் கட்சிகளில் தங்கி யுள்ள ஒரு மாறியாக மாறுகிறது. அரசியல் கட்சிகளின் வழிகாட்டலும் வழிப்படுத்தலும் இன்றி ஒரு சமூகம் முன்னேற்றம் அடைய முடியாது.

### ஈ. சமூக சக்தியினை அதிகார சக்தியாக மாற்றுதல்

பொது மக்களின் அனுமதியுடன் சில அரசியல் கட்சிகள் அதிகாரத்தை ஏற்றது என்பதன் கருத்து பொது மக்களுடைய அரசியல் சக்தியினை அரசுக்குரிய அதிகார சக்தியுடன் கலந்து அதிகார சக்தியாக மாற்றுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது என்பதாகும். அரசாங்கம் சட்டத்தை அமுல் படுத்துவதும் அதனை செயற்படுத்துவதும் சட்டம் மீறப்படும்போது தண்டனை வழங்குவதும் அந்த அதிகார சக்தியின் அடிப்படையிலேயே ஆகும்.

### உ. அங்கத்தவர்களை சேர்த்துக்கொள்வதும் தலைவர்களை பயிற்றுவித்தலும்

அரசியல் கட்சி என்பது ஒரே கருத்தைக்கொண்டுள்ள பலரின் கூட்டி ணைப்பு என்பர். இந்த வகையில் கருத்தொருமைப்பாடு கொண்ட வர்களுக்கிடையில் அங்கத்தவர்களை சேர்த்து அவர்களுக்கு தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துவ பயிற்சியினை வழங்கி அவர்களை தலைவர்களாக்கும் பணியினை கட்சிகள் மேற்கொள்கின்றன.

## 6. அரசியல் கட்சிகளின் சிறப்புக்கள்

கட்சிமுறை என்பது மனித இயல்புகளுடன் தொடர்புபட்டதாக அமைந்துள்ளது. உடன்பிறந்த பண்புகளானவை மக்களை வெவ்வேறு கட்சிகளின் உள்ளே பிரித்து விடுகின்றன. ஓர் அரசியல் கருவி என்ற முறையில் கட்சிமுறையானது ஜனநாயகத்தை செயற்பாடுமிக்கதாக்குகின்றது. இது நாட்டின் சகல பாகங்களிலுள்ள மக்களையும் கொள்கையடிப்படையில் ஒன்றிணைத்து அதன்மூலம் செயற்படுவதற்குரிய சக்தியினை வழங்குகின்றது. முறையாக ஒழுங்கமைக்கப்படுத்தப்படாத கட்சி இல்லாத போது விளைவுமிக்க வகையில் ஒன்றிணைந்து செயற்படமுடியாத முரண்பட்ட கருத்துக்களையுடைய குழுக்கள் தோற்றம் பெறலாம். பிரதிநிதித்துவ அரசாங்கம் ஒன்றின் வெற்றியானது ஆற்றலிலும் கட்சி முறைமைகளின் துணிவுகரமான செயற்பாடுகளிலுமே தங்கியுள்ளது.

மக் ஐவர். (MicIver) இதுதொடர்பில் கூறுகின்ற போது 'கட்சி முறைமை இல்லையெனில் ஒரு அரசானது நெகிழ்வுத்தன்மையுடையதாக இருக்காது என்பதுடன் உண்மையான சுயநிர்ணயமும் இருக்காது' என்று குறிப்பிடுகின்றார். பொறுப்புணர்வு அற்ற அரசாங்கமானது மக்களது விருப்பத்திற்கு மாறாக வலிமை என்பதனை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கும். இத்தகைய ஒரு நிலையில் அரசாங்கத்தினை மாற்றியமைப்பதற்கான ஒரு வழிமுறையாகவே புரட்சி உள்ளது. ஆனால் கட்சிமுறை அரசாங்கமானது மக்களது கருத்துக்களிலேயே வாழ்கின்றது என்பதுடன் வெற்றிபெறவும் செய்கின்றது. கட்சிமுறைமையானது சட்டசபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு இடம் வழங்குகின்றது.

கட்சி முறைமையானது சட்ட சபையினை உயர்வான ஒன்றாக மாற்றியமைப்பதுடன் சரியான முறையில் வாக்கெடுப்பினை நிகழ்த்துவதன் ஊடாக தேர்தலையும் இலகுவானதாக்குகின்றது. இது இரண்டு முன்னேற்றகரமான அம்சங்களைக்கொண்டதாக அமைந்துள்ளது. முதலாவதாக வாக்காளர்கள் வேட்பாளர்களை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளதுடன் அவர்களின் அடையாளங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதற்கு இணங்க தாம் தெரிவு செய்ய வேண்டிய கட்சி பற்றிய கொள்கைகள் பற்றிய தெளிவினையும் பெற்றுக்கொள்வதற்கு பொது மக்களுக்கு போதுமான சந்தர்ப்பத்தினையும் வழங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இரண்டாவதாக அரசியல் கட்சிகளானவை தங்களது ஒன்றிணைந்த உறுதித்தன்மையுடன் தங்களது வேட்பாளர்கள் தேர்தலில் உறுதியானவர்களாக இருப்பதற்கு உதவுகின்றன. கட்சி நிதியின் ஊடாகவும் ஒழுங்கமைப்பின் ஊடாகவும் வறிய நிலையில் உள்ளவர்கள் கூட தெரிவு செய்யப்படுவதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அரசாங்கத்தினுடைய இரண்டு பிரிவுகளுக்கிடையில் இணக்கத்தினையும் அரசியல் கட்சிகள் கொண்டு வருகின்றது. அவை சட்டம் இயற்றும் சபை, நிறைவேற்றும் சபை என்பனவாக அமைகின்றன. அரசாங்கத்தினுடைய பாராளுமன்ற முறைமையின் கீழ் சட்ட சபையின் கீழ் பெரும்பான்மையினைக் கொண்டுள்ள கட்சியானது அரசாங்கத்தினை அமைக்கின்றது. அத்துடன் இது அனைத்து விதமான பொது செயற்பாடுகளுக்கும் விடையளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இவற்றுடன் அரசியல் கட்சிகளானவை தங்களுடைய தேர்தல் பிரச்சாரத்தின் ஊடாக பொது உணர்வினை வளர்க்கின்றன. அத்துடன் பொது விவகாரங்களில் அக்கறையுடன் ஈடுபடுவதற்கு பொதுமக்களினை ஊக்குவிக்கும் தன்மையினையும் கொண்டுள்ளன. இத்தகையதான முறையில் சிவில் உணர்வினை ஏற்படுத்தி ஜனநாயக தன்மையினை அடைந்து கொள்வதற்கு உதவி செய்கின்றன. அரசியல் கட்சிகளானவை தங்களுடைய விதியின் நிர்ணயிப்பாளர்கள் தாங்கள் தான் என்பதனை மக்களை உணரச் செய்கின்றன. அவர்கள் எவ்வகையான அரசாங்கத்தினை பெற வேண்டும் என்று எதிர் பாரக்கின்றனரோ அதனை பெற்றுக்கொள்வதற்கு துணை செய்கின்றன. இவற்றுடன் ஒரு தேசத்தில் தொடர்ச்சியான கூட்டுறவினையும் ஏற்படுத்துகின்றன. அது மட்டுமன்றி அரசியல் கட்சிகளானவை குழப்ப நிலையில் இருந்து விடுபட்டு ஒழுங்கினை மட்டுமல்ல விசுவாசம், தேச பக்தி என்பனவற்றினையும் வளர்க்கின்றன.

## 7. அரசியல் கட்சிகளின் பலவீனங்கள்

கட்சி தொடர்பாக அமையும் விமர்சனமானது, கட்சி என்பது உபயோகமற்ற ஒன்று என வெளிப்படையாக கூறப்படுகின்றது. இயற்கையல்லாத அரசியல் தோற்றப்பாடு என வர்ணிக்கப்படுகின்ற கட்சிமுறைமை என்பது மனிதர்களுடைய இயற்கையான மனோபாவத்தின் விளைவு அல்ல, மாறாக தங்களுக்கென கருத்துக்களை ஏற்படுத்திக்கொண்ட மக்களுக்கிடையில் செயற்கையாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒன்றேயாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது. அதுபோல் தங்களுடன் எதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் ஏற்படுத்திக்கொண்ட முரண்பாடும் செயற்கையானதே என்று கூறுகின்றனர். இவ்வாறு செயற்கைத்தன்மை கொண்ட உடன்பாடும் முரண்பாடும் மனிதர்களினை விரோதத்தன்மை கொண்ட இரண்டு குழுக்களாக மாற்றிவிட்டன.

கட்சிமுறைமையானது அரசியல் ஒழுங்கு முறையினை குலைப் பதுடன் அதனை மாற்றியமைக்கின்றது. கட்சி அங்கத்தவர்களுடைய தனித்தன்மையினை இல்லாமல் செய்வதுடன் அவர்களை பின்பற்றுப வர்களாக மாற்றியமைக்கின்றது. ஒரு கட்சியினுடைய அங்கத்தவனாக இருத்தல் என்ற அடிப்படையில் ஒருவன் சில விடயங்களில் சுதந் திரத்தினை, தனித்துவத்தினை இழக்க வேண்டியவனாக உள்ளான். இது ஜனநாயகத்திற்கு எதிரிடையான ஓர் அம்சமாக உள்ளது.

மேலும் கட்சிமுறைமையானது ஒரு நாட்டினுடைய அரசியல் வாழ்க்கையினை இயந்திரத்தன்மையுடையதாக மாற்றிவிடும் என்று குறிப்பிடப்படுகின்றது. எதிர்க்கட்சியானது எப்போதும் அதிகாரத்தில் உள்ள கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்டதாக விரோத மனப்பாங்குடன் செயற்படுவதாக உள்ளது. 'எதிர்த்தல்' என்பது ஒரு கட்சிக் கொள்கையாகவே உள்ளது. இவை உபயோகமாக எதனையும் கொண்டிருப்பதாக இல்லை. அரசாங்கம் முன்வைக்கின்ற அனைத்து செயற்திட்டங்களையும் எதிர்ப்பதாக எதிர்க்கட்சிகளினுடைய நிலைப் பாடாக உள்ளதே தவிர அவை எவ்வளவு தூரம் நாட்டுக்கு பயன் கொண்டவையாகவும் அவசியமானவையாகவும் உள்ளன என்பதைப் பற்றி சிரத்தை கொள்வதும் இல்லை.

கட்சிமுறைமையின் பாதகமான தன்மையானது சுயநலன் கொண்ட அரசியல் சாதுர்யமுள்ள ஆனால் நேர்மையற்றவர்கள் தங்களுடைய தனிப்பட்ட நலன்களுக்காக பயன்படுத்திக்கொள்வதற்கு சந்தர்ப்பத் தினை உண்டாக்கி கொடுக்கின்றது. இத்தகைய பிரச்சினைக்கு இந்தியா மிகப்பெரும் உதாரணமாக அமைந்துள்ளது.

## 8. அரசியல் கட்சி முறைமைகள்

அரசியல் ஆய்வு விடயத்தில் முக்கிய இடம் பெறுவது கட்சியும் கட்சி முறைமைகளும் ஆகும். இவை முக்கிய இடம் பெறுவதற்கு இரண்டு வகைப்பாடுகள் ஆதாரமாயுள்ளது.

1. பலத்தின் அடிப்படையில் (பலம் ஒழுங்கமைப்பு கொள்கை அடிப்படையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. போட்டி அடிப்படையில் :- இந்த போட்டி அடிப்படையில் பிரிக்கப்படுகின்ற கட்சியைத் தான் ஒருகட்சிமுறை, இருகட்சி முறை, பலகட்சிமுறை என மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது. இதனை மரபு ரீதியான ஆய்வு என்று குறிப்பிடப்படுகின்றது. பலத்தின் அடிப்படையில் என்னும் போது கட்சிகள் பெறும் வாக்குகள், கட்சிகள் பெறும் பிரதிநிதித்துவம் எனும் இரண்டு அடிப்படையில் விளங்குகின்றது. இதனை மொறிஸ் டுவேஜர் என்பவர் நான்காக பிரித்து நோக்கினார்.

(i) பெரும்பான்மைக்கட்சி

(ii) பெரியகட்சி

(iii) நடுவளவிலான கட்சி

(iv) சிறியகட்சி என பாகுபடுத்துகின்றனர்.

கட்சிமுறை பாகுபாட்டில் இரண்டு அம்சங்கள் முக்கிய இடம் பெறுகின்றன அவையாவன

1. வாக்குகள்
2. பிரதிநிதித்துவம்

## அ. ஒருகட்சி முறை

மரபு ரீதியான ஆய்வு விடயத்தில் இடம் பெறும் முதலாவது கட்சி முறை ஒரு கட்சி முறையாகும். இந்த ஒரு கட்சிமுறை சர்வாதிகார போக்குடைய நாடுகளிலும் சோசலிஸ நாடுகளிலும் காணப்படுகின்றது. இதன்படி ஒரு கட்சி முறையில் பலம் வாய்ந்த ஒரு கட்சி காணப்படுகின்ற அதே வேளை பல சிறிய கட்சிகளும் காணப்படுகின்றன. ஆனால் ஒருகட்சி தான் சகல அதிகாரங்களையும் கொண்டு காணப்படுகின்றது. பேராசிரியர் கிறேக் என்பவர் ஒரு கட்சி முறை பற்றி கூறும் போது ' ஒரு கட்சி முறைமை ஜனநாயகமும் அல்ல, கட்சி முறையும் அல்ல, சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஒரு முறை என்று கூறுகின்றார்.

ஒரு குறிப்பிட்ட குழு வந்து தாம் வென்றெடுக்கும் சாதனமாக செயற்பட்டது. இந்த ஒரு கட்சிமுறை தோன்றக் காரணம் தங்களுக்கும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கின்றது என்பதை காட்டவே ஆகும். இது தோன்றி பின்னர் அதற்கு எதிரான கட்சி தோன்றவோ எதிர்ப்புத் தோன்றவோ வழி அமைக்காமல் வளர்ந்து வந்தது. இந்த ஒரு கட்சி முறை தனிக்கட்சி ஆட்சி முறையா அல்லது பல கட்சி ஆட்சி முறையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற விமர்சனத்துக்குள்ளாக்கப்படுகிறது. இதனை வைத்து இது 3ஆகப் பிரிக்கப்படுகின்றது.

1. தனிக்கட்சி
2. தலையாய கட்சி
3. முதன்மைக்கட்சி / ஆதிக்க கட்சி

தனிக்கட்சி என்ற ஓர் அரசியல் முறையானது தனியொரு கட்சியை மாத்திரம் இயங்க அனுமதிக்குமானால் அது தனிக்கட்சி எனப்படு கின்றது. இரு உலக யுத்தங்களுக்கிடைப்பட்ட காலத்தில் ஜேர்மனில் காணப்பட்ட ஹிட்லரின் நாசிஷக்கட்சியும் இத்தாலியில் காணப்பட்ட முசோலினியின் பாஷிசக்கட்சியும், சீன சோவியத் கம்யூனிசக் கட்சிகளும் தனிக்கட்சிமுறைக்கு சிறந்த உதாரணங்களாகும். இது இறுக்கமான சர்வாதிகார ஆட்சியாகும். தான் வகுத்துக்கொண்ட தீவிர சித்தாத்தங் களைத் திட்டமிட்டுச் செயற்படுத்த தனியொரு கட்சியே உகந்தது என்றும் பலகட்சிகளின் இயக்கம் குழப்பத்திற்கும் திறமையின்மைக் கும் சமூகச் சீரழிவுக்கும் வழிவகுத்துவிடும் என்றும் பாஷிசவாதிகளும் தீவிர கம்யூனிசவாதிகளும் கருதுகின்றனர். ஏனைய கட்சிகளும் காணப் படும். ஆனால் ஏனைய கட்சிகளின் செல்வாக்கு இருக்காது தனிக் கட்சிமுறையானது படிப்படியாக பலமிழந்து வருவதை வரலாறு காட்டுகின்றது.

தலையாய கட்சியை நோக்கின் ஒரு கட்சி முக்கிய இடம் பெற அதனைச் சார்ந்த ஏனைய கட்சிகளும் காணப்படும். ஒரு கட்சி செல் வாக்குப் பெற ஏனைய கட்சிகளின் செல்வாக்கோ, சட்ட திட்டங்களோ இடமளிக்கமாட்டாது. அதாவது செல்வாக்கு மிக்க கட்சியின் தலை மைத்துவத்தினை ஏற்றுக்கொண்டு அதனுடன் இணைந்து கூட்டாகத் தேர்தலில் போட்டியிடுவதாகும். சமீபகாலம் வரை சோவியத்யூனி யனின் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு ஐரோப்பிய கம்யூனிச நாடுகளில் முதன்மைக்கட்சிமுறை நிலவியது. மேலும் இதற்கு உதாரணமாக முன்னைய போலந்து நாட்டையும் குறிப்பிடலாம். இங்கு கம்யூனிச கட்சியின் செல்வாக்கும் காணப்பட்டாலும் ஜனநாயக கட்சியில் செல் வாக்கும் இருந்தது. ஆனால் ஜனநாயக கட்சியில் ஆட்சி அமைக்க முடியாமல் போனது. இது கம்யூனிச கட்சியை சார்ந்ததாக இருந்தது. மேலும் வடகொரியா, தன்சானியா, உகண்டா போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை கட்சியை நோக்கினால் தேசிய ரீதியில் பல கட்சிகள் இருந்தாலும் ஒரு கட்சி மட்டும் தொடர்ந்து தனது ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டு வருவதாகும். 'கீ' என்ற அறிஞர் அமெரிக்காவின் தென்மாநிலங்களில் ஜனநாயகக் கட்சியின் ஆதிக்கத்தினை குறிப்பதற்கு ஆதிக்க கட்சி என்ற பதத்தை பயன்படுத்தினார். பின்னர் டுவேஜரினால் விரிவுபடுத்தப்பட்டது. இவரின் கருத்துப்படி ஓர் ஆதிக்ககட்சி சில இயல்புகளை கொண்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

1. நீண்ட காலத்திற்கு தேர்தலில் ஓரம் கட்டியிருக்க வேண்டும்.
2. அது தனது கோட்பாடுகள், அமைப்பு, இயக்கம் போன்றவற்றால் தன்னை முழுநாட்டுடனும் இனங்காணக்கூடியதாக இருக்க வேண்டும்.

இதன்படி பிரான்சின் மூன்றாம் குடியரசில் தீவிரவாதக்கட்சியும் ஸ்கண்டிநேவியாவின் சமூக ஜனநாயகக்கட்சியும் டுவேஜரினால் ஆதிக்க கட்சிக்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இத்துடன் இந்தியா வில் இந்திய தேசிய காங்கிரஸ் தொடர்ந்து ஆட்சியை கைப்பற்றி வந்ததை குறிப்பிடலாம். (ஒரு சில தேர்தல்களைத் தவிர ஏனைய தேர்தல்கள்) அடுத்து பிரித்தானியா, இலங்கை போன்ற நாடுகளிலும் இடம் பெறுகின்றது.

### ஒரு கட்சி முறையின் நன்மைகள்

1. காலதாமதம் தவிர்க்கப்படும்.
2. உறுதியான அரசாங்கம் அமைக்கப்படும்.
3. மக்களின் பிளவுகள் தவிர்க்கப்படும்.
4. தேர்தல் வன்முறைகள் தவிர்க்கப்படும்.
5. வீண்விரயம் தடைப்படும். பொருளாதார வீழ்ச்சியை தடைப் படுத்தும்.
6. சமூக சீர்கேடுகள் தவிர்க்கப்படும்.
7. கல்வி சீர்கேடுகள் தவிர்க்கப்படும்.

### தீமைகள்

1. கொள்கைகள், தீர்மானங்களில் சரியானதாக இருக்கும் எனக் கூறமுடியாது.
2. மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆட்சி செய்யும் கட்சி குறித்த ஒரு கட்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் ஏனைய இனங்கள் இதனை விரும்பாது.
4. கட்சி நலன் சார்ந்ததாகக் காணப்படும்.
5. சர்வாதிகாரப் போக்கு காணப்படும்.
6. கீழ் மட்ட மக்களின் தேவைகள் அறியப்படாத ஒன்றாகவும் தீர்மானம் காணப்படாததாகவும் இருக்கும்.

## ஆ. இரு கட்சி முறை

நாடளாவிய ரீதியில் இரு கட்சிகளுமே செல்வாக்கு பெற்று தொடர்ந்து இரு கட்சிகளும் மாறி மாறி ஆட்சி செய்து வருவதையே இரு கட்சி முறை எனப்படும். இரு கட்சி முறையானது பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, நியுசிலாந்து, தென்னாபிரிக்கா என்பனவற்றில் நடைமுறையில் உள்ளது. இரு கட்சி முறை நடைமுறையில் உள்ள நாடுகளில் சிறிய சில கட்சிகளும் இருக்கவே செய்கின்றன. உதாரணமாக பிரித்தானியாவில் லிபரல் கட்சி (Liberal Party) அமெரிக்காவில் சோசலிசக் கட்சி (Communist Party) கனடாவில் புதிய ஜனநாயகக் கட்சி (New Democratic Party) என்பனவற்றினைக் குறிப்பிடலாம். ஆனால் அடிப்படையான போட்டியானது பிரதானமாக இரு கட்சிகளுக்கும் இடையிலேயே இருக்கும். ஏனைய கட்சிகள் மிகவும் குறைவான ஆசனத்தினையே சட்ட சபையில் கொண்டிருக்கும். இது உத்தியோக பூர்வமான எதிர்க்கட்சியாக அமைவதற்கு போதுமானது அல்ல.

பிரித்தானியாவிலும் வேறு சில நாடுகளிலும் இருப்பதனைப் போன்று கட்சி அரசாங்கத்தின் சாராம்சமானது பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சியானது அரசாங்கத்தினை அமைக்கின்றது. அக்கட்சியினுடைய தலைவர் பிரதமராக இருப்பார். ஏனைய அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு பொறுப்புடையவர்களாக இருப்பார்கள்.

இத்தகைய இரு கட்சி முறையானது பின்வரும் சந்தர்ப்பங்களின் போது நிலைத்திருக்க முடியும் என்று குறிப்பிடப்படுகின்றது.

1. வாக்குகளில் பெருமளவிலான பகுதியினை பகிர்ந்து கொள்வதற்கும் அரசியல் ஆதிக்கத்தினை மேற்கொள்வதற்கும் போதுமான வலிமையுடையதாக இரண்டு கட்சிகள் இருக்க வேண்டும். எனினும் ஏனைய கட்சிகள் பிரதிநிதிகள் சபையில் ஒரு சில ஆசனங்களைப்பெற்று அங்கத்துவம் வகிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிரதானமான இரண்டு கட்சிகளும் அதிகாரப் பிரயோகத்திற்கு மாறி மாறி வருதல் வேண்டும்.

இரு கட்சி முறையில் பின்வருவன உள்ளடக்கப்பட்டிருக்கும். அவை யாவன:

1. திட்டவட்டமான பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுமளவிற்கு கட்சிகள் காணப்பட வேண்டும்.
2. இந்த இரு கட்சிகளிலுமே ஏதாவது ஒன்று பெரும்பான்மை பெற்று அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.
3. அதிகாரத்தை பெற்ற கட்சி ஆட்சிக் காலம் முடியும் வரை தொடர்ந்து ஆட்சியில் இருத்தல் வேண்டும்.

இரு கட்சிமுறையில் எதிர்க்கட்சியானது அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக் காட்டி நிற்கும். எதிர்காலத்தில் பலமான ஒரு கட்சியாக ஆட்சிக்கு வரக் கூடும். இரு கட்சிகளுமே மக்கள் மத்தியில் தொடர்ந்து ஆட்சியமைப்பதால் அவர்களின் ஆதரவினை இக்கட்சிகள் தொடர்ந்து பெறும்.

**நன்மைகள்**

1. ஆட்சிகள் உறுதியானதும் நிலையானதாகவும் இடம் பெறும்.
2. கொள்கைகளை தெளிவாக உணர்ந்து தளம்பலற்ற முறையில் மக்கள் தம்மை செயற்பட உதவுகின்றது.
3. எதிர்க்கட்சி விழிப்புணர்வுடன் செயற்படும் (பலமான எதிர்க் கட்சியும் நிழல் அரசாங்கமாகச் செயற்படல்)
4. வீண் காலதாமதம் குறையும், உறுதியான அரசாங்கம் உருவாகும்.

**தீமைகள்**

1. கட்சிகள் (பிராந்திய, வட்டார, பிரதேச ரீதியாக) தேசிய கட்சியினர் என இரு பிரிவுகள் பிளவுபட்டுக் காணப்படும்.
2. சட்டமன்றத்தில் மிகுதிப்பெரும்பான்மையினை ஒருகட்சி பெறுமானால் தான் விரும்பியவாறு செயலாற்ற முற்படலாம்.
3. கட்சி நலனுக்கு ஏற்றவாறு சட்டங்கள் இயற்ற முற்படலாம்.
4. மக்களுக்கு இரு கட்சி கொள்கைகளிலும் விருப்பம் இல்லாவிடின் மூன்றாவது கட்சியை தேர்ந்தெடுக்க முடியாமை.
5. அமைச்சரவை சர்வாதிகாரமாக நடக்க வாய்ப்பு காணப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் லஸ்கி இரு கட்சி முறையில் அரசாங்கம் தனது கொள்கை களை சட்ட ஏற்பாட்டுக்குக் கொண்டு செல்ல முடியும் என்றார். கூட்டுப் பொறுப்பு மக்கள் அரசாங்கம் பற்றிய அறிவை தெளிவாக உணர்ந்து அரசாங்கம் அமைத்தல். நிழல் அரசாங்கம் தீமையில் முடியும். பேரா. ராம்மூர் கூறும் போது ' இரு கட்சி முறை சட்ட மன்றங்களின் தரத் தினையும் வலுவினையும் குறைக்கின்றது' என்கிறார்.

## இ. பல கட்சி முறை

தேர்தல் மூலம் இரண்டிற்கு மேற்பட்ட கட்சிகள் தேசிய ரீதியில் செல்வாக்குப் பெற்று ஆட்சியமைக்கக் கூடிய தன்மை காணப்படும். இரு கட்சிகள் செல்வாக்கு பெற்றாலும் ஏனைய கட்சிகளின் செல்வாக்கும் காணப்படும். இத்தகைய தன்மையை பல கட்சி ஆட்சி முறை எனலாம்.

1. பல்லின சமூகம் உதாரணமாக தென்னாபிரிக்காவில் வெள்ளை, கறுப்பு, இந்தியா- ஒவ்வொரு இன மத அடிப்படையில் பல கட்சி.
2. கட்சிகளிடையே காணப்படும் முரண்பாடு ஸ்திரமற்ற ஆட்சி யமைப்பும் ஸ்திரமற்ற தன்மையும் கொண்டதாக பல கட்சி முறை காணப்படும். உதாரணம் இலங்கை, இந்தியா.

**நன்மைகள்**

1. ஜனநாயக தன்மை பேணப்படும். அதாவது ஒவ்வொரு பிர தேசத்தில் இருந்தும் குழுக்கள் அல்லது கட்சிகள் அங்கத்துவம் பெறும் போது ஜனநாயகம் பேணப்படும். சமத்துவம், சகோதரத் துவம், சமாதானம் காணப்படும். இதனால் சிறுபான்மையாளரின் சுதந்திரம் காக்கப்பட வாய்ப்புண்டு
2. சிறுபான்மையினருக்கு எதிரான அடக்கு முறைகள், சட்டங்கள் காணப்படாது.
3. நில ரீதியான அபிவிருத்தி முன்னேற்றம் காணப்படும். உதாரண மாக இந்தியா அந்தந்த மானிலங்களில் அதிகாரம் காணப்படும்.
4. பேரம் பேசி தமக்கான தேவைப்பாடுகளை பெறக்கூடியதாக உள்ளது.
5. ஓரளவிற்காவது மக்களை திருப்திப்படுத்தக் கூடிய விதத்தில் கொள்கைகள் நிறைவேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***தீமைகள்***

1. தேசிய நோக்கம் இருக்காது. குறுகிய சிந்தனை, செயற்பாடு இதன் காரணமாக வாக்குகளைப் பெற்று ஆட்சியமைக்க முடியாது. உதாரணமாக இனரீதியான கட்சிகள் பிளவுபட்டுக் காணப்படும்.
2. மக்களிடையே போட்டியேற்படும், பொறாமை, இனத்துவேசம் காணப்படும். நாட்டின் அபிவிருத்தி மந்த நிலையில் காணப்படும்.
3. கொள்கை, கோட்பாடு உருவாக்கி செயற்படுத்தி தமது இலக்கை யடைய முடியாமல் போகும்.
4. பலமான எதிர்க்கட்சி இராது. அதாவது தெளிவான சிந்தனை காணப்படமாட்டாது.
5. பொருளாதார மந்தம் அதாவது வீண் செலவு ஏற்படும்.
6. ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை காணப்படமாட்டாது.

## 9. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் அரசியல் கட்சி முறைகள்

### அ. பிரித்தானியாவில் அரசியற் கட்சி முறைமை

உலகில் பல்வேறு அரசியல் நிறுவனங்களை அறிமுகப்படுத்திய நாடு இங்கிலாந்து ஆகும். பாராளுமன்றம், அமைச்சரவை போன்ற நிறுவனங்களை பிரித்தானியாவே முதன்முதலில் உலகிற்கு அறிமுகப் படுத்தியிருந்தது. இதேபோல் அரசியற்கட்சிகளையும் முதன்முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு பிரித்தானியாவேயாகும். இதனால் அரசியற் கட்சிகளின் தாயகமாகவும் இந்நாடு விளங்குகின்றது.

பிரித்தானியா இரு கட்சி முறையை கொண்ட நாடாக காணப் படுகிறது. இங்கு இரு கட்சிமுறை சிறப்பாக காணப்பட காரணம் உண்டு. இவ்விரு கட்சிகளுடன் கம்யூனிச கட்சி போன்ற பல கட்சிகளும் காணப்படுகின்றது. முக்கிய இரு கட்சிகளாக பழைமை பேணும் கட்சியும் தொழிலாளர் கட்சியும் காணப்படுகின்றன. இவ்விரு கட்சியில் 90%மான மக்களின் தெரிவு 80% ஆசனங்களை இவ்விரு கட்சிகளும் பெறுகின்றன. உள்நாட்டு ரீதியாக, கொள்கை ரீதியில் ஒரே தன்மையை முரண்பட்டும் ஒற்றுமையையும் கொண்டு இருக்கும். இருந்தாலும் மக்களின் மனதில் இருகட்சிமுறையால் முன்னேறலாம் என்ற எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இரு கட்சிமுறை காணப்படும் இரு நாடுகள் எனக்கூறும் பொழுது பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகள் முக்கியம் பெறுகின்றன .இரு கட்சி முறைகள் பேணப்பட்டதற்கு முக்கிய காரணி அரசியல் கலாசாரம், கல்விமுறை, வரலாற்றுக்காரணி, சமூக அபி விருத்தி போன்றனவாகும்.

பிரித்தானியாவில் உள்ள அரசியற்கட்சிகள் வரலாற்று ரீதியாக வளர்ச்சியடைந்த கட்சிகளாகும். கைத்தொழில் புரட்சியின் பின் அரசியல் யாப்பு தொடர்பாக இருபிரிவினர் அரசியல்வாதிகளிடையே காணப்பட்டனர். ஒரு பிரிவினர் பழமையைப் பேணுபவர்களாகவும் மற்றைய பிரிவினர் பழமையை மறுப்பவர்களாகவும் காணப்பட்டனர். பழமையைப்பேணுகின்றவர்கள் பிற்காலத்தில் பழமை பேணும் கட்சி (Conservative party) யாக தம்மை மாற்றிக்கொண்டனர். பழமையை மறுத்து நவீனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் 'விக்கு' (whigs) கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் பிற்காலத்தில் தம்மை லிபரல் கட்சியாக மாற்றிக் கொண்டனர்.

கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து தொழிலாளர்களின் தொகை இங்கிலாந்தில் பெருகத் தொடங்கியது. இதன்படி தொழிலாளர் களின் பிரச்சினையும் பெருகத் தொடங்கின. இதனால் தொழிலாளர் களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு 1906இல் தொழிற்கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப்பட்டது. பிரித்தானியக் கட்சி முறையில் அதற்கேயுரிய சில முக்கிய இயல்புகள் இருக்கின்றன. அதன்படி 17ஆம் நூற்றாண்டிலிருந்து இருகட்சிமுறைக்கு பெயர் போன நாடாக பிரித்தானியா விளங்குகின்றது. ஆரம்பகாலங்களில் பழமைபேணும் கட்சியும் லிபரல் கட்சியும் மாறிமாறி அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடியளவிற்கு செல்வாக்குடைய கட்சிகளாக விளங்கின. தற்போது பழமைபேணும் கட்சியும் தொழிற்கட்சியும் ஆட்சியை அமைக்கக்கூடியளவிற்கு செல்வாக்குடையனவாக விளங்குகின்றன. இரு கட்சியினருக்குமிடையே தெளிவான இலட்சிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. உற்பத்திச் சாதனங்களையும் பங்கீட்டுச் சாதனங் களையும் கட்டுப்படுத்துகின்ற செல்வந்த வகுப்பின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும் பழமைபேணும் கட்சி உறுதிகொண் டிருக்க, தொழிக்கட்சியானது இதே செயலை தொழிலாளர் வகுப்பிற் காகச் செய்கின்றது.

பிரித்தானியக் கட்சிகளின் முக்கிய இயல்பு அவற்றின் அமைப் பையும் ஒழுங்கையும் பற்றியதாகும். இங்கு கடுமையான கட்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடு இருப்பதால் கட்சிக்கு மாறாக வாக்களித்தல், கட்சி மாறுதல் முதலிய அரசியல் தீமைகளுக்கு இடமில்லை. இங்கு கட்சி முறையில் காணப்படும் சிறந்த அமைப்பும் கட்டுப்பாடான இயல்பும் கபினட் முறையை வெற்றியாகச் செயற்பட உதவுகின்றது. மேலும் இரு அரசியல் கட்சிகள் தங்களுடைய நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறை வேற்றுவதற்கு குடியாட்சி முறைகளையும் சட்ட வரம்பிற்குகந்த முறைகளையும் பின்பற்றுகின்றன.

### பழமை பேணும் கட்சி

பிரித்தானியாவில் மன்னனுக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்ட போராட்டங்களின் முடிவில் பாராளுமன்றத்தை சீர்திருத்த வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. இக்காலத்தில் டோரிக் (Tory) குழுவினர் பழமைபேணும் கட்சியாகவும் விக்குகள் லிபரல் கட்சியாகவும் தோற்றம் பெற்றனர்.

இக்கட்சியில் பெரும்பாலும் நிலப்பிரபுக்களும், திருச்சபை குரு மார்களும், திருச்சபையின் ஆதரவாளர்களான பொதுமக்களும் இதன் ஆதரவாளர்களாக இருந்தனர். பிரித்தானியாவில் கிராமப்புறங்களில் செல்வாக்குப்பெற்ற கட்சியாக விளங்குகின்றது.

இவ்வாறு தோற்றம் பெற்ற கட்சி 1770ஆம் ஆண்டிலிருந்து 1803ஆம் ஆண்டு வரை ஆட்சியைக்கைப்பற்றியது. 1834ஆம் ஆண்டில் இக்கட்சியில் பல மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. 1867இல் இரண்டா வது பாராளுமன்ற சீர்திருத்தத்தை பழமை பேணும் கட்சி அரசாங்கம் கொண்டு வந்தது.

இரண்டாம் உலகயுத்தத்தில் இடம் பெற்ற தேர்தலில் இக்கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1947இல் கட்சியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. 1950 இலும் கட்சி தோல்வியைத்தழுவியது. 1951ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் 48 சதவீதவாக்குகளையும் 321 ஆசனங் களையும் பெற்று கட்சி வெற்றியீட்டியிருந்தது. தொடர்ந்து 1955இல் நடைபெற்ற தேர்தல், 1959இல் நடைபெற்ற தேர்தல் என்பவற்றில் வெற்றியீட்டியது.

இதன்பின் 1964 தேர்தல், 1966 தேர்தல் என்பவற்றில் கட்சி தோல்வியைத்தழுவியது. அதேவேளை 1970ல் வெற்றியீட்டியது. பின் 1974 தேர்தலில் தோல்வியைச் சந்தித்து 1983, 1987 தேர்தலில் தொடர்ச் சியாக வெற்றியீட்டியது. இதன்பின் 1992 தேர்தலில் மட்டுமே கட்சி வெற்றியீட்டியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு பின்னர் 1997, 2001, 2005 தேர்தல்களில் கட்சி தொடர்ச்சியாக தோல்வியைச் சந்தித்தது. கட்சியின் வாக்குவீதம் ஆசன எண்ணிக்கை என்பவற்றிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. தற்போது தொழிற் கட்சியின் செல்வாக்கும் வீழ்ச்சியடைந்து வருவதால் எதிர்காலத்தில் கட்சியின் செல்வாக்கில் மாற்றம் ஏற்படலாம்.

### பழமை பேணும் கட்சியின் கொள்கை

★ விரைவான பொருளாதாரம்:- தனியார் துறைக்கு முக்கியத்துவம் அளித்ததுடன் செல்வந்தர்கள் அதாவது செல்வந்த வர்க்கத்திற்கு அவர்களது அபிப்பிராயத்துக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களது நலனைப் பேணுவதாகக் காணப்படுகின்றது.

★ தேசியமய எதிர்ப்புக் கொள்கை கொண்டது:- போக்குவரத்து, வைத்தியசாலை போன்றவற்றை தேசியமயமாக்கிய போது பழமை பேணும் கட்சி எதிர்த்தது. அத்துடன் தொழிலாளர் கட்சி தனது ஆட்சியின் போது தேசியமயமாக்கியதை இக்கட்சி தனது ஆட்சியின் போது மீண்டும் தனியாராக்கியது. தம்மை அண்டி வாழ்பவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் குடியான் ஒருவன் செல்வத்தை திரட்டுவதாக இருக்க முடியும்.

★ நாட்டின் ஒருமைப்பாட்டை பேணுதல்.

★ நீண்ட காலமாக உள்ள முடியாட்சி, பிரபுக்கள் சபை, திருச்சபை என்பவற்றை பேணுதல்.

★ காலனித்துவ ஆட்சியைப் பலப்படுத்தல் பிற்காலத்தில் காலனித்துவ நாடுகள் சுதந்திரமடைந்துள்ளதால் அதன் அடையாளமாக வுள்ள பொதுநலவாய நாடுகளின் அமைப்பை பேணுதல்.

★ வெளிநாட்டுக்கொள்கையில் முதலாளித்துவ நாடுகளோடு நல்லுறவுகளைப்பேணுதல்.

### பழமை பேணும் கட்சியின் ஒழுங்கமைப்பு

இக்கட்சியானது தனது அங்கத்தவர்களாக செல்வந்த நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினரையே பெரும்பாலும் கொண்டு காணப்படுகிறது. இதன் அங்கத்துவம் நேரடி அங்கத்துவ முறையைக் கொண்டு திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கிளைச்சங்க அமைப்பு :- கட்சியின் ஒழுங்கமைப்பில் அடிமட்ட அமைப்பாக கிராமிய மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட கிளைச் சங்கங்கள் காணப்படுகிறது. கிராமங்களில் வாழ்கின்ற நிலவுடமையாளர்கள், செல்வந்தர்கள் என்போரை உட்கொண்டதாக கிளைச்சங்கங்கள் காணப்படுகின்றது. கிராம மட்டத்தில் கட்சியின் வெற்றிக்காக உழைப்பதை தனது கடமையாக இவை கொண்டுள்ளன.

2. தொகுதி அமைப்பு: கட்சி ஒழுங்கமைப்பில் கிராம மட்டத்திற்கு மேல்மட்ட அமைப்பாக தொகுதி அமைப்பு காணப்படுகின்றது.

3. தேசிய நிர்வாகக்குழு : கட்சி ஒழுங்கமைப்பில் தேசிய நிலமையினைப்பிரதிநிதிப்படுத்துவதாக தேசிய நிர்வாகக்குழு அமைந்திருக்கும். இக்குழுவில் கட்சியின் தலைவர், உபதலைவர், தொகுதிச் சங்க உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் உரிமை பெற்றிருப்பர்.

4. மத்திய செயலகம் : இது தலைநகரில் அமைந்திருக்கும் ஊதியத்துக்கான ஊழியர்களும் கட்சி ஆதரவாளர்களும் இங்கு காணப்படுவர். கட்சியின் கொள்கைகள் தேர்தல் பிரச்சாரம், அச்சிடும் உரிமை என்பவற்றைப் பேணிப்பாதுகாக்கும் ஒன்றாகவும் காணப்படும்.

5. மாநாடு : கட்சியின் ஒழுங்கமைப்பில் வருடா வருடம் நடாத்தப்படும் மாநாடும் முக்கியம் பெறுகின்றது. கட்சியின் தலைமையின் கீழ் இடம்பெறும் இம்மாநாட்டில் பிரதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் காணப்படுவர். இம் மாநாடு கட்சிக் கொள்கைகளை வகுக்கும் இடமாகவும் தேர்தல் விஞ்ஞாபனங்களை தயார்படுத்தும் இடமாகவும் காணப்படும்.

பாராளுமன்ற ஜனநாயகத்தை உலகுக்குக்கற்றுத்தந்த பிரித்தானியாவில் முதன்முதலில் கட்சிகள் தோன்றி வளர்ந்து, இன்று ஏனைய நாடுகளுக்கும் முன் உதாரணமாக விளங்குகின்றது. மந்திரிசபை முறை சார்ந்த அரசியல் முறையைக்கொண்ட இந்த தேசத்தில் இறுக்கமான இரு கட்சி முறையொன்று மிக நீண்ட காலமாகவே பேணப்பட்டு வந்துள்ளது. இதனால் ஜனநாயகமும் சிறந்த முறையில் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. எனினும் 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்த காலங்களில் தொடர்ச்சியாக இங்கு தொழிற்கட்சி ஆட்சியமைப்பதும், சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகக் கட்சி எழுச்சியடைந்து வருவதும், பிரித்தானிய அரசியல் கட்சி முறையின் புதிய போக்குகளாக அமைவதுடன் பிரித்தானிய அரசியற்கட்சி முறைப்போக்கினை வேறு கண்ணோட்டத்தில் ஆராய வேண்டியதன் அவசியத்தையும் தோற்றுவித்துள்ளது என்றுதான் கூற வேண்டும்.

## தொழிற் கட்சி

பிரித்தானியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியில் தொழிற்கட்சி தோன்றியது எனலாம். கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து தொழிலாளர் பெருகவே அவர்களின் பிரச்சினையை அடிப்படையாக கொண்டு தொழிற்சங்கங்கள் உருவாகின.

1900ஆம் ஆண்டுவரை பல்வேறு தொழிற்சங்கங்கள் வளர்ந்திருந்த போதும் தொழிற்கட்சி உருவாகியிருக்கவில்லை. இந்நிலையில் சமதா்ம ஜனநாயக கூட்டமைப்பு, பேபியன் சங்கம், சுதந்திர தொழிற் கட்சி ஆகிய மூன்று சோசலிஷ அமைப்புக்களும் 64 தொழிற்சங்க பிரதிநிதிகளோடு தமது பிரதிநிதிகளையும் இணைத்து தொழிலாளர் பிரதிநிதித்துவக்குழுவை அமைத்தனர். இக்குழுவே 1906இல் தொழிற் கட்சியாக மாற்றம் பெற்றது.

1906ஆம் ஆண்டு தேர்தலில் முதன்முதலாக 50 பேர் தேர்தலில் போட்டியிட்டு 29பேர் வெற்றி பெற்றனர். 1922ஆம் ஆண்டிலிருந்து இக்கட்சி லிபரல்கட்சியின் இடத்தைப் பிடித்துக்கொண்டது. 1924ஆம் ஆண்டு ஜனவரியில் இக்கட்சி முதன்முதலாக அரசாங்கத்தை கைப் பற்றிக்கொண்டது.

## தொழிற்கட்சியின் கொள்கைகள்

உள்ளூர் விடயங்களைப் பொறுத்த மட்டில் இந்த இரண்டு கட்சிகளின் கொள்கைகளும் ஓரளவு ஒன்றாகவே காணப்படுகின்றது. இருந்தும் சில வேறுபாடுகளையும் கொண்டுள்ளது. பழமை பேணும் கட்சியை முற்றாக எதிர்க்கவில்லை. ஆனால் கால சூழ்நிலைக்கேற்ப சில மாற்றங் களை ஏற்படுத்தி வருகின்றது. பழமைபேணும் கட்சி முதலாளித்துவ தன்மையை பேணுகிறது. ஆனால் தொழிற்கட்சி சமவுடமை தன் மையை பேணுகிறது. மேலும் சமவுடமையை பேணுகின்ற கட்சிகளான மாவோயிசம், மாக்சிசம், லெனினிசம், கம்யூனிசம் போன்றனவும் பொதுவுடமைப்பண்பை பேணுகின்றன. (குறிப்பாக 3ம் மண்டல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் தொழிலாளர் நலன் அடக்கப்படுகின்றது. ஆனால் பிரித் தானியாவை பொறுத்தமட்டில் அவ்வாறு இல்லை.) பழமை பேணும் கட்சி முதலாளித்துவத்தை ஏற்றுக் கொண்டாலும் அதற்கு ஒரு வரை விலக்கணத்தையும் கொடுத்தது. 'தம்மை அண்டி வாழ்பவருக்கு இடை யூறு இல்லாத வகையில் குடிமகன் ஒருவன் செல்வத்தை திரட்டலாம்' என்பதாக இருந்தது. தொழிலாளர் கட்சியானது தொழிலாளர்களின் நலனை பேணுவதில் அக்கறையுள்ள ஒன்றாக விளங்குகின்றது. வெளி நாட்டு விடயங்களில் பழமை பேணும் கட்சியுடன் ஒப்பிடும் போது தளர்வடையும் தன்மையை கொண்டதாக காணப்பட்டது. இதற்கு உதாரணமாக காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெறுதல் முற்று முழுதாக பழமையை ஏற்காமல் நவீனத்துவத்துக்கு உட்பட்டு புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி அதன்கீழ் மக்களுக்கு வேலை வாய்ப் பினை வழங்கி தொழிலாளர் நலனை முன்னெடுத்துச் செல்கின்ற கட்சியாக தொழில்கட்சி காணப்படுகின்றது. இந்த வகையில் தொழிற் கட்சியின் கொள்கைகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத் தலாம்.

- ★ பிரித்தானியாவில் தொழிலாளர் ஆட்சியினை கொண்டு வருதல்
- ★ முக்கியமான தொழில் நிறுவனங்களை தேசியமயமாக்குதல் இதனடிப்படையில் 1945, 1951 காலப்பகுதியில் நிலக்கரிச் சுரங்கங்கள் போக்குவரத்து சக்திவளம் வங்கிகள் கப்பல் கட்டுதல் போன்றன தேசியமயமாக்கப்பட்டன.
- ★ சமூகசேவைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்
- ★ உலகில் அணுவாயுத குறைப்பினை மேற்கொள்ளுதல்
- ★ ஜனநாயக சோசலிஷத்தை இலக்காக கொண்டிருத்தல்
- ★ கூட்டுறவு முறையை அபிவிருத்தி செய்தல்
- ★ பிரபுக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை குறைத்தல்
- ★ சேரிகளை ஒழித்து தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளை அளித்தல்.
- ★ வறியநாடுகளுக்கு உதவுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒழுங்கமைப்பு**

தொழிற்கட்சியானது தேசத்தின் பல பகுதிகளிலும் இருந்து அங்கத்தவர்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் மனித ஒழுங்கமைப்பினைக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் சங்கங்கள் அமைப்புக்களினூடாகவே அங்கத்துவம் பெறப்பட்டது. ஆனால் அது தொழிற் கட்சியில் 1918ற்கு முன்னர் மறைமுகமாக காணப்பட்டது. 1918ஆம் ஆண்டிற்குப்பின்னர் மறைமுக அங்கத்துவத்துடன் நேரடி அங்கத்துவ முறையும் இணைந்ததாக காணப்படுகிறது.

1. வட்டார குழு: தொழில் கட்சி அடிமட்ட மக்களின் ஆதரவு கோரி மேற்கொள்ளல்
2. தொகுதி பரிபாலனக் குழு: இது வட்டார குழுவிற்கு மேலாக உள்ளது வருடத்தில் நான்கு தடவைகள் மகாநாட்டைக்கூட்டி கட்சி தலைமைத்துவத்தை தெளிவாக்குகின்றது
3. மேற்பார்வை குழு: ஆலோசனைக்குழு நியமித்தல், ஆய்வு செய்தல், விமர்சனம் செய்தல், அறிக்கை சமர்ப்பித்தல்
4. தலைமைச் செயலகம்: பாராளுமன்ற உறுப்பினர் தொழில் கட்சி தலைவர், உபதலைவர் என்போர் அங்கத்துவம் ஊழியர்களைக் கொண்டமைந்தது. இவை நகரில் காணப்படும். இதில் கட்சி கொள்கை விளக்கம் இது தொடர்பான நூல் என்பன வெளியிடும் உரிமை உண்டு. இதில் ஊழியத்துக்கான நிரந்தர வேலையாட்களை நியமிக்கும் உரிமை உண்டு
5. கட்சிமாநாடு: கட்சி பற்றிய கொள்கை தீர்மானம் என்பன காணப்படும் கட்சி தலைவர் , உப தலைவர் தொழில் கட்சி உறுப்பினர்கள் இதே போன்று பழமை பேணும் கட்சியும் காணப்படுகின்றது.

பாராளுமன்ற ஜனநாயகத்தை உலகுக்கு கற்றுத்தந்த பிரித்தானியாவில் முதன்முதலில் கட்சிகள் தோன்றி வளர்ந்தது. இன்று ஏனைய நாடுகளுக்கும் முன் உதாரணமாக விளங்குகின்றது. மந்திரிசபை முறை சார்ந்த அரசியல் முறையைக்கொண்ட இந்த தேசத்தில் இறுக்கமான இருகட்சி முறையொன்று மிக நீண்ட காலமாகவே பேணப்பட்டு வந்துள்ளது. இதனால் ஜனநாயகமும் சிறந்தமுறையில் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. எனினும் 21ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்த காலங்களில் தொடர்ச்சியாக இங்கு தொழில் கட்சி ஆட்சியமைப்பதும், சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகக் கட்சி எழுச்சியடைந்து வருவதும் பிரித்தானிய அரசியல் கட்சிமுறையின் புதிய போக்குகளாக அமைவதுடன் பிரித்தானிய அரசியல்கட்சி முறைப்போக்கினை வேறு கண்ணோட்டத்தில் ஆராய வேண்டிய அவசியத்தையும் தோற்றுவித்துள்ளது என்றுதான் கூற வேண்டும்.

## ஆ. அமெரிக்காவில் அரசியல் கட்சி முறைமை

ஆரம்பத்தில் கேன்சியா, பென்சீல்வேனியா, நியூயோக், மேரிலண்ட் போன்ற 13 குடியேற்ற நாடுகளும் இணைந்து ஒரு சுதந்திர நாடாக அமெரிக்கா காணப்பட்டது. 18ம் நூற்றாண்டில் 3ம் மன்னனின் அதிகாரம் தொடர்பான ஆட்சி முறை அமெரிக்க மக்களை அவர் மீது வெறுக்க வைத்தது. அதுமட்டுமன்றி 3000 மைல்களுக்கு அப்பால் இருக்கும் பிரித்தானியா தம்மை ஆட்சி செய்வதை அமெரிக்கா விரும்பவில்லை. ஆகவே இவ்வாறான தொரு இழுபறி நிலையில் 1783ஆம் ஆண்டு வேல்ஸ் உடன்படிக்கையின் மூலம் அமெரிக்க சுதந்திரத்தை பிரித் தானியா ஒப்புக் கொண்டது. இதன் பின்னரே தமது நாட்டில் கால சூழ்நிலை தேவைகளுக்கு ஏற்ப யாப்பு ஒன்றினை வரைய வேண்டும் என்ற எண்ணப்பாடு அமெரிக்க மக்களிடையே தோற்றம் கண்டது. ஆரம்பத்தில் அத்திலாந்திக் கரையோரத்தில் உள்ள 13 குடியேற்றங்களில் வாழ்ந்த 4 மில்லியன் மக்களை ஆள்வதற்கு சட்டத்தினை வழங்கிய இந்த யாப்பே எழுதப்பட்ட யாப்புகளுள் மிகவும் பழமையானதாகும்.

### அமெரிக்காவில் இரு கட்சி முறை தோற்றத்துக்கான காரணிகள்

1. மரபுகள், நம்பிக்கைகள் என்ற அம்சமானது ஐக்கிய அமெரிக்கா வில் காணப்பட்டது. இவற்றை மக்கள் மத்தியில் முன்னெடுக் கும் நிலையில் இவை அரசியல் ரீதியிலும் செல்வாக்கு செலுத்த முனைந்தது. இந்நிலையில் மக்கள் தமக்கு உரித்தான ஒரு யாப்பை வரைவதில் இரண்டு வேறுபட்ட கொள்கைகள், சிந்தனைகள் வெளிப்பட்டன. அவை:
   - ★ சமஸ்டியை ஆதரிப்பதாகவும் மற்றையது
   - ★ அதனை எதிர்ப்பதாகவும் தோற்றம் கண்டது. இந்நிலை அமெரிக்காவில் இரு கட்சி முறை தோற்றம் பெறுவதற்கு அடிக்கல் இட்ட காரணியாகக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அமெரிக்க மக்களிடையே வர்க்க முரண்பாடு என்பது காணப்பட வில்லை. அது மட்டுமன்றி பன்முகப்படுத்தப்பட்ட கட்டமைப் பின் ஊடாக அதிகாரம் பகுதி, பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருப்பதும் தாபன இயல்புகள் அதாவது தனி அங்கத்துவ தேர்தல் மாவட்டமும் எளிய பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்கக் கூடிய போக்கும், சமஸ்டி வலு வேறாக்கம், தடைகளும் சம நிலைகளும் என்பவற்றுக்கு ஏற்ப கட்சி முறை செயற்படுவ தோடு ஜனநாயக அம்சங்களுக்கு உத்தரவாதம் அளிப்பதாக கட்சி முறை காணப்பட்டது.

3. அமெரிக்க அரசியல் கட்சிகள் பல விதங்களில் நலன் பேணும் குழுக்களைப் போன்ற தன்னிச்சையான ஒழுங்கமைப்பினைக் கொண்டு காணப்பட்டது. நலன் பேணும் குழுக்கள் அரசாங்க வழிகளில் செல்வாக்கு செலுத்த முயற்சிக்க அரசியல் கட்சிகள் அதிகாரம் மிக்க பதவிகளுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதன் ஊடாக அந்த வழிமுறைகளைக் கட்டுப்படுத்தி அதன் கொள்கைகளை வழிப்படுத்துவனவாகக் காணப்பட்டது.

4. இரு கட்சி முறையின் அதிகாரம் முழுமையாக இரு பிரதான கட்சிகளினால் செயற்படுத்தப்படுவதும் வெற்றி பெறுவதற்கு நியாயமான வாய்ப்புக்களை உடையதுமான சிறிய கட்சிகளிட மிருந்து அல்லது மற்றைய கட்சிகளிடமிருந்து குறைந்த எதிர்ப் புள்ள ஒரு ஜனநாயக அரசியல் மாதிரியினையே இங்கு காணலாம். ஆட்சி செய்யும் வழி முறையில் இன்றியமையாத ஒரு பகுதியே இரு கட்சி முறையாகும்.

## அமெரிக்க கட்சிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

அமெரிக்கா, குடியரசு ஆக்கப்பட்டாலும் கட்சியின் தோற்றத்தினையும், அபிவிருத்தியினையும் 1778க்கும் 1824 க்கும் இடையில் அவதானிக் கலாம். ஆரம்பகாலத்தில் அரசியற் கட்சிகள், மரபுகள், நம்பிக்கைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே தோற்றம் பெற்றன. மரபுகள், நம்பிக்கைகள் என்பன ஒவ்வொரு நாட்டிலும் காணப்படுவது இயல்பு. இதுவே அரசியல் கலாசாரத்தினை உருவாக்க காரணமாகியது. இக் கலாசாரத்தினை ஏனைய மன்னனுக்கும் பரப்ப வரும் போது அது பல மடங்கு அரசியலிலும் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியது. பல வருடங்களாக இப் பண்பு ஐக்கிய அமெரிக்க அரசியல் கட்சியமைப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தி வருவதினை அவதானிக்கலாம். இந்த வகையில் அமெரிக்காவில் இரு வேறுபட்ட மனப் பண்புகளை கொண்ட மக்கள் தோற்றம் பெறுகின்றனர். ஒரு சாரார் ஒரு கொள்கையினை ஆதரிக்க மறுசாரார் அக் கொள்கையினை விமர்சிப்பவர்களாகக் காணப் படுகின்றனர். இதன் விளைவு இரு கட்சி முறை தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் வித்திடுகின்றது என்பதாகும்.

அமெரிக்காவின் சுதந்திரத்தின் முன் குடியரசு யாப்பு ஒன்றினை வரைவதற்கான முயற்சிகளில் மக்கள் ஈடுபட்ட போது அரசியல் சட்ட அடிப்படைக்குரிய அத்திவாரமும் இடப்பட்டது. அதாவது அவ்வப் போது அரசியல் யாப்பானது சமஸ்டி முறையினை கொண்டிருக்க வேண்டுமா அல்லது ஒற்றை ஆட்சியை கொண்டிருக்க வேண்டுமா என்ற விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது தலைவர்கள் இரண்டு பிரிவாக பிளவுற்றதாகவும் ஒரு சாரார் சமஸ்டி வாதியினர் என்றும் மறுசாரார் சமஸ்டி வாதியினர் அல்லாதோர் என்றும் அழைத்துக் கொண்டனர். அரசியல் யாப்பு சமஸ்டி தன்மையினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே சமஸ்டிவாதிகளின் கொள்கையாகக் காணப்பட்டது. அரசியல் யாப்பு ஒற்றை ஆட்சிப் பண்பை கொண்டிருக்க வேண்டும் என்பது சமஸ்டிவாதி அல்லாதோரின் கொள்கையாகும். ஆனால் இவ் இரு அணிகளுக்கிடையேயும் அரசியல் கட்சிகளுக்குரிய எந்தவித ஒழுங்கமைப்பும் இருக்கவில்லை. கட்சிகளின் கீழ் வாக்காளர்களை ஒன்றிணைத்தும் திரட்டியும் இருக்கவில்லை. ஆனாலும் இரு கருத் துக்களைக் கொண்ட தலைவர்களும், மக்களும் தோற்றம் பெற்றனர் என்பது உண்மையாகும். அமெரிக்கா பல அரசுகளைக் கொண்ட குடியரசு என்பதனால் கட்சிகளின் தோற்றம் குடியரசின் ஐக்கியத் தினையும் ஒருமைப்பாட்டினையும் குலைத்துவிடும் என்ற அச்சம் அரசியல் யாப்பை உருவாக்கியவர்களிடம் காணப்பட்டது. ஆனாலும் அரசாங்கம் ஒன்று செயற்படுவதற்கு கட்சிகள் இன்றியமையாதன என்ற நம்பிக்கையும் அங்கு காணப்பட்டது.

1789இல் அமெரிக்கா தனது குடியரசு சமஸ்டி யாப்பினை வரைந்து கொண்டதன் பின்னர் நடை பெற்ற தேர்தலில் சமஸ்டிவாதிகள் மிகவும் பலமானதும் செல்வாக்கு பெற்றதுமான கட்சியாக தம்மை ஒழுங் கமைத்துக் கொண்டனர். அலஸ்டர் கயிட்னர் என்பவர் சமஸ்டி ஆட்சிக்கு தலைமைதாங்கினார். பலமான தேசிய அரசாங்கம் ஒன்றினைத் தோற்று விப்பதனால் சமஸ்டி ஆட்சியில் மிகுந்த அக்கறை காட்டி வந்தனர். ஆனால் இக்காலகட்டத்தில் தோமஸ் ஜெபர்சன் (Thomas Jaffearsan)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கட்சி ஒன்றினை உருவாக்கினார். இக்கட்சி ஜனநாயக குடியரசு கட்சி என அழைக்கப்பட்டது. 1800களில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று இக்கட்சியினை மேலும் பலப்படுத்திக் கொண்டனர். இந்நிலையில் சமஸ்டி வாதிகள் அரசியல் அரங்கிலிருந்து மறையவும் தொடங்கினர். இந்நிலையில் ஜனநாயக குடியரசு அக்கட்சி தனிக்கட்சி ஆட்சியினை அமெரிக்கா கொண்டிருந்தது. ஜெபர்சன் தலைமையிலான ஜனாதிபதி தேர்தலில் தேர்தல் கல்லூரி வாக்குக்களில் 53% - 92% வாக்குகளை தனதாக்கி கொண்டது. 1808- 1828 இடையில் இக்கட்சியில் ஏற்பட்ட பன்மைவாத பிளவு பல பிரிவுகளாக இக்கட்சி பிளவடையக்காரணமாகியது. இதன் விளைவாக 1824இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக்கட்சியும், குடியரசுக்கட்சியும் நான்கு வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிவுபட்டு பிளவடைந்தது. ஆகவே கட்சி களின் வாக்குகள் நான்காகப் பிளவடைந்தன. ஆயினும் ஜெபர்சன் அவர்களே வெற்றி ஈட்டினார். அதே நேரம் இத்தேர்தலில் புதியதொரு தலைவரையும் மக்கள் அடையாளம் கண்டனர். அவர்தான் அன்ரூ ஜக்சன் ஆவார். இவர் இத் தேர்தலில் 37.9 வீதமான வாக்கினை பெற்றிருந்தார். 1828ஆம் ஆண்டு வரை தொடர்ந்தேர்ச்சியாக ஜனநாயக கட்சியின் உள்ளே ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1828 இல் இருந்து ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட பன்மைவாதப் போக்கு கட்சிக்குள் பல பிரிவுகளை உருவாக்கி இருந்தது. இப்பிரிவு 1828ன் பின் கட்சியை இரண்டாக பிளவடைய வைத்தது. ஓர் அணியினர் தம்மை ஜனநாயக வாதிகள் என்றும் (Democratic) மறு அணியினர் தம்மை விக்ஸ் (Whigs) அணியினர் எனவும் வகுத்துக் கொண்டனர். இந்நிலையில் ஜனநாயக அணியானது தன்னை விரைவாக அரசியல் கட்சிகளுக்குரிய பண்புகளுடன் ஒழுங்கமைத்துக் கொண்டது. அதுமட்டுமன்றி 1828இல் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி ஈட்டிக் கொண்டது. அன்ரூ ஜக்சன் இக்கட்சிக்கு தலைமை தாங்கியதுடன் ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றியை ஈட்டிக் கொண்டார். ஜனநாயகக் கட்சியினர் மக்களினது நாளாந்த பிரச்சினையை தேசிய மட்டத்தில் தீர்ப்பதற்கு மக்களுக்கு உறுதியளித்து இருந்தனர்.

1854ஆம் ஆண்டு விக்ஸ் Whigs அணியினரும் ஜனநாயகத்துக்கு அடிபணியாத அணியினரும் சேர்ந்து குடியரசுக் கட்சி என்ற புதிய கட்சியை ஆரம்பித்து வைத்தனர். குடியரசுக் கட்சி 1854இல் தேர்தலில் பங்குபற்றினாலும் வெற்றிபெற முடியவில்லை. ஆனால் 1860இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தனது வேட்பாளராக ஆபிரகாம் லிங்கனை நிறுத்தியது. இவர் 59.4% மான வாக்குகளால் வெற்றி பெற்றார். ஆகவே குடியரசுக் கட்சியின் 1வது ஜனாதிபதியாக ஆபிரகாம் லிங்கன் தெரிவு செய்யப்பட்டார். கடந்த ஒரு நூற்றாண்டாக குடியரசுக்கட்சி, ஜனநாயகக்கட்சி ஆகிய இரு கட்சிகளுமே மாறி மாறி ஆட்சியை அமைத்துக் கொண்டன. இந்நிலையில் 1892இல் Populisty கட்சியினால் இரு கட்சிமுறை போக்கிற்கு ஓர் ஆபத்து ஏற்பட்டது. 1992ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இக்கட்சி 22 தேர்தல் கல்லூரி வாக்குகளால் வெற்றி பெற்றிருந்த போதிலும் இக்கட்சியின் அபாயம் நீடிக்கவில்லை. 1896இல் இக்கட்சியின் மறைவுடன் மீண்டும் இரு கட்சி முறை அமெரிக்காவில் ஏற்படத் தொடங்கியது. 1912ஆம் ஆண்டில் வெல் என்பவர் ஆரம்பித் திருந்த Bull Moose என்ற குடியேற்ற இயக்கம் குடியரசுக் கட்சியை பிளவுபடச் செய்தது.

குடியரசுக்கட்சி பிளவுபட்டமை ஜனநாயகக் கட்சிக்கு தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தமையால் 1912ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வூட்றோவில்சன் வெற்றிபெற முடிந்தது. ஆயினும் 1920ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசுக்கட்சி 1932ஆம் ஆண்டு வரை தொடர்ந்தும் வெற்றியை பெற்றுக் கொண்டது. நவீன ஜனநாயகக் கட்சியின் எழுச்சி 1932இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ருஸ்வெல்ட் என்பவரின் வெற்றியுடன் ஆரம்பமானது. இக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விவசாயம் மற்றும் வர்த்தக துறைகளில் அதிகரித்துச் செல்லும் வேலைவாய்ப்பை நீக்குவதும் வறியமக்களுக்கும் வயோதிபர்களுக்கும் ஆதரவு வழங்கக் கூடிய சமூக, பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவது என்பதில் முதன்மை பெறுகின்றது. அத்துடன் வடபகுதி, தென்பகுதி, வறியமக்களுடனும், தொழிலாளர்களுடனும், இனக்குழுக்களுடனும் தென்பகுதி வெள்ளையின உயர் குழாமினரிடமும், சிறிய விவசாயி களிடமும் உறவுகளை எற்படுத்தி தனது கட்சியை பலப்படுத்திக் கொண்டார். 1932இல் பதவிக்கு வந்த ருஸ்வெல்ட் அறிமுகப்படுத்திய கட்சிகளின் ஒழுங்கமைப்பும் சமூக சீர்திருத்த கொள்கைகளும் கட்சியின் வளர்ச்சிக்கு பெரும் உந்து சக்தியாக அமைந்தது.

இதன் பெறுபேறாக 1932இன் பின் அடுத்து வந்த ஐந்து தசாப் தங்களாக ஜனநாயகக்கட்சி அரசாங்கத்தை அமைத்திருந்தது. இன்னொரு வகையில் கூறின் 1932இல் பதவிக்கு வந்த இக்கட்சி 1948ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிறுகுழுவாதக் கருத்துக்களால் தளம்பல் அடைந்திருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐஸ்நோவர் (Eisenower) என்பவர் வெற்றியீட்டியதுடன் ஜனநாயகக்கட்சி தனது செல்வாக்கை நிலை நிறுத்திக் கொண்டது. இதன்பின்னர் 1956, 1960, 1964, 1972, 1976 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி இருந்தது. மீண்டும் ஏறக்குறைய ஒரு தசாப்தத்தின் பின்னர் 1993இல் பில்கிளின்டன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதன் மூலம் ஜனநாயகக்கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது.

19ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற குடியரசுக்கட்சி பல சிறப்பான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இக்கட்சிக்கு அமெரிக்காவின் வட பிரதேசத்தில் அதிக செல்வாக்கு காணப்பட்டாலும் தென்பகுதியில் வாழும் விவசாயிகள் மீதும் அக்கறை கொண்டதாக இருந்தது. 1860 முதல் 1870 வரை இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் அமெரிக்காவின் தேசிய அரசியலை இக்கட்சியே தீர்மானித்தது. இவ் யுத்தத்தைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவினை கட்டியெழுப்பும் காலம் எனப் பிரகடனப்படுத்தி அதனைச் செயற் படுத்தி வெற்றியும் கண்டது. அதுமட்டுமன்றி அமெரிக்கா உலகத்திலே சிறந்த கைத்தொழில் பலம் பொருந்திய நாடாக அபிவிருத்தியடைவ தற்கான முன்னோடி வேலைத்திட்டங்களை இக்கட்சி உருவாக்கியது வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளையும் கொள்கைகளையும் வகுத்துக் கொண்டது. வர்த்தகம் தொடர்பாக இக்கட்சி வகுத்த கொள் கையை உலகில் அமெரிக்கா தனி அந்தஸ்தை உருவாக்கியிருந்தது. 1920களிலும் 1930களிலும் தலையிடாக் கொள்கையினைக் கடைப் பிடிப்பதில் ஆர்வம் காட்டி வெற்றியும் பெற்றது.

ஐக்கிய அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் தென் பகுதி மாநிலங்கள் ஜனநாயகக்கட்சிக்கு ஆதரவு வழங்கும் நம்பகமான பிரதேசமாக மாறின. உள்நாட்டு யுத்தத்தின் முன்னரும் பின்னரும் தேசிய அரசாங்கத்தை அமைத்த இக்கட்சி தென்பகுதியில் வாழ்ந்த பணம் படைத்த உயர் குழாமினரின் ஆதரவினை பெறுமளவிற்கு வலிமை கொண்டது. வட அமெரிக்காவில் குடியேறிய பணம் படைத்த ஐரீஸ் மக்களையும் தம்முடன் இணைத்துக் கொள்ளுமாறு கூறி இருந்தது. இவ் அமெரிக்க ஐரீஸ் மக்களில் பெரும்பான்மையானோர் புரட்டஸ் தாந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக காணப்பட்டனர். ஆகவே இந்த ஐரீஸ் மக்களை தம்முடன் இணைத்துக் கொள்வதற்காக இம்மக்களுக் கான வேலைவாய்ப்பினை வழங்குவதாக உறுதியளித்தது. மேலும் தேவையான வீட்டு வசதிகள் உணவு வசதி என்பவற்றை ஏற்படுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தன. இவற்றின் மூலம் இம்மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதே ஜனநாயகக் கட்சியினரின் நோக்கமாக இருந்தது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேலை அற்றோருக்கும் வறிய மக்களுக்கும் உதவுதல் தொழிற்சங்கங்கள் வளர உதவியளித்தல் போன்ற சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில் இக்கட்சி ஈடுபட்டது. ஐக்கிய அமெரிக்கா வின் அரசியலில் இனம் அல்லது பிரதேசம் வகித்து வந்த முக்கியத்து வத்தை நீக்கிய நிலையில் சமூக வர்க்கப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதனை நீக்குவதற்கான முயற்சியையும் இக்கட்சி ஏற்படுத்தியது. இதன் முன் ஏற்பாடாக

கறுப்பு இன மக்களுக்கு சமூக குடியியல் உரிமைகளை வழங்கி யதுடன் அவர்களின் வாழ்க்கையையும் சீரமைத்துக் கொள்ள வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

## அமெரிக்காவில் கட்சி ஒழுங்கமைப்பு

அமெரிக்க அரசியல் கட்சிகள் மிகவும் சிறப்பாக பரவலாக்கப்பட்ட அமைப்பினைக் கொண்டதாகும். ஒவ்வொரு கட்சியும் படிநிலை ஒழுங்கமைப்புப் போன்று மூன்று மட்டங்களாக ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது.

1. தேசிய மட்ட அமைப்பு
2. மானில மட்ட அமைப்பு
3. உள்ளூர் அமைப்பு

ஒவ்வோர் அரசியல் கட்சி பற்றியும் பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு தேசிய மட்ட அமைப்பினையும், மானிலமட்ட அமைப்பினையும், உள்ளூர் மட்ட அமைப்பினையும் ஒன்றுபடுத்தியே நோக்க வேண்டும். தேசிய அரசுப் பேரவை (இரண்டு கட்சிகளுக்கும் பொது) ஒவ்வொரு நான்கு வருடத்திற்கு ஒரு தடைவ கூட்டப்படுகின்றது. இக்கூட்டத் தொடரில் இரண்டு முக்கிய விடயங்கள் கருத்தில் எடுக்கப்படுகிறது.

1. கட்சியின் கோட்பாட்டை எழுதிக் கொள்வது.
2. ஜனாதிபதி வேட்பாளரையும் உப ஜனாதிபதி வேட்பாளரையும் தேர்ந்தெடுப்பது.

ஜனாதிபதி வேட்பாளர் கட்சியின் பேரளவு தலைவராக ஏற்றுக் கொள்ளப்படுகின்றார். 1974 தொடக்கம் ஜனநாயகக் கட்சி ஒவ்வொரு 4 வருடங்களுக்கு ஒருமுறை கூட்டப்படும் தேசிய பேரவையின் கூட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினை இடைப்பட்ட காலத்தில் கூட்டி வருகிறது. இக்கூட்டங்கள் சிறிய அளவிலான கூட்டங்களாகவே நடைபெறுகின்றது. இவ்வாறான சிறிய கூட்டங்களால் கட்சிக் கொள்கைகளை மீள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கும் தீர்மானங்களை வரைவதற்கும் உதவியாக காணப்படுகின்றது. தேசிய தலைமையையே ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். இவர் தேசிய நிர்வாக குழுவிலிருந்து தெரிவு செய்யப்படுவார். ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். இவர் கட்சியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது. முக்கியமாக சிலர் கட்சியில் ஐக்கிய சின்னமாக மட்டுமே இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் இவர் கட்சியுடன் மாத்திரம் நெருக்கமான உறவு கொண்டிருக்கக் கூடாது. இவரின் கடமைகள் அரசியல் திறமையுடன் தொடர்புபட்டு தேசிய தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

தேசிய கட்சியின் நிர்வாகக் குழு தமது உறுப்பினர்களை பின்வரும் அலகுகளில் இருந்து தெரிவு செய்கிறது. மாநிலக்கட்சித் தலைவர்கள், ஆளுனர்கள், காங்கிரசின் அங்கத்தவர்கள் ஆகியோர் இக்குழுவில் அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்படுகிறார்கள். மேலும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஆண் ஒருவர், பெண் ஒருவரும் எனும் வகையிலும் தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்கள் ஏறக்குறைய வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரு முறை கூட்டத்தைக் கூட்டிக் கொள்வார்கள். ஆனால் இவர்களின் கொள்கை தொடர்பாக எந்த விடயங்களும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. பழமையான சட்டவிதிகளுக்கேற்ப நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படும்.

### மாநில மட்ட அமைப்பு

ஒவ்வொரு மாநிலங்களிலும் உள்ள அரசியற் கட்சிகள் ஏறக்குறைய ஆறு கட்சிப் பிரிவுகளைக் கொண்டிருக்கும். இவ்வாறு கட்சிப்பிரிவுகளுக்கும் தலைமையாக இருப்பது மாநிலக்கட்சி குழுவாகும். இம் மாநிலக்கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் வழமையாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூடுகின்றார்கள். சில இடங்களில் மாநில முதல்வர் முக்கியமானவராக காணப்படுகின்றார். மாநில முதல்வரின் செயற்பாடு தேசிய முதல்வரைப் போல் இல்லாவிடினும் இவரின் செயற்பாடுகள் மாநில மட்டத்தில் மிகவும் மதிக்கப்படுகின்றது. மாநில முதல்வரை தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் போது அவரின் கட்சி ஆளும் உரிமையினை அல்லது சட்ட சபையினை முழுமையாக கட்டுப்படுத்தும் உரிமையையும் பெற்றுக் கொள்கிறது. மானில முதல்வர்கள் மாகாணங்களில் உள்ள தலைவர் களுடன் நல்லுறவைப் பேணிவருதல் வேண்டும். இதன் மூலமே முதல்வர் தனக்கு தேவையானதை பெற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு மாகாணங்களும் நகரங்களில் இருந்து தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு உருவாக்கப்படுகின்றது. மாகாண நிர்வாக குழுவின் அங்கத்தவர்களுக்கு ஆசனங்களையும் வாக்குகளை யும் பங்கிடுவதற்கு வெவ்வேறுபட்ட முறைகள் கையாளப்படுகின்றன. அத்துடன் மாகாண பிரதேச கட்சிப் பிரிவுகள் ஏற்படும் போது கட்சி மட்டங்களின் ஊடாக வாக்காளருடன் நெருங்கிய தொடர்பு ஏற்படு கின்றது. இங்கு தேசிய, மானில, உள்ளூர் மட்டங்களிலும் போட்டி யாளர்கள் வாக்காளருடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதும் இதற்கான தந்திரோபாயங்களும் தீர்மானிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சிறு பகுதிகளும் கட்சி சுறுசுறுப்படையத் தொடங்கும் போது கட்சி ஒழுங்கமைப்பில் எல்லாமட்டத்திலும் இது பரவிவருகின்றது. இந்நிலையானது ஐக்கிய அமெரிக்காவின் கட்சி ஒழுங்கமைப்பையும் கட்சிமுறை செயற்பாட்டையும் வழிப்படுத்துவதாக காணப்படுகின்றது.

அமெரிக்கா உலக வல்லரசு நடாத்துகின்றது. புதிய உலக ஒழுங் கில் அமெரிக்காவின் மேலாதிக்கம் உலகளாவிய ரீதியில் பரந்து காணப் படுகின்றது. இதனால் அமெரிக்காவில் ஸ்திரமான கட்சி அரசியல் அவசியமானதாகும். இதன்படி இன்றைய நிலையில் பெரும் பொரு ளாதார பின்னடைவை சந்தித்திருக்கும் அமெரிக்க ஜனநாயக கட்சியின் ஆட்சியில் பராக் ஒபாமாவின் அமோக வெற்றி அமெரிக்காவின் சிறந்த ஜனநாயக பின்னணியை முன்னெடுத்துச் செல்லும் என்றுதான் கூற வேண்டும். அதேவேளை குடியரசுக் கட்சியும் நாட்டிற்கு பல தலைவர் களை தேடித்தந்த கட்சி என்ற அடிப்படையில் அதன் செல்வாக்கு பெருமளவிற்கு சரியவில்லை. எனவே அமெரிக்காவின் எதிர் காலத் திலும் இரு கட்சி முறை பலமடையும் என்றுதான் கூறவேண்டும்.

## இ. இந்தியாவில் கட்சிமுறை

இன்றைய உலக நாடுகளில் அரசியல் கட்சிகளினூடாக நடத்தப்படு கின்ற ஆட்சிமுறையையே காணக்கூடியதாக உள்ளது. அரசியல் அதி காரத்தை கைப்பற்றும் நோக்கில் ஒழுங்கமைப்பு ரீதியாக செயற்படும் மக்கள் கூட்டத்தையே அரசியல் கட்சிகள் எனலாம். இன்றைய உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் உள்ள கட்சிகளை அவற்றின் நன்மைகளை அடிப் படையாகக் கொண்டு பல வகையாகப் பிரிக்கலாம். இந்த வகையில் ஆபிரிக்க பிரதேசங்களிலும் கம்யூனிச நாடுகளிலும் தனிக் கட்சிகளின் செல்வாக்கை அவதானிக்கலாம். பாராளுமன்றமுறை வளர்ச்சியடைந் துள்ளது. பிரித்தானியாவிலும், அமெரிக்காவிலும் இரு கட்சிமுறையின் செயற்பாட்டைக் காணலாம். பிரித்தானியாவை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படும் சில அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் இரு கட்சிமுறையே நடைமுறையில் உள்ளது. வேறு சில ஜனநாயக முறை நிலவும் நாடுகளிலும் பல கட்சிமுறை நடைமுறையில் உள்ளது.

இவ்வாறு கட்சி முறையில் பல பிரிவுகள் காணப்படினும் இந்தியா வின் அரசியல் கட்சி முறையை விளக்க இந்த கட்சிமுறை வகையில் எந்தவொரு முறையும் பயனுடையதாகவில்லை. 1947இல் இந்தியா சுதந்திரம் பெற்ற போது பிரித்தானியாவின் மாதிரியை அடியொற்றி இரு கட்சி முறையை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற அரசாங்க முறையை நடைமுறைக்கு கொண்டு வந்தது. ஆனால் இந்திய அரசிய லில் இருகட்சி முறைக்கு பதிலாக பல கட்சிகளின் செயற்பாட்டில் இன்றைய சகாப்தம் வரை நடந்த பொது தேர்தல்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். எனினும் இந்திய அரசியலில் பல கட்சிகளின் செயற் பாட்டை காணக்கூடியதாக இருப்பினும் இங்கு நிலவும் கட்சி முறை யினை பிரான்சில் நிலவும் கட்சிமுறை போன்று பல கட்சிமுறை என வரையறுக்கமுடியாது. ஏனெனில் இங்கு பல கட்சிகளுக்கிடையே போட்டித்தன்மை காணப்படவில்லை. பல கட்சிகள் என்னும் போது இரண்டிற்கு மேற்பட்ட கட்சிகள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் செயற்பட வேண்டும். ஆனால் இங்கு இவ்வாறானதோர் நிலை காணப்படவில்லை.

### இந்தியாவின் கட்சிமுறையின் வளர்ச்சி

இந்தியாவின் அரசியல் கட்சிகள் இந்திய சுய ஆதிக்கமும் உலகில் பெரிய ஜனநாயக நாடாகவும் காணப்படுவதோடு அதேவேளை அது ஒரு தல அரசியல் கட்சியுடன் பல்வகைப்பட்டது. அதனால் தன்னலம் மிக்க சிறு அரசியல் கட்சிகளுடனும் கூடிய ஒரு சமஷ்டி முறை கொண்ட நாடாகும். எனவே இந்தியாவினுடைய அரசியற் கட்சி பற்றிப் பார்க்கும் போது அவற்றின் தோற்றம் வளர்ச்சி என்பன இந்தியாவின் சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் இருந்தே அவதானிக்க முடிகின்றது. இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதனாலும் பாரிய நிலப்பரப்பைக் கொண்டிருப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனாலும் அதிக சனத்தொகையை கொண்டிருப்பதனாலும் அங்கு பல அரசியல் கட்சிகள் தோற்றம் பெற வாய்ப்பளித்தது. பல அரசியல் கட்சிகள் இந்தியாவில் காணப்பட்டாலும் அவற்றின் தோற்றம், வரலாறு ஒரு தனிக் கட்சியின் ஆதிக்கத்துடனும் அவற்றின் செல்வாக்குடனுமே வளர்ந்து வந்ததை அறியலாம். எனவே இந்தவகையில் பார்க்கும் போது 1885ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற இந்திய தேசிய காங்கிரசின் ஊற்றி லிருந்தே ஏனைய கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டதாக உள்ளது. 1885ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசானது 1947ஆம் ஆண்டு சுதந்திரத்தினை அடையும் வரை இந்தியா சுதந்திர விடுதலைப் போராட்டத்திற்காக வழிநடத்தப்பட்ட அமைப்பின் கீழே காணப் பட்டது. அதாவது வேறுபட்ட சித்தாந்தங்களையும் கொள்கைகளையும் ஒன்றுபடுத்தி ஆட்சிக்கான சேவையைப் புரிவதற்கும் ஒரு முகமாக செயற்படுவதற்கும் வழிவகுத்தது. ஆனால் சுதந்திரம் கைக்கெட்டும் நேரத்தில் சித்தாந்தம் தனிமனித வேறுபாடுகள், மதக் கொள்கைகள் என்பன தலை தூக்குவது தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்பட்டது. இறுதியில் இத்தகைய வேறுபாடுகள் இந்தியா காங்கிரசில் இருந்து வெளியேறுவதற்கு காரணமாகியது.

1947ஆம் ஆண்டு தேசிய காங்கிரசில் முதன் முதலில் ஒரு பிளவு நிலை ஏற்பட்டது. இந்த பிளவு நிலை சோசலிசக் கட்சி உருவாக்கத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இதன் பிற்பாடு தனிநபர் வேறு பாடுகள் இந்தியாவின் பெரிய மானிலமாகிய உத்தர பிரதேசத்தில் சரன்சிங்கிற்கும் காங்கிரசிற்கும் இடையில் முறிவு ஏற்பட்டது. இம் முறிவானது 1967இல் பாரதிய ஜனதாக்கட்சி என்கின்ற கட்சி நிறுவு வதற்கு வழி கோலியது. இதே போன்று சித்தாந்த ரீதியானதும் பிரமுக ரீதியான ஒன்றிணைப்பும் 1969ஆம் ஆண்டு காங்கிரசில் ஒரு பாரிய பிளவினை ஏற்படுத்தியது. இந்தப் பிளவானது காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கியது. ஆகவே ஜனதா தளம் கம்யூனிசக்கட்சி மற்றும் சில மாணவ பிராந்தியக் கட்சிகளை விட ஏறத்தாழ சகல இந்தியக் கட்சிகளும் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிளவுபட்டதாலும் வெளி யேறியதாலும் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக காணப் பட்டது.

எனவே தான் இந்திய அரசியல் கட்சி பற்றி ஆய்வு செய்கின்ற ஆய்வாளர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் பற்றி முதன்மைப்படுத்திய தலையாய கட்சிப் போக்கின் மூலம் ஆய்வு செய்கின்றனர். ஆயினும் அண்மைக்கால இந்திய அரசியலில் ஏற்படுத்திய மாற்றங்களில் இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்சிகள் பற்றிய ஆய்வில் மறு ஆய்வு செய்ய வேண்டிய அவசியத்தினையும் தேவையினையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசியல் கட்சி பற்றி அரசியல் அமைப்பில் முக்கியத் துவம் வழங்கவில்லை. மிகச் சிறியளவு அந்தஸ்துக்களே வழங்கு கின்றது. கட்சி வேட்பாளர்களுக்கு அதேயளவு சட்ட ரீதியான உரிமை களும் பொறுப்புக்களும் சுயேட்சை வேட்பாளருக்கும் வழங்கப்பட் டிருக்கின்றது. இதன்படி நியாயமான வரையறைகள் நீதிவரம்புகள் அறிக்கை செய்யும் நிபந்தனைகள் இவை யாவும் கட்சி வேட்பாளருக்கும் சுயேட்சை வேட்பாளருக்கும் ஒரேமாதிரியாகவே வழங்கப்பட்டுள்ளது. எனவே அரசியல் அமைப்பில் அரசியல் கட்சிகளுக்கு கூடியளவு முக்கியத்துவம் வழங்கப்படாமல் இருந்தபோதும் இந்திய அரசியலில், அரசியல் கட்சியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் தென் னாசிய பிராந்தியத்தில் அரசியல் கட்சிகள் பற்றி மையப்படுத்தி பேசக் கூடியளவிற்கு இந்திய அரசியல் கட்சிகள் காணப்பட்டது அவற்றின் சிறப்புத் தன்மையே எனலாம்.

## இந்திய கட்சிகளின் ஒழுங்கமைப்பு

இந்திய அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை சந்தா செலுத்தும் உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொதுஜன ஒழுங் கமைப்பில் காணப்பட்டது.

1. காங்கிரஸ் கட்சி
2. கம்யூனிச கட்சி
3. ஜனதா தளம்

முதலான கட்சிகள் நீண்ட காலமாகவே இத்தகைய கட்சி ஒழுங்கமைப் பின் ஊடாக மக்கள் ஆதரவில் தங்கியுள்ளது. இந்திய அரசியல் கட்சிகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் போது கட்சிகளை 2 பிரதான பகுதிகளாக பிரித்து ஆய்வு செய்யலாம். அவையாவன

1. தேசிய கட்சிகள்
2. பிரதேச கட்சிகள்

தேசிய கட்சி என்ற அந்தஸ்தினை ஒரு கட்சி பெற வேண்டுமெனில் அக்கட்சியானது சில மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். இந்திய தேர்தல் ஆணையகம் 1957ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இருந்து கொண்டுவந்துள்ளது. இதன்படி ஒரு கட்சி முன்னைய பொதுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலில் 4% வாக்குகளையும் குறைந்தது 4 மானிலங்களில் பெற்றிருந் தால் அதனை தேசிய கட்சியாக கணிப்பிடுவது என முடிவெடுக்கப் பட்டது. இதன் பிரகாரம் இந்தியாவின் தேசிய கட்சியாக காங்கிரஸ் கட்சி பாரதிய ஜனதாக்கட்சி மாக்சிசக் கட்சி ஆகிய கட்சிகளைக் குறிப்பிடலாம். மேற்படி 4% தேசிய வாக்குகளைப் பெறாத ஏனைய கட்சிகள் பிரதேச கட்சிகளாக அடையாளம் காட்டப்படுகின்றது. அவை களில் முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தேசிய மகாநாட்டுக்கட்சி, சிரோமணிஅகாலிதள் கட்சி, சிவசேனை, தமிழ் மானிலக் கட்சிகள் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

## இந்தியாவின் கட்சி முறையில் இந்திய தேசிய காங்கிரஸ்

இந்திய தேசிய காங்கிரஸ் 1885ஆம் ஆண்டு அலன் அக்டோவியன் கியூம் அம்மையாரால் ஆரம்பிக்கப்பட்டது. கியூம் (A.A. Hume) அவர்கள் இந்திய தேசிய காங்கிரசை உருவாக்குவதற்கு ஏன் முன்வந்தார் என நோக்கும் போது 2 முரண்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. அதாவது கியூம் அவர்கள் இந்திய தேசிய காங்கிரசை வழி நடத்தி அதன் மூலம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவர் என்றும் மறுபுறம் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை உருவாக்குவதன் மூலம் ஆங்கிலேயரின் மேலாதிக்கத்தையும் அவர்களது குடியேற்றவாத கொள்கைகளையும் தொடர்ந்து இந்தியாவில் நிலைத்திருப்பதற்கு ஒரு தளமாக இந்திய தேசிய காங்கிரசை அமைத்தார் என்றும் முன்வைக்கப்பட்டது. எவ்வாறு இருந்தபோதும் கியூம் இந்திய தேசிய காங்கிரசை உருவாக்கிய முன் நோக்கமானது இந்தியாவில் காணப்பட்ட முரண்பாடான கொள்கைகள், சித்தாந்தங்கள், பாமர மக்களின் செயற்பாடுகள், மதம், பிரதேச ரீதியான வேறுபாடுகள் என்பவற்றுக்கு அப்பால் இந்திய மக்களை ஒன்று திரட்டி அதன் மூலம் ஆங்கில ஏகாதிபத்திய கொள்கைகளை மக்களுக்கு பரப்புவதற்கும் ஆங்கில மொழிப் பண்பாடு கலாச்சாரம் என்பனவற்றை இந்திய மக்களுக்கு ஊட்டி அவர்களை எப்போதும் தங்களது குடியேற்ற வாதக் கொள்கைகளுக்கு ஆளாக்குவதையே கியூம் அவர்கள் மும்முர மாக சிந்தித்தார். ஆனால் இவர் உருவாக்கிய இந்திய தேசிய காங்கிர சானது இவரது உள்நோக்கத்துக்கு அப்பால் சிதறிக் கிடந்த சித்தாந்தங் களையும் மக்களையும் ஒன்று திரட்டி இவர்களூடாக இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை வழிநடத்துவதற்கு இந்திய தேசிய காங்கிரசை ஒரு முக்கிய தாபனமாக ஆக்கினார். எனவே கியூம் அவர்கள் உருவாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தேசிய காங்கிரசானது இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் கட்சியாக ஊற்றெடுத்தது.

ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரசானது ஓர் அமுக்கக்குழு வாகவும் பின்னர் ஒரு தேசிய இயக்கமாகவும் இறுதியாக ஓர் அரசியல் கட்சியாகவும் தன்னை உருவெடுத்துக் கொண்டது. 1885ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25ஆம் திகதி உருவாக்கப்பட்ட இந்திய காங்கிரசானது இந்திய பெரும் தலைவர்கள் டீ.பு. திலகர், கொகலே ஆகிய இரு வரினாலும் வழிநடத்திச் செல்லப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களிலும் காங்கிரசின் தத்துவம் அதன் மாற்றம் என்பவை பற்றி கடுமையான போராட்டம் இந்த 2 தலைவர்களுக்கிடையிலும் ஏற்பட்டது.

G.K. கொகலே என்பவர் மேற்கத்தேயப் பாரம்பரியத்தில் உயர் கல்வி புலமை பெற்றவரும் இந்தியாவில் மேற்கத்தேய சிந்தனை களையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டும் என்று நம்பினார். அவர் காங்கிரசின் மிதவாதப் பிரமுகர்களையும் மதசார்பற்ற குணாம்சத்தையும் பேணுவதற்காக போராடினார். இவர்கள் இருவரிலும் திலகர் என்பவர் கடுமையான அடிப்படை தீவிரவாதியாவார். இவர் இந்து வேதாந்தத்தில் பிரபலமான வித்தகர். இவர் காங்கிரசை இந்துப் பாரம் பரிய வழியில் வழிநடத்தி பொதுமக்களை தேர்ந்தெடுப்பதில் காங்கிர சின் ஆற்றலை விரைவுபடுத்தவும் காங்கிரசை ஒரு அதிதீவிரவாத இந்து தாபனமாக மாற்றம் செய்வதற்கு வேட்கை கொண்டிருந்தார். காங் கிரசுக்குள் இந்த இரு தலைவர்களிலும் அடிப்படைக்கருத்துக்கள் அவரது நோக்கங்கள், கொள்கைகள் மிகவும் ஆழமாக பாதித்திருந்தது. ஆனால் இதே சந்தர்ப்பத்தில் காங்கிரசை புதிதாக வழிநடத்திச் செல்வ தற்கு புதியதொரு தலைமைத்துவம் தோற்றம் பெற்றது.

காங்கிரசின் புதிய தலைமைத்துவத்தினை மகாத்மாகாந்திய வர்கள் 1920ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். இவர் 1948ஆம் ஆண்டு படுகொலை செய்யப்படும் வரை மிகவும் தலைசிறந்த தலைமைத்து வத்தினை பெற்றதோடு காங்கிரசை சிறப்பாகவும் வழிநடத்தி வந்தார். ஒரு குடை நிழல் தாபனமாக காங்கிரசை வடிவமைத்து சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் பல்வேறு நடவடிக்கைகளையும் வழிநடத்திச் செல்வதற்கு காங்கிரசானது அதன் மதச் சார்பற்ற குணாம்சத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றும் காந்தி திடமாக நம்பி இருந்தார். ஆனால் சுதந்திரப் போராட்டத்தில் வெகுவாக பங்களிப்பு ஒன்றினைத் திரட்டுவதிலுமே இந்தக் காங்கிரசானது தங்கியுள்ளது என்பதையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரசின் தலைமைப் பதவியில் காந்தி இருந்து வந்த காலம் முழுவதும் மதச் சார்பற்ற கொள்கைக்கான பொறுப்புடன் இந்து வெகு ஜனத்தை ஒன்றுதிரட்ட வேண்டிய அவசியத்தையும் சமநிலைப்படுத்து வதற்கு அவர் போராடினார். எவ்வாறாயினும் முடிவில் மேலாதிக்க முறையில் இந்து குணாம்சம் கணிசமானளவு முஸ்லிம் பிரமுகர்களை மேற்கண்டவாறு அச்சுறுத்தியதால் இந்திய சுதந்திரம் நாட்டின் பிரி வினையை நிலையாகப் பெற வேண்டியதாயிற்று.

காந்தியின் தலைமைத்துவமும் அவரது தத்துவமும் சுதந்திரத் தின் பின்னரான கட்சியின் மீது ஆழமான அம்சத்தினை விட்டுச் சென்றது. இந்து வெகுஜனத்தால் காந்தியை ஒரு ஞானி எனவும் உலகளாவிய ரீதியில் அவரை ஒரு மகாத்மா என்றும் அழைத்தார்கள். அவருடைய அகிம்சை என்ற தத்துவமும் வியூகமும் ஒத்துழையாமை இயக்கமும் ஆத்மசக்தியை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே மதச்சார்பின்மை வெகுஜன பங்களிப்பு, கிராமியத்தன்னிறைவு, மோச மான இந்து சாதிப் பாகுபாடு போன்ற அம்சங்களை சீர்திருத்தம் செய்வ தில் காந்தியின் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் இன்று நவீன காங்கிரசின் பலத்த ஆதரவாக தொடர்ந்தும் இருந்துவருகின்றது.

### காந்தியின் பங்களிப்பு

1948ஆம் ஆண்டு காந்தி அவர்களது படுகொலையையடுத்து புதிய தலைமைத்துவம் உருவாக்கப்படுகிறது. அதாவது ஜவகர்லால்நேரு, சர்தார் வல்ல பட்டேல் ஆகிய இரு தலைவர்களும் இந்திய தேசிய காங்கிரசினை வழிநடத்துவதில் முன் நின்று உழைத்தவர்கள். நவீன இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்கள் இந்தியாவின் 1வது தேர்தலை எதிர் கொண்ட போது மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடைய வர்களாகவும் மக்களிடம் விசுவாசம் உள்ளவர்களாகவும் காணப்பட்டார் கள். இதனால் காங்கிரசின் முதல் சுதந்திர அரசாங்கத்தினை நேருவின் தலைமையில் அமைக்கப்பட்டது. அத்துடன் அந்நிய சுதந்திர போராட் டத்தினை காங்கிரஸ் வழிநடத்திய விதம், இந்தியாவின் சுதந்திரம் இவ்வமைப்பினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலை ஆகிய காரணங்கள் இதனை அடுத்து வந்த் தேர்தல்களிலும் மக்கள் மத்தியில் செல்வாக் கினைப் பெற அடிப்படையாக இருந்தது. இதனை மையமாக வைத்துக் கொண்டு இந்திய தேசிய காங்கிரசானது தொடர்ச்சியாக வெற்றியை ஈட்டிக் கொண்டது. அதாவது 1952ஆம் ஆண்டு இந்திய பொதுத் தேர்தலில் 364 தொகுதிகளிலும் 1957ஆம் ஆண்டு தேர்தலில் 371

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகளிலும் காங்கிரஸ் தொடர்ச்சியாக வெற்றிபெற்றுக் கொண்டு வந்தது. இதனால் இந்திய அரசினை தீர்மானிக்கின்ற ஓர் ஆதிக்க சக்தியாக இந்திய தேசிய காங்கிரசானது காணப்பட்டது. இதன் காரண மாகத் தான் இந்தியாவின் அரசியல் கட்சி பற்றிய ஆய்வானது ஒரு கட்சி ஆதிக்கமுடையதாக ஆய்வு செய்கின்றன.

ஆனால் இந்தியாவில் இந்திய தேசிய காங்கிரஸ் மட்டும் தான் செயற்படுகின்றது என்பதாக கூறமுடியாது. அங்கு ஏனைய கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுவதும் சில உறுப்பினர்களை தாங்கள் பெற்றுக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் இங்கு சிறிய கட்சிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய அந்தஸ்தினை அடையவில்லை. ஏனெனில் காங்கிரசைத் தவிர ஏனைய கட்சிகள் குறைந்தளவு தொகுதிகளில் மாத்திரம் வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிட்டன. இந்த வகையில் இந்தியக் கம்மியூனிச கட்சி 1952ஆம் ஆண்டு தேர்தலில் 49 தொகுதிகளிலும் ஜனசங்கட்சி 93 தொகுதிகளிலும் போட்டியிட்டதையும் 1957ஆம் ஆண்டு தேர்தலில் கம்யூனிசக் கட்சி 108 தொகுதிகளிலும் ஜனசங்கட்சி 130 தொகுதிகளிலும் போட்டியிட்டது. இதனை அடுத்து வந்த தேர்தல்களிலும் இவ்விருகட்சிகளும் 137 தொகுதிகளிலும் ஜனசங்கம் கட்சி 198 தொகுதிகளிலும் போட்டியிட்டுக் கொண்டது. எனவே மேற்படி தரவுகளின் மூலமாக இந்தியாவின் பொதுத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரசானது, பங்கு தொகுதி களிலும் வெற்றியினைப் பெற்று தமது ஆதிக்கத்தினை நிலைநாட்ட ஏனைய கட்சிகள் குறைந்தளவு தொகுதிகளில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த வகையில் அகில இந்திய ரீதியில் காங்கிரசைத் தவிர ஏனைய கட்சிகளும் செல்வாக்கு செலுத்துவதை அவதானிக்க முடி கின்றது. அது மட்டுமின்றி ஏனைய கட்சிகள் நிலைநிறுத்திய வேட் பாளர்களின் எண்ணிக்கையினை அளவிடும் போது ஏனைய கட்சிகள் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றும் நோக்கில் செயற்படவில்லை என்பதும் புலனாகின்றது. எனவே இவற்றிலிருந்து நாங்கள் நோக்கும் போது இந்தியாவின் காங்கிரசானது மாற்றீடாக இன்று பொது வளம் பொருந்திய அரசியல் கட்சி ஒன்று மக்களால் உருவாக்கக் கூடியளவிற்கு காங்கிரசினது செயற்பாடுகள் அமைந்திருந்ததை நாங்கள் அவதானிக் கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தனிக்கட்சியாதிக்கத்துக்கான காரணிகள்

இந்திய தேசிய காங்கிரஸ் ஆனது தனது கடந்தகாலக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக இந்திய அரசியல் ஒரு கட்சியினுடைய ஆதிக்கமானது நிலைநிறுத்தப்பட்டு வந்துள்ளது என்பதை விளக்கிக் கூறிய அரசியல் அறிஞர்கள் ஒரு கட்சி ஏகாதிபத்தியம் என்கின்ற கோட்பாட்டினை முன்வைத்தனர். குறிப்பிட்ட ஒரு கட்சியை தவிர ஏனைய கட்சிகள் அதிகாரத்தினை கைப்பற்றும் நோக்கில் செயற்பட முடியாத நிலையில் அக்குறிப்பிட்ட கட்சியே தொடர்ந்தும் அதிகாரத்தினை கைப்பற்றும் நிலை காணப்படின் அதுவே ஒரு கட்சி ஏகாதிபத்தியம் என அழைத்தது.

மேற்படி கூற்றினை 1950, 1960களில் முன்னரைப்பகுதியில் கட்சி அதிகாரத்தினை அடிப்படையாக வைத்துக் கொண்டே ஒரு கட்சி ஏகாதிபத்தியக் கொள்கையானது இந்தியாவுக்கு பொருந்தக்கூடியதாக அரசியல் அறிஞர்கள் ஆய்வு செய்தனர். எனினும் 1960றகு முன்னர் கூட்டப்பட்ட இந்த ஒரு கட்சி ஏகாதிபத்திய கொள்கையானது தொடர்த்தேச்சியாக சர்வகாலங்களுக்கும் பொருந்தக் கூடியதாக காணப்படவில்லை. காரணம் ஒரு நாட்டின் அரசியல் அபிப்பிராயமானது நிலையான தன்மையினை பெறுவதில்லை. குறிப்பாக புதிய அரசியலில் காணப்படுகின்ற அரசியல் தன்மையானது இயங்கியல் தன்மைக்கு உட்பட்டதாகும். ஆகவே இயங்கியல் போக்கினை இந்திய அரசியலில் இந்திய தேசிய காங்கிரசின் இயங்கியல் தன்மையானது மாறுபட்டுச் சென்றதனைக் காணக்கூடியதாக உள்ளது. எனவேதான் இந்திய அரசியல் தனிக்கட்சி ஆதிக்க போக்கானது பின்னர் வந்த காலப்பகுதியில் மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டது. ஆகவே குறுகிய கால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட இயங்கியல் தன்மைக்கு முன்னுரிமை கொடுக்காமலும் அரசியல் கோட்பாடுகளை முன்வைப்பதும் ஒரு குறைபாடானதும் சுதந்திரத்தின் பின்னர் தனது ஆதிக்கத்தினை நிலைநிறுத்தி வந்த காங்கிரசானது 1977ஆம் ஆண்டு நடைபெற்றுவந்த தேர்தலில் 34.5% ஆசனங்களையே பெற்றுள்ளது. அத்துடன் மானில மட்டங்களிலும் குறைந்த செல்வாக்கையே பெற்றுக் கொண்டது. காங்கிரசின் தோல்விக்கு எதிர்க்கட்சிகளின் பங்களிப்பை விட கூடியளவு தாக்கத்தினை செலுத்தியது. இவ்வமுக்கக் குழுக்களின் செயற்பாட்டினால் 1977ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலுக்கு முன்னரே சில மானிலங்களில் காங்கிரஸ் கட்சி படிப்படியாக தோல்வியைத் தழுவிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜவகர்லால் நேருவின் மரணம், கட்சி பிளவு, முரண்பாடு, தலைமைத்துவப் போட்டி, மொறாஜிதேசாய், லால்பகதூர் சாஸ்திரி, ஜெகன் ஜீவன்ராம் போன்றவர்களின் தலைமைத்துவப் போட்டி அவை தொடர்பான முரண்பாடுகளும் நிலவிக்கொண்டுவந்தது. எவ்வாறு இருந்த போதும் இவர்களிடையே ஓர் இணக்கம் ஏற்பட்டது.

இதன் பின்னர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் தலைமைத்துவத்தினைத் தடுத்து இந்திய தேசிய காங்கிரசுக்குள் இந்திராகாந்தியின் தலைமைத்துவமானது மிகவும் கட்டுக் கோப்பான ஒரு குடை நிழல் அமைப்பாக உருவாக்கம் பெற்றது. இவரின் தலைமைத்துவமானது இந்திய தேசிய காங்கிரசினை நாட்டுமக்கள் அனைவரினதும் விசுவாசமுள்ள ஒரு கட்சியாக மாற்றம் கண்டது. எனினும் இந்திராகாந்தியினுடைய நடவடிக்கைகள் இந்திய தேசிய காங்கிரசுக்கு கட்சி பேதத்தினையும் மற்றும் தலைமைத்துவ பேதத்தினையும் ஏற்படுத்தியது. அத்தோடு இந்திரா காந்தியின் இளைய மகனான சஞ்சைகாந்தி அவர்களின் நடவடிக்கைகளால் இந்திய தேசிய காங்கிரஸ் ஆனது ஒரு பின்னடைவினை சந்தித்தது. அதாவது சஞ்சை காந்தி தலைமையில் உருவாக்கப்பட்ட இளைஞர் அமைப்பானது இந்திய மக்களிடையே ஒரு வெறுக்கத்தக்க அமைப்பாக காணப்பட்டது.

இவ் அணியினுடைய முக்கிய கொள்கைகளாக கட்டாய குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் பொருளாதார ஊழல் நடவடிக்கைகள், பொருளாதார வீழ்ச்சி நிலைகள் என்பன மக்கள் மத்தியில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தியது. இவ்வாறு இந்திரா காந்தியினதும, சஞ்சை காந்தியினதும் நடவடிக்கைகள் சிரேஸ்ட உறுப்பினர்களிடையேயும் கட்சித் தலைவர்கள் மத்தியிலும் விமர்சனத்துக்கு உள்ளடக்கப்பட்டது. இந்நிலையே இந்திய தேசிய காங்கிரசுக்கு மாற்றீடாக ஒரு கட்சி உருவாக அடிப்படையாக அமைந்தது. இதனையடுத்து 1977ஆம் ஆண்டு இடம் பெற்ற பொதுத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் ஆனது தோல்வியை அடைந்தது. அத்துடன் 1969ஆம் ஆண்டு இந்திரா காந்திக்கு எதிரான அணியின் ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து 'சிந்துகேற்' என்ற அமைப்பினை உருவாக்கினர். அதே வேளை இந்திராகாந்திக்கு ஆதரவான குழு இந்திரா காங்கிரஸ் என்ற அமைப்பினை உருவாக்கியது. ஆகவே இந்திய தேசிய காங்கிரஸ் ஆனது இந்திரா காங்கிரஸ் எனவும் சிந்துகேற் எனவும் பிளவுபட்டு செயற்பட்டதன் விளைவு 1977ஆம் ஆண்டு தேர்தலில் ஆகும். இந்திய தேசிய காங்கிரஸ் இல் இருந்து பிரிந்து சென்ற மொறாஜி தேசாய் அவர்கள் ஜனதாசங் என்கின்ற ஒரு கட்சியினை உருவாக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டமையும் இதன் பின்னணியினூடாகவே காணமுடிகின்றது. காங்கிரசுக்கு எதிரான அணியினர் மற்றும் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்ற முக்கிய உறுப்பினர் உருவாக்கிய கட்சியானது 1977ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் காங்கிரசை தோல்வியடையச் செய்வதோடு தங்களது ஜனதாகட்சியினை ஆட்சிப்பீடம் ஏற்றுவதற்கு வழிகோலியது. ஆகவே இதன் மூலம் இதுவரைகாலமும் ஆட்சியில் இருந்த ஒரு கட்சி ஆதிக்கமானது மழுங்கடிக்கப்பட்டது. அத்தோடு ஜனதாக்கட்சி பெற்ற வாக்குகளை எடுத்து நோக்கும் போது அவ்வாக்குகளானது ஜனதாக்கட்சி மீது மக்கள் கொண்ட விருப்புக்களோ, தலைமைத்துவ கவர்ச்சியோ, அல்லது அவர்களது விசுவாசமோ என்பதற்கு அப்பால் இந்திராகாந்தி யின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட குறைபாடுகளும் இந்திரா காங்கிர சினது எதிர்ப்புக்களுமே ஜனதாக்கட்சியினுடைய வெற்றிக்கு காரணம் என கூறலாம். 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனதாக்கட்சியானது காங்கிரசுக்கு ஈடுகொடுக்கக்கூடியளவுக்கு ஒரு தாக்கமான அமைப்பாக அமையவில்லை. உட்கட்சி பூசல்களும் தலைமைத்துவ போட்டியும் குறுகிய காலத்திலேயே அமைக்கப்பட்டது; 1979ஆம் ஆண்டு கட்சிப் பிளவுக்கு வழி கோலியது. இதனால் கட்சியின் தலைவராக இருந்த மொறாஜிதேசாய் அவர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டு சரசிங் என்பவர் 1979ஆம் ஆண்டு பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆனால் அடுத்த ஆண்டு அவரது ஆட்சியும் வீழ்த்தப்பட்டது. ஆகவே இந் நிலையானது இந்திய அரசியலில் 'இந்தியாவே இந்திரா இந்திராவே இந்தியா' எனக் கூறக் கூடிய அளவிற்கு இ.தே.கா. ஆட்சித் தன்மை யானது நிலைநிறுத்தப்பட்டது.

இத்தகைய அரசியல் உறுதியற்ற சூழ்நிலையில் காங்கிரசினது கடந்த காலத்தில் ஏற்பட்ட தோல்வியை மனதில் கொண்டு மக்கள் மத்தியில் மீண்டும் செல்வாக்குப் பெற காங்கிரஸ் முயற்சித்தது. இதனால் 1980ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு நிலைநிறுத்தப்பட்டது. இத்தேர்தலில் 542 தேர்தல் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியானது 352 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. ஆகவே இந்த வெற்றியானது 1977ஆம் ஆண்டு காங்கிரசின் தோல்வியானது 'ஒரு அரசியல் விபத்து என' அரசியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்திரா காந்தியின் படுகொலையை அடுத்து இ.தே.கா. ஆனது மீண்டும் உத்வேகத்தினை அடைகின்றது. இந்திராகாந்திக்கு பிற்பாடு ராஜீவ் காந்தி தேர்தலில் போட்டியிட்டு 542 தொகுதிகளில் 415 தொகுதிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதாக்கிக் கொண்டதன் மூலம் இந்திய அரசியல் எந்தவொரு தேர் தலிலும் காணாத ஒரு வெற்றியினை இ.தே.கா. ஆனது பெற்றுக் கொண்டது. ஆயினும் இவரது ஆட்சியிலும் இந்திராகாந்தியினது கொள்கைகளும் தத்துவங்களுமே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இருந்த போதும் இக்காலத்தில் V.P. சிங் தலைமையில் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஜனதா தளம் என்கின்ற கட்சியினை உருவாக்கி இருந்தமையும் அது ராஜீவ் காந்தியின் தலைமைத்துவத்திற்கும் காங்கிரசின் வளர்ச் சிக்கும் ஒரு சவாலாக தொழிற்பட்டு காங்கிரசுக்கு எதிராக பாரிய எதிர்க்கட்சியாக தொழிற்பட்டது.

இந்த எதிர்க்கட்சியில் காங்கிரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட வாதங்களே 1984க்கும் 1989ற்கும் இடைப்பட்ட காலத்தில் காங்கிர சுக்குள் இடம் பெற்ற ஊழல்களும் (போர்பஸ் ஆயுத ஊழல்) இது குட்டிய பொருட்கள் என்று தரம் அற்ற ஆயுதங்களை வாங்கியமை குற்றச் செயல்களும் வெளிப்படுத்தப்பட்டது. குறிப்பாக சுவிடன் நிறுவனத்தில் இருந்து வாங்கிய பீரங்கி ஊழல் விவகாரம் ராஜீவ் காந்தியின் தலை மைத்துவத்திற்கு பாரிய நெருக்கடியைக் கொடுத்தது. இந்த நடவடிக் கைகளால் எதிர்க்கட்சித் தலைவர் V.P. சிங் அவர்களால் அகில இந்திய மட்டத்தில் வெளிக்கொணரப்பட்டது. இதன் காரணமாக 1989ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் மீண்டும் ஒரு தோல்வியை காங்கிரஸ் தழுவிக் கொண்டது. 1989ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் 529 தொகுதிகளில் 197 தொகுதிகளால் காங்கிரஸ் வெற்றியினைப் பெற்றது. ஜனதா தளம் 142 தொகுதிகளில் வெற்றியினை ஈட்டிக் கொண்டது.

இதன் காரணமாக ஜனதாதளம் ஏனைய கட்சி அணியினருடன் ஒன்று சேர்ந்து வி.பி.சிங் தலைமையில் ஆட்சி அதிகாரத்தினை கைப் பற்றிக் கொண்டது. ஆனால் இவரது ஆட்சிக்காலம் சொற்பகாலத் திலேயே கவிழ்க்கப்பட்டது. எனவே இத்தகைய ஆட்சிக் கவிழ்ப்பானது காங்கிரசற்ற ஆட்சி அதிகாரமானது நிலைத்திருக்கமுடியாது என் பதையே மக்களுக்கு உணர்த்தியது. ஆகவே 10.11.1990இல் V.P.சிங் அவர்களது ஆட்சி கவிழ்க்கப்பட்டதை அடுத்து காங்கிரசின் ஆதரவுடன் சந்திரசேகர் ஆட்சிபீடம் ஏறினர். ஆகவே சந்திரசேகரின் ஆட்சியானது ஜனதாதளத்தில் இருந்து பிரிந்து தனது 56 உறுப்பினர்களுடன் சோசலிச கட்சி என்ற புதியதொரு கட்சியை உருவாக்கியதோடு எவரும் பிரதமர் பதவியினை ஏற்காத சூழ்நிலையில் தாமாகவே முன்வந்து பிரதமர் பதவியை ஏற்று ஆட்சி அதிகாரத்தை நடத்தினார். ஆகவே 56 உறுப் பினர்களுடன் ஆட்சியமைத்த சந்திரசேகருக்கு 197 உறுப்பினர்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட காங்கிரசானது ஆதரவு கொடுப்பது என்பது அரசியலறிஞர்களால் விமர்சிக்கப்பட்டது. ஆகவே இங்கு சந்திரசேகர் பிரதமராக இருந்த போது ஆட்சி அதிகாரமானது மறைமுகமாக காங்கிரசிடமே காணப்பட்டது.

இத்தகைய அரசியல் உறுதியற்ற தன்மையில் 1991ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் இந்தியாவில் நடைபெறுகின்றது. இத்தேர்தலில் நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் தனிப் பெரும்பான்மை வெற்றியுடன் ஆட்சியை அமைத்துக்கொண்டது. இதன் பிற்பாடு 1996ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் காங்கிரஸ் 140 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. இத் தேர்தல் முடிவுகளில் எந்த ஒரு கட்சியும் தனித்து நின்று ஆட்சியமைக்க முடியாத நிலை காணப்பட்டது. இந் நிலையில் தலைவரான அடல்பிகாரி, வாஜ்பேய் அவர் தான் அரசாங்கத்தினை அமைக்க போவதாகக் கூறி பெரும்பான்மையினை நிரூபிக்க தவறியதன் காரணமாக 13 நாட்கள் மாத்திரமே ஆட்சியமைத்திருந்தார். இதனை அடுத்து ஐக்கிய முன்னணியானது 177 ஆசனங்களுடன் காங்கிரசின் ஆதரவினையும் பெற்றார். H.D. தேவகௌடா என்பவர் ஆட்சிப் பீடம் ஏறினார். ஆகவே அவரது ஆட்சியும் 10 மாதம் வரையிலும் நீடித்திருந்தது. இவர் காங்கிரசின் ஆதரவினையும் செல்வாக்கினையும் பெற்றிருந்தபோதிலும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்டுப்பாடு, தத்துவங்கள் என்பவற்றை மீறியதன் காரணமாக தனது ஆட்சியை 10 மாதத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவரக் காரணமாக அமைந்தது. இதன் காரணமாக ஐக்கிய முன்னணியில் காங்கிரஸ் ஆதரவு தருவதாக அவர்கள் கூறியதன் விளைவாக I.K.குஜ்ரால் அவர்கள் தலைமையில் ஐக்கிய முன்னணியின் ஆட்சி அமைக்கப்பட்டது. இருந்த போதும் பலமற்ற ஆட்சி காங்கிரசின் நெருக்கடி என்பன குஜ்ரால் அவர்களின் ஆட்சி அதிகாரத்தினை சொற்ப காலத்திலேயே கவிழ்த்துவிட்டது. இதனை அடுத்து 1997ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் தனித்து நின்று ஆட்சியமைப்பதற்கு பெரும்பான்மையில்லாத காரணத்தால் B.J.P. கூட்டமைப்பானது ஆட்சியமைத்துக் கொண்டது. ஆகவே வாஜ்பேயின் கூட்டரசாங்கமானது ஏனைய கூட்டுக் கட்சிகளின் வேண்டுகோள்கள் எதிர் கட்சியின் காங்கிரசின் நெருக்கடிகள் மற்றும் வாஜ்பேயின் தலைமையில் ஏற்பட்ட முரண்பாடுகள் என்பவை காரணமாக சில அரசியல் கட்சிகளின் ஆதரவு கூட்டரசாங்கத்தில் இருந்து மாறிய வாஜ்பேயின் கட்சி மீண்டும் கவிழ்க்கப்பட்டது. ஆயினும் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியமைத்தது. இது காங்கிரசின் செல்வாக்கு இந்தியாவில் மீண்டும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளதென்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இந்திய தேசிய காங்கிரசின் கொள்கைகள்

1. துரித பொருளாதார அபிவிருத்திக் கொள்கை அதாவது நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் கலப்பு பொருளாதாரக் கொள்கையே உகந்தது என்பதனை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டனர்.
2. கைத்தொழில் வளர்ச்சிக் கொள்கை
3. சமூகப் பொருளாதாரஅரசியல் துறை
4. மதசார்பின்மையைப்பின்பற்றுதல்
5. மக்களாட்சியை வலுப்படுத்தல்
6. பெண்களுக்கு பாராளுமன்றத்தில் 33% இடஒதுக்கீட்டை வழங்குதல்
7. இந்தியாவின் பிராந்திய வல்லரசு தன்மையைப்பேணுதல்
8. அணிசேராக்கொள்கையினைப்பேணுதல்

### பாரதீய ஜனதாக்கட்சி (BJP)

இந்திய அரசியல் கட்சிகளில் இந்திய தேசிய காங்கிரசுக்கு அடுத்ததாக பேசப்படும் கட்சியாக பாரதீய ஜனதாக்கட்சி காணப்படுகின்றது. BJPயின் தோற்றமானது 1980களில் காணப்பட்டாலும் 1951ஆம் ஆண்டு இந்து அடிப்படைவாதத்தை முன்னெடுக்கும் வகையில் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் பிரதான உறுப்பினரான சியாம் பிரசாத் முகர்ஜி தலைமையில் பாரதீய ஜனதா சங்கத்தின் தோற்றத்துடன் ஆரம்பமானது எனலாம்.

1950 தேசிய தொண்டர் தாபனம் பரா இராணுவக்குழு என்பன இணைந்து ஓர் அரசியல் கட்சியாக இந்துமகா சபையிலிருந்து சிலராலும் உருவாக்கப்பட்ட அமைப்பே இக்கட்சியாகும். தேசிய தொண்டர் தாபனத்திலிருந்த தீவிர நடவடிக்கை உறுப்பினர்கள் சுதந்திர இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமது அமைப்பு முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என விரும்பினர். இந்த தாபனத்தை இந்துக்களுக்கு மாத்திரம் கட்டுப்படுத்தும் தீர்மானத்தை இந்துமகா சபையிலிருந்த முக்கிய தலைவர்கள் விரும்பவில்லை. முன்னாள் இந்துமகாசபையின் தலைவரும் நேருவின் மந்திரிசபை உறுப்பினருமாகிய Dr. SP முகர்ஜி அவர்கள் ஒரு புதிய கட்சியின் ஜனனத்திற்கு பூர்வாங்க நடவடிக்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டார். 1952 தேர்தலுடன் ஜனசம் கட்சியானது படிப்படியாக இந்துக்களின் கலாசாரத்தின் முரணாக நடந்ததனால் இந்துமகாசபாவின் இடத்தைப்பிடித்துக்கொண்டது.

இந்தியாவின் வடமத்திய பகுதிகளில் ஹிந்தி மொழி பேசும் மக்களின் ஆதரவு கிடைத்தது. இதனை சாதகமாக பயன்படுத்திய ஜனசம் கட்சியானது 1960 ஆம் ஆண்டுகளில் உள்ளூராட்சி நிறுவனங் களிலும் சில நகரமானிலங்களிலும் உறுப்புரிமையையும் அதிகாரத்தை யும் கைப்பற்றியது. எனவே இந்துமதத்தின் எழுச்சியினை முன் னெடுத்துச் செல்லும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியானது காங்கிரசின் மதசார்பற்ற கொள்கைக்கு மாற்றீடான கட்சியாகவும் செயற்பட்டது. ஆனால் இக்கட்சியினுடைய வளர்ச்சியில் ஏற்பட்ட தடைகள் புதிய கட்சியின் தோற்றத்தினை வேண்டி நின்றது.

இவ்வாறான நிலையில் தேசிய தொண்டர் தாபனத்தின் உறுப் பினராக இருந்த ஒருவர் காந்தியைப் படுகொலை செய்தமையையும் 1975 - 1977 வரையான காலப்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட நெருக்கடி நிலையும் அவசரகால ஆட்சியும் ஜனசம் கட்சியையும் அதன் உறுப் பினர்களையும் அரசியல் கட்சிகள் என்ற அந்தஸ்திலிருந்து நீக்கியதுடன் மூத்த தலைவர்கள் சிறையிலும் அடைக்கப்பட்டனர். இவ்வேளையில் காங்கிரசிற்கு மாற்றீடாக ஜனதாக் கூட்டணியின் மையவாக்க அதிகார பலத்தையும் கூடிய ஆதரவையும் வழங்கி வந்த ஜனசம் கட்சியானது வட மத்திய பகுதியிலும் ஹிந்தி மொழி பேசும் மக்களுடைய ஆதரவை யும் வெளிக்காட்டியதன் விளைவாக இக்கட்சியிலும் பிளவை ஏற்படுத் தியது. 1980 வரை ஜனசம் கட்சி உறுப்பினர்கள் ஜனதாக் கூட்டணியில் தங்கி நின்றனர். ஆனால் 80ம் ஆண்டு ஜனதாக்கூட்டணியின் உடை வானது புதிய கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

இக்கட்சி ஜனசம் கட்சியின் தலைவரும் ஜனதாக் கூட்டணியின் முன்னைய நாள் வெளியுறவு அமைச்சருமான அடல் பிகாரி வாஜ்பேய் அவர்கள் தலைமையில் தோற்றுவிக்கப்பட்டது.இவ்வாறு தோற்றுவிக் கப்பட்ட கட்சியானது அதனுடைய ஒழுங்கமைப்பு பலம் என்பவற்றில் மிகவும் இறுக்கமான கொள்கையினையே கடைப்பிடித்து வந்தது.

இந்திய அரசியலில் BJPயின் தேர்தல் பிரச்சாரமானது ஏனைய கட்சிகளின் செயற்பாடுகளிலிருந்து வேறுபட்டதாக காணப்படுகின்றது. அதாவது கட்சியின் ஆதரவாளர்களை ஒன்று திரட்டுவதிலும் கட்சியி னுடைய கொள்கைகளையும் வியூகங்களையும் வகுத்து கட்டுப்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவதிலும் தீவிரமான கருத்து ஒற்றுமைகளையும் இறுக்கமான செயற் பாடுகளையும் உருவாக்கியது. ஏனைய கட்சிகளுடன் கூட்டமைப்பு ஏற்படுத்துவதில் வெற்றிவாய்ப்பை தருவதாகவும் கட்சி அடித்தளத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளில் மிகவும் இடர்பாட்டினை எதிர்நோக்கு வதாகவும் செயற்பட்டது.

BJP யானது 1984ஆம் ஆண்டு முதன்முதலாக தேர்தலில் போட்டி யிட்டு 7.7% வாக்குகளை பெற்றதுடன் 2 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. இதனைத்தொடர்ந்து 1989ஆம் ஆண்டைய தேர்தலில் 11.54% மான வாக்குகளைப்பெற்று 86 ஆசனங்களையும் முதன்முதலாக பெற்றுக்கொண்டது. வடமாநிலங்களில் இதன் செல்வாக்கு கொடி கட்டிப்பறந்தது. உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஆட்சியையும் கைப்பற்றியது. 1991ஆம் ஆண்டு தேர்தலில் கட்சியின் வளர்ச்சி தெளிவாக தெரிந்தது. இத்தேர்தலில் 20.9% மான வாக்குகளைப்பெற்று 119 ஆசனங்களை கைப்பற்றியிருந்த துடன் எதிர்க்கட்சியாகவும் வந்தது.

இக்கட்சியின் வளர்ச்சியின் அடுத்தகட்டமாக 1996ஆம் ஆண்டு தேர்தல் அமைகிறது. இத்தேர்தலில் ஆகக்கூடிய இடங்களாக 160 ஆசனங்களைப்பெற்று ஆட்சியமைத்த போதும் ஏனைய கட்சிகள் எதிர்த்து வாக்களித்ததனால் 13 நாட்களுள் ஆட்சி கவிழ்ந்தது. இதன்பின் 1998 தேர்தலில் இக்கட்சி பெரும் வெற்றியீட்டியது. இது தனித்து 25.6% மான வாக்குகளையும் 182 ஆசனங்களையும் பெற்றிருந்தது. இக்கட்சி வடமாநிலங்களில் சமதாக்கட்சியுடனும் பஞ்சாப்பில் அகாலிதள் கட்சி யுடனும் ஒரிஸாவில் பியூஜனதாதள் கட்சியுடனும், மகாராஸ்டிரத்தில் சிவசேன கட்சியுடனும் ஹரியானாவில் ஹரியானாலோதன் கட்சி யுடனும் தமிழ்நாட்டில் அ.தி.மு.க உடனும் கூட்டணிகள் உருவாக் கப்பட்டு ஆட்சியமைத்தது. ஆயினும் அ.தி.மு.க ஆதரவினை வாபஸ் பெற்றதால் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் தி.மு.க.வுடன் சந்திரபாபு நாயுடு இணைகின்றார். இந்தக்கூட்டணியுடன் 1999 தேர்த லில் தெளிவான வெற்றியைப்பெற்றிருந்தது. பிரதமராக வாஜ்பேய் பதவியேற்றதுடன் 2004ஆம் ஆண்டுவரை இக்கட்சி ஆட்சியிலிருந்தது.

2004ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசும் தனது வியுயூகங்களை மாற்றிக் கொண்டதுடன் கூட்டணியையும் ஏற்படுத்தியமையானது BJP இத்தேர்தலில் தோல்வியடையச் செய்தது எனலாம்.

எனவே பாரதீய ஜனதாக் கட்சியின் வளர்ச்சியினை நோக்கும் போது 1984இல் இடம் பெற்ற தேர்தலில் இரண்டாசனங்களுடன் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் பயணத்தைத் தொடர்ந்த இக்கட்சி சொற்ப காலத்தில் இந்தியா வினுடைய அரசியற் போக்கினையே மாற்றக்கூடியளவிற்கு தன்னை வளர்த்துக் கொண்டு வந்தது. எனினும் 2004ஆம் ஆண்டு தேர்தல் தோல்விக்குப் பின்னர் இக்கட்சி பலவீனமான நிலையினை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது எனவும் கூறப்படுகின்றது. எனினும் இந்து மதவாத சிந்தனைகளுக்கு இந்தியாவில் இடமிருப்பதனால் கட்சி எதிர்காலத்தில் நிலைபெறக் கூடியதாவும் எழுச்சியடையலாம் எனவும் கூறப்படுகின்றது.

### கொள்கைகள்

1. இந்தியாவில் இந்துமத சிந்தனைகளின் அடிப்படையிலான இராமராஜ்யத்தினை உருவாக்குதல். அதாவது ஊழல்களற்ற நேர்மையான அரசியல் முறைமை, பொருளாதார வளர்ச்சி, உலக சகோதரத்துவம், நீதியுடைய இராமராஜ்ஜியத்தினை உருவாக்குதல்.

2. இந்திய கலாசாரத்தை பாதுகாத்து முன்னேற்றுதல். அதாவது இந்துக் கலாசாரத்தை அழுத்திக் கூறுவதுடன் இந்தியாவில் அன்னிய கலாசாரம் உட்புகுவதையும் தடுப்பதாக கட்சி தனது முக்கிய கொள்கையாக கொண்டிருந்தது.

3. பொருளாதாரக்கொள்கையாக சோசலிஷக்கொள்கையாக ஆதரிக்கின்ற அதேவேளை காந்திய சோசலிஷத்திற்கு முன்னுரிமை கொடுப்பதுடன் பல்தேசிய தாபனங்கள் இந்திய சந்தைக்குள் நுழைவதை கட்டுப்படுத்தல்.

4. வெளியுறவுக்கொள்கை தொடர்பில் அனைத்து நாடுகளுடன் நல்லுறவை பேணுதல்.

5. அணிசேராக்கொள்கையை கடைப்பிடித்தல்.

6. நாடுமுழுவதும் பொதுவான குடியியல் சட்டத்தினை அமுல் படுத்துதல் முஸ்லிம்களுக்கு தனியான சிவில் சட்டம் இருப்பதை நிராகரித்தல்).

7. இந்தியா அணுவாயுத வல்லரசாக மாறுவதோடு ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவத்தினை பெற்றுக் கொள்ளுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு என்பதனை தொடர்ச்சியாக தக்கவைத்தல்.

9. மாநிலங்களுக்கு அதிகளவில் நிதி நிர்வாக அதிகாரங்களை பரவலாக்குதல்.

பாரதிய ஜனதா கட்சி இந்துத்துவத்தை மையமாக வைத்து செயற்படுவதனால் அங்கு முஸ்லிம் மக்கள் மீது வெறுப்படையக்கூடியளவிற்கு நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இதனால் இதனை ஒரு தேசிய காங்கிரசாக கொள்ளலாமா என்பதிலும் சந்தேகம் உள்ளது.

இந்தியாவில் இன்றைய கட்சிப்போக்கை அவதானிக்கின்றபோது பலகட்சி முறையின் அடித்தளமிடப்பட்டுள்ளது போலவே தோன்றுகின்றது. ஏனெனில் அண்மைக்காலங்களில் எந்தவொரு தேசியக் கட்சியும் தனியாக ஆட்சியமைக்கும் வகையில் பொதுத்தேர்தலில் செல்வாக்கு பெறவில்லை. பல கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்தே ஆட்சியமைத்து வருகின்றன. அத்துடன் காங்கிரஸ் கட்சி சுதந்திரத்துக்கு பின்னர் சுமார் நாற்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்து வந்த நிலையை மீண்டும் தக்கவைத்துக்கொள்வதற்கான சூழ்நிலையும் இந்தியாவில் பலமாகவே தென்படுகின்றது. இதனை 2009 ஏப்ரலில் நடைபெறப்போகும் தேர்தல் முடிவுகள் உணர்த்தி நிற்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 2

# அமுக்கக் குழுக்கள்

## (Pressure Groups)

### *1. அறிமுகம்*

அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதை நோக்கமாகக் கொள்ளாது, ஆட்சியில் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அழுத்தம் கொடுத்து தமது நோக்கங்களை அடைய முயற்சிக்கும் சக்தி வாய்ந்த குழுக்களை இன்றைய ஜனநாயக அரசுகளில் பெரிதும் காண்கின்றோம். மனிதன் தனித்தன்மையால் பெற முடியாத பல விடயங்களை குழுவாக சேர்ந்து செயற்படுவதன் மூலம் அடைந்து கொள்கின்றான். இதனால் 'குழுக்கள்' என்பது மிக முக்கியமான மதிப்பீடாக மாறியுள்ளது.

ஜனநாயக அரசாங்க முறைகளில் சட்ட நிருவாக நீதித்துறை நடவடிக்கைகளின் மூலமாக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி பாதுகாத்து வந்தாலும் நாடளாவிய ரீதியில் மக்களின் உரிமைகள் நலன்களை முழுமையாக பாதுகாக்க முடியாமல் போகின்றது. இந் நிலையில் மக்கள் பலர் கூட்டமாக சேர்ந்து சில அமைப்புக்களை உருவாக்கி இவ் அமைப்புக்கள் மூலம் அரசாங்கத்துக்கு அழுத்தத்தை கொடுத்து தமது நலன்கள் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள முனைகின்றனர். இவ்வாறான குழுக்கள் தமது சொந்த நலன்களை பேணுவதற்காக அரசியல் நிறுவனங்களிலே செல்வாக்கையும் அழுத்தத்தையும் பிரயோகிக்கின்றன. எனவே அமுக்கக் குழுக்களை ஆய்வு செய்வதற்கு முன்னர் சமூகத்தில் குழுக்கள் தோன்றும் விதம் அதன் செயற்பாடு பற்றி ஆய்வு செய்தல் சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. குழுக்கோட்பாடு

இன்றைய நவீன அரசியலில் பல குழுக்களையும், ஒழுங்கமைப்புக் களையும் காணலாம். ஆரம்ப காலத்திலிருந்து பல நோக்கங்களுக்காக மனிதர்கள் ஒன்றுகூடியிருப்பினும் அண்மைக்காலத்திலேயே அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக சுதந்திரமான குழுக்கள் தோன்றியுள்ளன. எவ்வாறாயினும் இங்கு முறையான வகையில் ஒழுங்கமைத்து பொதுக் கொள்கை உருவாக்கத்தில் பாதிப்பு செலுத்தும் குழுக்கள் ஆராயப்பட வேண்டியவையே.

குழுக்கோட்பாடு பல்வேறு குழுக்களினதும் உள்ளக ஒழுங் கமைப்பையும், செயல்முறைகள் பற்றி ஆய்வு செய்கின்றது. அதாவது அவற்றின் எல்லைகள், பருமன், பிரதேசவாரித்தன்மை என்பனவற் றுடன் ஒருங்கிணைப்பின் ஏனைய வடிவங்கள் பற்றியும் விவாதித்து செயற்படுகின்றது. ஒழுங்கமைப்புத் தொடர்பான விடயங்கள் கட்டுப் பாட்டின் மாதிரிகள், உறுப்புரிமையின் நெகிழ்வுத்தன்மை, அது மாறக் கூடிய தன்மை பற்றிய விடயங்களையும் இது பகுப்பாய்வு செய்கின்றது. சமூகத்தினை ஒன்றுடன் ஒன்று ஊட்டம் செய்துவரும் குழுக்களில் பல கூறுகளை உள்ளடக்கிய, பல கூறுகளால் ஆக்கப்பட்ட ஓர் அமைப் பாகவே கருதப்படுகின்றது. குழுக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை களின் அடிப்படையில் அரசாங்கத்தை ஏனைய குழுக்களில் இருந்து வேறுபடுத்தி அறியலாம். அதன்வழி அரசாங்கமானது அதன் கட்டமைப் பினுள் பரந்த சமூக செயல்களையும் நலன்களையும் கோரிக்கைகளை யும் பிரதிநிதித்துவம் செய்யும் குழுக்களை உள்ளடக்கம் செய்கின்றது. இதன்படி வெளியில் காணப்படும் குழுக்களுக்கும் பல எண்ணிக் கையான பிரதிநிதித்துவ வாய்ப்புக்களையும் எட்டக்கூடியவாறாக அரசாங்கம் செயற்படுகின்றது. எனவே குழுக்களின் செல்வாக்கு பிர யோகத்திற்கு அரசாங்கம் உட்பட வேண்டி ஏற்படும்.

ஒரு குழுவானது எதனை சுட்டிக் காட்டுகின்றது அது எதனை குறிப்பதாக எமக்கு உணர்த்துகின்றது என்ற ஏற்புடைய ஒரு வினா எழுகின்றது. எளிமையாகக் கூறுவதானால் ஒரு குழு என்றால் 'தனி நபர்களின் தொகுப்பு' என்று பொருள்படும். எவ்வாறாயினும் இக் கோட்பாட்டின் அடிப்டையில் அதற்கு வேறுபாடான கருத்து தார்ப் பரியம் உண்டு என்று கூறப்படுகின்றது. குழுக்கோட்பாட்டின் தந்தை யான வென்லியின் கருத்துப்படி 'ஒரு குழுவானது சமூகத்தின் ஒரு பகுதி மனிதர்கள்' என்று பொருள்படும். இருப்பினும் அது ஏனைய மனிதர் களின் பகுதிகளில் இருந்தும் தூண்டப்பட்ட ஒரு வெளிப்படையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி என்று கருதப்படுவதற்கில்லை. உண்மையில் ஒரு குழுவை ஒரு நடவடிக்கைப்பகுதியாகவே கருதப்படுகின்றது. அது ஏனைய பல குழுக்களின் குழு நடவடிக்கைகளில் பங்குபற்றுவதில் இருந்தும் மனிதர்களை விலக்காத ஒரு நடவடிக்கை கருவியாகும்.

குழுக்கோட்பாட்டினை தெளிவாக விளக்கப்படுத்திய ரேமன் என்பவர் 'ஒரு குழு என்பது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பொதுவான மனோபாவங்களின் அடிப்படையில் சுட்டிக் காட்டப்படும் மனோபாவங்களில் காணப்படும் நடத்தை மாதிரிகளின் தோற்றத் திற்கும் மேம்பாட்டிற்கும் ஏனைய குழுக்கள் மீது உரிமைக்கோரிக் கைகளை முன்வைக்கும் தனிநபர்களின் ஒரு தொகுதியாகும்' என் கின்றார்.

குழுக்கோட்பாடு பற்றிய வென்லியினதும் ரேமனினதும் கோட் பாட்டின் படி பொது நலன் வழியாகவும் சமூகக் கட்டுமான அமைப் பிலும் வழி நடத்தப்படும் ஒரு நடவடிக்கையாகும் எனலாம். அது வெகுசன நடவடிக்கையில் தொடர்பாடலுக்கான அரங்கை வெளிப் படுத்துகின்றது.எனவே ஒரு குழுவுக்கு சுயமான நலன் ஒன்று இருக்கும். குழுக்கள் ஒவ்வொன்றும் ஒன்றில் இருந்து ஒன்று வித்தியாசமானதாக இருக்கும். மேலும் இக் குழுக்கள் நிரந்தரமானதாக இருப்பதுடன் தற்செயலாக உருவாகுவதும் உண்டு. அதே வேளை ஒரே தனிநபர்கள் பல்வேறு குழுக்களையும் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். தனிநபர் களை ஒன்றாக இணைப்பது நலன்தான் என்பதனை கருத்திற் கொள்ள வேண்டும். அது ஒரு சமூக ஒழுங்கில் காணப்படும். ஒரு சில குழுக்கள் மீது மேற்கொள்ளப்படும் ஓர் உரிமை அல்லது உரிமைகளின் கோரிக்கை தொடர்பான பொதுவான மனோபாவம் அபிப்பிராயம்தான் தனிநபர் களை இணைக்கும் ஊடகமாகக் காணப்படும். இந்த நலன் என்ற காரணியே குழுக்களின் ஒழுங்கமைப்பிற்கு வழி சமைக்கின்றது என்ப தாலேயே வென்லி என்பவர் நலன் என்ற அம்சத்தினை பெரிதும் வலியுறுத்துகின்றார். குழுக்கோட்பாடு ஒரு பிரத்தியேக சமூக ஒழுங்கு அரசியலில் நடத்தையில் எண்ணக்கருவுக்கு தர்க்க ரீதியாக வழிகோலு கின்றது. யங் என்பவர் குழுக்கோட்பாட்டிற்கு சில முக்கிய இலட் சணங்களை முன் வைக்கின்றார்.

ஒரு குழுவென்பது ஒரு வெகுசன நடவடிக்கையாகவே கொள்ளப் படுகின்றது. ஒரு வெறும் தனிநபர்களின் தொகுதியாக கருதப்பட வாய்ப்பு இல்லை என்பதுடன் ஒரு நிலையான மாறாத வடிவம் உடையது என்பதற்கு பதிலாக மாறக்கூடிய செயல்முறையுடைய நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவே கருதப்பட்டது. நேர்க்காட்சி ரீதியாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சுயமான ஒரு நலனை குழு கொண்டிருக்கும். குழுவின் நலனே அதன் கொள்கை சார்ந்த வழிப்படுத்தல் சார்ந்த நடவடிக்கைகளின் சாராம்சமாக கொள்ளப்படும்.

தனிநபர்கள் ஒரே சமயத்தில் வேறுபடும் தீவிரத்தன்மையின் அளவுகோல் கொண்ட ஓர் எண்ணிக்கையுடைய குழுக்களின் உறுப்புரிமை கொண்டிருப்பர். குழுவின் அணுகுமுறையில் உண்மையான ஒரு சமூக ஒழுங்கை உருவாக்கம் செய்யும். இது மிகப்பெரும் எண்ணிக்கையான குழுக்களின் ஊடாடப்பட்ட செயல்முறையின் பகுப்பாய்வில் கண்டு கொள்ளப்படும். சமூகத்தின் எந்தவொரு குறிப்பிட்ட காலத்தினதும் குழுக்களின் அழுத்தங்கள் வித்தியாசமானதாகவே காணப்படும்.

உறுப்பினர்களின் எண்ணிக்கை விவகாரத்தின் தீவிரம் ஒழுங்கமைப்பின் மாதிரிகளின் காரணிகளின்படி ஏனைய குழுக்களில் இருந்தும் ஒரு குழுவின் பலம் சக்தி பெறும். எல்லாக்குழு நடவடிக்கைகளையும் அரசியல் நடவடிக்கை என்று கொள்ளப்படுவது இல்லை. அரச நிறுவனங்கள் ஊடாகவும் அல்லது அரச நிறுவனங்கள் மீதோ குழுக்கள் தங்களது உரிமைக்கோரிக்கைகளை மேற்கொள்ளும் போது மட்டுமே அரசியல் சந்தர்ப்பமும் அரசியல் நலக்குழுக்கள் மத்தியிலான போராட்டத்தை முறையாக்கப்பட்ட இணக்கப்பாட்டைக்கொண்டு வரக்கூடியதாக செயல்முறையை உருவாக்குவதிலேயே அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது. சமூகத்தில் காணப்படும் மொத்தமான குழுப்போராட்டத்தில் இணக்கப்பாட்டாளராக செயற்படுவதுடன் ஒன்றுடன் ஒன்று தம்முள் முரண்படும் பல்வேறு வகையான குழுக்களைத் தட்டிக்கொடுத்து பேணுவதிலும் அரசாங்கம் முனைப்பாக இருக்கும் செயன்முறையில் பங்கு பற்றுகின்றனர் என்று கருதப்பட்டது. தனிநபர்கள் பல்வேறு குழுக்களையும் சேர்ந்தவர்களாக இருப்பர். எனவே ஏனைய எல்லாக் குழுக்களுடனும் கூடிய தமது தொடர்பை இழந்து தமது பகுக்கப்படாத ஆதரவை ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு வழங்குவதற்கு அவர்கள் தயாரில்லை.

குழுக்களின் பொது விருப்பத்திற்கும், தனிநபர் விருப்பத்திற்கும் இடையில் முறையே தடைக்கற் சக்திகளானவை என்றும் அரசியல் அங்கத்தின் கிருமிகள் என்றும் குழுக்கள் வகிக்கும் பங்கை கீழ்ப்படுத்தி அரச அதிகாரத்தை முதன்மைப்படுத்திய கொப்ஸ். ரூசோ போன்ற சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களின் ஏதேச்சாதிகார வாதங்களை குழுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டாளர்கள் மறுத்துரைக்கின்றனர். உண்மையில் குழுக்கோட் பாடு பற்றிய ஆய்வு அரசாங்கத்தின் ஒழுங்கமைப்புக்கு சுவாரஸ்ய மான சர்ச்சைகளை எழுப்பியுள்ளதுடன் நலன் தெளிவுபடுத்தும் கோட் பாட்டின் நிலைப்பாட்டில் இருந்து இது காலவரை தெளிவுபடுத்தப் படாது இருந்து வந்த அரசியலின் இயல்பை கணடறிவதற்கு அரசியல் விஞ்ஞானிகளை உற்சாகப்படுத்தியுள்ளது. இதனையே போராசிரியர் S.A. பைனர் இன்று நலக்குழுக்கள், அரசியலறிஞர்கள் ஏறக்குறைய கண்டு கொள்ளமல் விட்ட குழுக்களின் உறுப்பினர்கள் அல்லாத கோடிக் கணக்கான தனிநபர்களின் சட்டங்களையும் நிருவாகத்தையும் கோரி இடையறாது வாதிடும் பலமான சக்திகளாக விளங்கின என்று கூறியதில் இருந்து இதன் முக்கியத்துவம் விளங்குகின்றது.

## 3. அமுக்கக்குழுக்கள் : அறிமுகமும், முக்கியத்துவமும்

ஜனநாயக சிந்தனையின் ஆரம்பத்துடனேயே அமுக்கக்குழுக்கள் தோன்றிய போதும் இதுபற்றிய அரசியல் விஞ்ஞான கவனஈர்ப்பு 20ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே ஆதர் வென்லி (Arthr Bently) என்ற அறிஞர் 1945இல் அமுக்கக்குழுக்கள் பற்றி தமது சிந்தனையை வெளியிட்டதில் இருந்து இந்த விடயம் ஓர் அரசியல் விஞ்ஞான கற்கை நெறியின் ஆய்வுப்பொருளாக மாறியது. இன்று அரசியல் விஞ்ஞானத்தில் அமுக்கக்குழுக்கள் பற்றிய விரிவான கற்கைநெறி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது.

தனிமனிதனின் செயற்பாட்டையும் விட குழுக்களின் இயங்கு முறை அதிகளவு பலம் வாய்ந்தது என்பது அறியப்பட்டதன் விளைவே இக்குழுவின் செயற்பாட்டின் தோற்றமாக அமைகின்றது. இச் சமூகத் தில் மனிதர்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொள்வதன்மூலம் பாரிய வெற்றியினைக் கண்டுகொள்கின்றனர். நாட்டின் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றும் நோக்குடன் அரசியல்கட்சிகள் தோற்றம் பெறுகின்றன. இத்தகைய நோக்கம் கொண்ட அரசியல்கட்சிகளின் செயல்முறைகளில் வலுமிக்ககுழுவாக அமைந்து தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் தமது குறிக்கோளை அடைவதை நோக்கமாகக் கொண்டு இவ் அமுக்கக் குழுக்கள் செயற்படுகின்றன.

அமுக்கக்குழுக்கள் என்பது சில வரையறைக்கு உட்பட்டவிட யங்கள், கொள்கைகள் என்பவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவ தற்காக உருவாக்கப்படுகின்றன. அதாவது ஆட்சிவிடயங்களில் தாம் நேரடியாக ஈடுபடாதுவிடினும் தமது செல்வாக்கு பலம் என்பவற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி ஆட்சியாளர்களின்மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய சக்திபடைத்த அமைப்புக்களாகவே அமுக்கக் குழுக்கள் திகழ்கின்றன. இவை அரசியல் நிறுவனங்களிலோ அல்லது அரசாங்கத்திலோ நேரடியாக ஈடுபடும் நோக்கம் கொண்டவையல்ல, மாறாக ஆட்சியாளர்களின் மூலம் தமது முழுச்செல்வாக்கினையும் பயன்படுத்தி தமக்கு சாதகமான சட்டங்களை ஆக்கிக்கொள்ளவும் முடிவுகளை பெற்றுக்கொள்ளக்கூடியதுமான சக்தி படைத்த அமைப்புக்களாகவே இவை காணப்படுகின்றன. ஏற்கனவே பொதுமக்கள் மத்தியில் தாம் பெற்றிருக்கின்ற ஆதரவு தொழில் ரீதியான முக்கியத்துவம் என்பவற்றைப்பயன்படுத்தி ஆட்சியாளர்களின் ஊடாக தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்கின்றனர். ஆனால் இவை தாமே அரசாங்கமாக நடக்கமுறப்படுவதில்லை. அதாவது இவை அதிகாரத்தைப் பெறும் நோக்கம் கொண்டவை அல்ல. ஆகவே அமுக்கக்குழுக்கள் என்பதை வரைவிலக்கணப்படுத்தினால், ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதோ பொதுவான நோக்கம் கொண்ட மக்களை உள்ளடக்கிய ஓர் ஒழுங்கான ஒழுங்கமைப்பு எனவும், அது வழமையான நிகழ்வுகள் மீது செல்வாக்கு செலுத்த முயற்சிக்கும் ஒன்று எனவும், குறிப்பாக அரசாங்கம் உருவாக்கி நிருவகிக்கும் பொதுக்கொள்கைகள் மீது செல்வாக்கு செலுத்தி தமது நலன்களைப் பாதுகாத்து முன்னேறும் அமைப்புக்கள் என வரைவிலக்கணப்படுத்தலாம்.

இத்தகைய அமுக்கக்குழுக்களுக்கு உதாரணமாக தொழிலாளரமைப்புக்கள், வியாபாரநிறுவனங்கள், சமயக்குழுக்கள், பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், முதலாளிமார் சம்மேளனம், பெண்கள் நல அமைப்புக்கள், அரசாங்க மருத்துவ சங்கம், அரசாங்க தாதிமார் சங்கம், பல்கலைக்கழகமாணவர்கள் சங்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர்கள் ஏதாவது ஒரு நோக்கத்தின் அடிப்படையில் ஒன்றுபட்டு அந்நோக்கத்திற்காக செயற்படமுறப்படுவார்கள். இவர்கள் ஆட்சியாளர்களின் போக்கிலும் கொள்கை தீர்மானங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தி படைத்தவர்களாகக் காணப்படுவார்கள். அரசியலில் நேரடியாக ஈடுபடும் நோக்கினை இக்குழுக்கள் கொண்டிருக்கவில்லை. மாறாக தமது நலன்களை ஆக்கிக்கொள்ளவும் அவற்றைப் பேணிப்பாதுகாத்துக் கொள்ளவும் தமக்கு சாதகமான சட்டங்களை உருவாக்கிக் கொள்ளவும் செயற்படும் அமைப்புக்களாக காணப்படுகின்றன. எனவேதான் நவீன ஜனநாயக நடைமுறையில் இவைகளை நலன் நாடும் கழகங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் அமுக்கக்குழுக்கள் என்பது ஜனநாயகத்தின் அடி மட்டத்தையே குழிதோண்டிப் புதைக்கின்ற தீய சக்தியாகவே கருதப் பட்டது. ஆனால் காலப் போக்கில் அதில் மாற்றமுற்று அது ஜனநாயகத் திற்கு தேவையுள்ள ஒரு அமைப்பாக மாறியுள்ளது.

## 4. அமுக்கக்குழுக்களும் அரசியல் கட்சிகளும்

அரசியல்கட்சி என்பது பின்வரும் அடிப்படையில் ஓர் அமுக்கக் குழுக் களில் இருந்து வேறுபடுவதைக்காணலாம்:

1. கட்சியொன்று நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான அங்கத்த வர்களைக் கொண்டிருக்காது, மாறாக ஆயிரக்கணக்கான மில்லி யன் கணக்கான அங்கத்தவர்களை ஒருங்கிணைத்து ஐக்கிய மாகும் மிகப் பெரிய எண்ணிக்கையில் அமைந்து காணப்படு கின்றது. ஆனால் ஒப்பீட்டு அடிப்படையில் அமுக்கக்குழு ஒன்று நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களை மிகச் சிறியளவில் கொண்டிருக்கும். அதேவேளை மிகச்சிறியளவில் அங்கத்தவர்களைக் கொண்ட கட்சிகளும் காணப்படுகின்றன.

2. அமுக்கக்குழுவொன்று சில குறிப்பிட்ட நலன்களை அடிப் படையாகக்கொண்டு காணப்படுவது வழமையாகும். இந்த வகையில் குறிப்பிட்ட நலனை பாதுகாப்பதற்கும் விருத்திசெய்வ தற்குமென போராடவும் தயங்குவதில்லை. இந்த நலனானது ஊதியம் மற்றும் மேலதிக படிகள் எனபவற்றை அதிகரிப்ப தற்கான கோரிக்கையாகவோ அல்லது விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையினை அதிகரிப்பதாகவோ அல்லது குறிப் பிட்டமொழி மற்றும் கலாசாரம் என்பவற்றினை பேணுவதா கவோ இருக்கலாம். எனவே அமுக்கக்குழு என்பது நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு முகவரமைப்பாக வர்ணிக் கப்படுகிறது எனலாம். அரசியல்கட்சி என்பது பல்வேறுபட்ட நலன்களைக் கொணட ஒரு பொது நிறுவனமாக காணப்படு கின்றது. இந்தவகையில் வியாபாரிகள், தொழிலாளர்கள், விவ சாயிகள், சட்டத்தரணிகள் போன்ற பல்வேறுபட்ட மக்கள் பிரிவினருக்கு சொந்தமாக காணப்படுகின்ற நலன்களை உள்ளடக் கியுள்ளதாக காணப்படுகின்றது. எனவே அரசியல்கட்சி ஒன்று மொத்த நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருவியாக காணப்பட, குறிப்பாக அமுக்கக்குழுவானது தங்களது குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களது நலனை மாத்திரமே கருத்தில் கொண்டு செயற் படுவதை அவதானிக்கலாம்.

3. அரசியல்கட்சிக்கும் அமுக்கக்குழுவுக்கும் இடையிலான மிக முக்கியமான வேறுபாடு யாதெனில் ஒரு நாட்டினுடைய அரசி யல் செயற்பாட்டில் அல்லது நடைமுறையில் அரசியல்கட்சி யொன்று சிறந்தவகையில் செயற்படும் போது அமுக்கக்குழுக்கள் மறைமுகமாகவோ அல்லது மர்மமாகவோ செயற்படுகின்றது. கட்சி ஒன்று பதிவு செய்யப்பட்ட அலுவலகங்கள், அரசியல் யாப்பு சட்டவிதிகள், இலச்சினைகள், அங்கத்துவம், பதிவேடு கள் மற்றும் ஆவணங்கள் அலுவலக அதிகாரிகளின் பட்டியல்கள் அரசியல்துறையில் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கான பாரிய பொறுப்புக்கள் என்பவற்றைக்கொண்டிருக்க அமுக்கக்குழு வொன்று அதிகாரத்துக்கான போராட்டகாலத்தில் மிகவும் உட் பட்டதாக இருக்கும் போது அரசியல் ரீதியாக நடுநிலைத்தன்மை யினைத் தொடர்ந்து பேணுவதற்கு முயல்கின்றது. சில அரசியல் கட்சிகளூடாக அரசியல்துறை செயற்படுவதற்கு பெருமள விலான அமுக்கக்குழுக்கள் இந்த காரணத்தை முன்னிட்டு வருகின்றது. சில அமுக்கக்குழுக்கள் அரசியல்கட்சிகளோடு நெருங்கிய இறுக்கமான தொடர்புகளை கொண்டிருக்கும் பொழுது இந்த உண்மையினை அவதானிக்கலாம். உதாரணமாக பிரித் தானியாவில் பழமை பேணும் கட்சியுடன் வியாபார நலன்களும் தொழில்கட்சியுடன் தொழிற்சங்கங்களும் கொண்டிருக்கும் தொடர்பினைக் காணலாம். ஏனைய அமுக்கக்குழுக்கள் நிலமை களுக்கேற்ப தமது உறவுகளையும் மாற்றிக்கொள்கின்றன.

## 5. அமுக்கக்குழுக்களின் வகைப்பாடுகள்

அமுக்கக்குழுக்களை அவற்றின் தன்மை, செயற்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையாக வகைப்படுத்தப்படு கின்றது. பொதுவாக அமுக்கக்குழுக்களை அவற்றின் இயல்பு முறை யைக்கொண்டு வகைப்படுத்தும் போது அது உள்ளடக்கப்படுகின்ற நோக்கம் அல்லது இலக்கு என்பவற்றை மையமாக வைத்து,

விவசாய குழுக்கள், மாணவர் குழுக்கள், தொழிற்சங்க குழுக்கள், முதலீட்டாளர்களின் குழுக்கள் எனப் பலவாறு வகுக்கலாம்.

உதாரணமாக வியாபாரக் குழுக்களின் வகைப்பாட்டுக்குள் உற்பத்தியாளர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். கைத்தொழில் வர்த்தக தாபனங்களின் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் ஒன்றியங்களை தொழிலாளர் குழுக்களாக அடையாளப்படுத்தலாம். இவை போன்றே சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற சகல மட்டங்களிலும் தொழில்பார்க்கும் இத்தகைய குழுவினர் அவர்களுக்கென சொந்தமான தாபனங்களைக் கொண்டிருப்பர். இத்தகைய வகைப்பாட்டினை தொழில் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட அமுக்கக் குழுக்களின் வகைப்பாடாகக் கூறப்படுகின்றது.

அமுக்கக்குழுக்களே நேரடியாகவோ மறைமுகமாகவோ நாட்டின் தேசிய நிருவாகத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாரியளவிலான சமயசமூகத் தாபனங்களில் கூட அமுக்கக்குழுக்கள் காணப்படுகின்றன. மேலும் பாரியளவில்- வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற குறிப்பிட்ட நாட்டின் அரசியல் நடைமுறையில் முக்கிய பாத்திரம் வகிக்கின்ற இயக்கங்கள், இராணுவ அமைப்புக்கள், மாணவர் ஒன்றியங்கள் என்பனவும் அமுக்கக்குழுக்களாகவே பாகுபடுத்தப்படுகின்றன. இப்பாகுபாடானது அமுக்கக்குழுக்களின் செங்குத்து ரீதியான வகைப்படுத்தல் என அழைக்கப்படுகின்றது.

அமுக்கக்குழுக்களை இடைநிலைரீதியான பாகுபாட்டினுள் கொண்டுவரும் போது அது உள்நாட்டு ரீதியாக, பிராந்திய ரீதியாக, மாகாணரீதியாக மற்றும் சர்வதேச ரீதியாகப் பாகுபடுத்தலாம். அத்துடன் அமைப்பு ரீதியாக தற்காலிக அமுக்கக்குழுக்கள், நிரந்தர அமுக்கக் குழுக்கள் எனவும் பாகுபடுத்தலாம்.

தற்காலிக அமுக்கக்குழுக்கள் என்பது அரசியல் நடைமுறையில் அவ்வப்போது தோன்றி தமது நோக்கம் நிறைவேறியதும் கலைந்து செல்லக்கூடியதாகும். எனவே இவ்வகையான அமுக்கக்குழுக்கள் அதிகளவில் அரசாங்கத்துக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதில்லை.

நிரந்தர அமுக்கக்குழுக்கள் அரசியலில் நிரந்தரமாகச் செயற்படுகின்ற அமைப்புக்களைக் குறிக்கும். இவ்வமைப்புக்கள் நாட்டினுடைய அரசியலில் நீண்டகாலப் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இவ்வகையான அமுக்கக்குழுக்களானது தமது இலக்கினை வென்றெடுப்பதற்காக அரசாங்கத்தை சில சந்தர்ப்பங்களில் தமது நிபந்தனைக்கு அடிபணியச் செய்வதுடன் தங்களது வழிகளிலும் இட்டுச்செல்வதற்கு வாய்ப்பினைக் கொடுக்கின்றது.

அமுக்கக்குழுக்களின் வகைப்பாட்டில் அரசியலறிஞர்கள் மேலும் 2 வகையான வகைப்படுத்தலை மேற்கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நலன் பேணும் குழுக்கள்
2. கருத்து வழிக்குழுக்கள்

நலன் பேணும் குழுக்கள் என்பது தோற்றம் பெறுகின்ற அமுக்கக் குழுக்கள் தங்களது இலக்குகளான சமூக, பொருளாதார, அரசியல், மத அடிப்படையில் தங்களது நலனை மையமாகக்கொண்டு உருவாகி அவற்றினடிப்படையில் தொழிற்படுகின்ற குழுக்களே நலன்பேணும் குழுக்களாகும்.

கருத்து வழிக்குழுக்கள் என்பது நோக்கம் கொண்டு செயற்படுவதுடன் அவை நாட்டின் அரசியலிலோ அல்லது சமூகத்திலோ நலனை எதிர்பாராமல் அரசியலை சிறப்பாக வழிநடத்துவதற்கு கருத்துரைகள் வழங்குகின்ற அமைப்புக்களாகவே காணப்படுகிறது. இத்தகைய குழுக்கள் நாட்டின் அரசியலில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை.

G.A. அல்மன்ட் (Almond) என்பவரும் அமுக்கக்குழுக்கள் பற்றி ஆய்வு செய்த பிரதான ஒருவராகக் காணப்படுகின்றார். அவரது ஆய்வுப்படி அமுக்கக்குழுக்கள் பின்வருமாறு 4 வகையினதாகக் காணப்படுகின்றது:

1. நிறுவன அமுக்கக்குழுக்கள்
2. அமைப்பு அடிப்படையான அமுக்கக்குழுக்கள்
3. அமைப்பு அடிப்படையற்ற அமுக்கக்குழுக்கள்
4. ஒழுங்கற்ற அமுக்கக்குழுக்கள்

அரச திணைக்களங்களுக்கான சட்டவாக்கலை நிறைவேற்றுபவை பணித்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை, ஆட்சிமுறை என்பவற்றில் ஆதிக்கம் செலுத்துகின்ற குழுக்களை நிறுவன அமுக்கக்குழுக்கள் என்கிறார் அல்மொன்ட். இவ்வகைப்பாடானது வெளித்தோற்றங்களில் உருவத்தினைக் கொண்டிருக்கும். உள்ளீடுகள் அரசாங்க உறுப்பினரால் உருவாக்கப்படுமெனக் கூறப்படுகின்றது. உதாரணம் பணிக்குழுவாட்சியில் நிருவாக உத்தியோகத்தர்கள் தங்களது நலனைப்பாதுகாக்கவும் அவற்றை விரிவுபடுத்தவும் ஒரு தீர்மானம் எடுப்பதற்கும் அமைச்சர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம்.

அமைப்பு அடிப்படையிலான அமுக்கக் குழுக்கள் மேலே குறிப்பிட்டவற்றை அடிப்படையாகக்கொண்டு குறித்த நாடு ஒன்றுக்கு வழிநடத்தப்படுகின்ற சகல அமுக்கக்குழுக்களையும் உள்ளடக்குகின்றது. வியாபாரிகள், தொழில்சார் உத்தியோகஸ்தர்கள் முதலிய தாபனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவை அவற்றினுடைய அரசியலமைப்புக்கள், தாபன சட்டவிதிகள், நிதிகள், செயற்பாடு ஆவணங்கள் மற்றும் இவை போன்ற பல்வேறுபட்ட அம்சங்களையும் கொண்டிருக்கும். பதிவு செய்யப்பட்ட மாதிரிகளைப் பெருமளவு கொண்டதும், வழமையான தாபனப்படுத்தப்பட்டதுமான அமைப்புக் களாக அமைப்பு அடிப்படையிலானதாகக் காணப்படும்.

அமைப்பு அடிப்படையற்ற அமுக்கக்குழுக்கள் வழமையற்ற தாபனங்களைக் கொண்டிருக்கும் குழுக்கள் என அழைக்கப்படுகின்றது. இவை இன ஒற்றுமை, மதம், ஆரியக்குடிகள், சமூக மரபுகள், இன ரீதியான வழக்காறுகள் போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட குழுக்களாகக் காணப்படுகின்றது. இவ்வகையான குழுக்கள் காலத்துக்குக்காலம் தோன்றி மறைகின்றன. அதாவது சமூகத் தினால் முக்கியத்துவப்படுத்தப்படுகின்ற சில முக்கியமான சடங்கு களை அல்லது செயற்படவேண்டிய முக்கிய கடமைகளாக கருதுகின்ற வற்றை செயற்படுத்தும் போது தோன்றி பின்னர் மறைகின்றன. இத் தகைய குழுக்கள் உலக அரங்கில் பின்தங்கிய சமூகங்களிலேயே பொதுவாகக் காணப்படுகின்றன.

ஒழுங்கற்ற குழுக்களில் எதிர்வு கூற முடியாத தாபனங்களின் நடத்தையாவும் உள்ளடக்கப்படுகின்றன. இவ்வகையான குழுக்கள் பொதுவாக வன்செயல்களிலும் தீவிரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடு வனவாகக் காணப்படுகின்றது. இத்தகைய குழுக்களானது ஆத்திரம் கொண்ட பிள்ளைகளைப் போல தங்கள் சடுதியான தீர்மானத்தின் மூலம் தோன்றி செயற்படும். ஒழுங்கற்ற குழுக்களுக்கு சிறந்த உதாரணமாக மாணவர் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அமுக்கக்குழுக்களின் வகைப்பாட்டில் மேலும் இரண்டு வகை யான பாகுபாடுகளை அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில்

1. தற்கால அமுக்கக்குழுக்கள்
2. நிரந்தர அமுக்கக்குழுக்கள்

தற்காலிக அமுக்கக்குழுக்கள் என்பது அரசியல் நடைமுறையில் அவ்வப்போது தோன்றி தமது நோக்கம் நிறைவேறியதும் கலைந்து செல்லக்கூடியதாகும். எனவே இவை அதிகளவில் அரசாங்கத்துக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர அமுக்கக்குழுக்கள் என்பது அரசியலில் நிரந்தரமாக செயற்படுகின்ற அமைப்புக்களைக் குறிக்கும். இவ்வமைப்புக்கள் அரசியலில் நீண்டகாலப்பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இவ் அமுக்கக்குழுக்களானது தமது நோக்கத்தினை வென்றெடுக்க அரசாங் கத்தை சரியான வழியில் நிபந்தனைக்கு அடிபணிய செய்கின்றது.

அமுக்கக்குழுக்களின் வகைப்பாட்டில் அறிஞர்கள் மேலும் இரண்டு வகையாக வகைப்படுத்துகின்றனர். அவையாவன:

1. நலன்பேணும் குழுக்கள்
2. கருத்துவழிக் குழுக்கள்

என்பனவாகும்.

## 6. தற்கால அரசுகளில் அமுக்கக்குழுக்களின் பங்களிப்பு

ஒரு நாட்டின் அரசியல் செயற்பாட்டில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தும் இத்தகைய அமுக்கக்குழுக்களின் பங்களிப்பினை தொடர்பு படுத்தி ஆராயவேண்டியது முக்கியமான ஒன்றாகும். இந்தவகையில் பின்வரும் அடிப்படையில் அமுக்கக்குழுக்களின் பங்களிப்பினை ஆராயலாம்:

### அ. சட்டமன்றம்

அமுக்கக்குழுக்கள் சட்டமன்றத்துக்குள் தெரிவுசெய்யப்பட்ட தமது நபர்களை உள்ளே நுழைப்பதற்கு முயலுகின்றன. அவைகள் தேர்தலின் போது தேர்தல்களில் தமது அபேட்சகர்களுக்கு அரசியல் கட்சிகளின் பங்கினை வழங்கத்தக்கவகையில் அங்கத்துவ நியமனங்களில் பெரு மளவு செல்வாக்கு செலுத்தி வருகின்றன. குறிப்பிட்ட அரசியல்கட்சி ஒன்று அரசாங்கத்தினை உருவாக்கும் பொழுது அந்த அரசியல்கட்சியின் நலன்களை இட்டும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூடிய அக்கறை செலுத்தியும் இந்த அமுக்கக்குழுக்கள் சட்டமன்றத்துக்குள் தமது கையினை ஓங்கச்செய்கின்றன. இந்த அமுக்கக்குழுக்களின் வேட் பாளர்களின் வாக்குத் தொகுதியால் சார்பான நிதிகளை மேற்கொள்ளவும் அவற்றினை செலவழிக்கவும் வசூலில் ஈடுபடுகின்றனர். சாத்தியமான ஒவ்வொரு முயற்சியும் வேட்பாளர்களைத் தெரிவு செய்து தேர்தலில் ஈடுபடுத்தும் அளவிற்கு முன்னேறியுள்ளன. மாறாக அந்த அனுகூல மற்ற சுயேட்சகர்களை தோற்கடிக்க வேண்டும் என்ற மறைமுகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தையும் இச்செயற்பாடு உணர்த்துகின்றது. பின்பு இக்குழுக்கள் சட்டமன்ற அங்கத்தவர்களோடு உறவினை ஏற்படுத்த உதவுகின்றன. அமைச்சர்களிடம் இருந்து கேள்வி கேட்பதும் ஒரு குறிப்பிட்ட சட்ட மசோதாவிற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ கோசம் எழுப்புவது பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்களில் ஆதர வாகவோ அல்லது எதிராகவோ வாக்களிப்பது என்னும் விடயங்களுக்கு அரசியல்கட்சிகளும் இந்த அமுக்கக்குழுக்களுடைய சேவைகளை வேண்டி நிற்கின்றன.

## ஆ. நிருவாகத்துறை

நிருவாகத்துறையானது நவீனகாலத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த ஓர் அரசாங்கநிறுவனமாகக் காணப்படுகின்றது. அமுக்கக்குழுக்கள் தமது சொந்த தெரிவின் போது தெரிவு செய்யப்படுகின்றவர்களின் உயர்வான நிருவாகப்பதவிகளை வகிப்பதற்கு மிகக்கூடிய முக்கியத்துவத்தினை வழங்குகின்றனர் எனவும் தமக்கு விருப்பமான ஜனாதிபதியினையோ அல்லது பிரதம மந்திரியினையோ அல்லது செல்வாக்குமிக்க கபினட் மந்திரியினையோ தமது சுய இலாபம் கருதி நியமிக்கலாம். ஜனாதிபதி முறையொன்றின் முழுமையான நோக்கமும் ஜனாதிபதியின் அலுவல கத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் ஒரு பாராளுமன்ற முறையில் அத்தகைய ஒரு செயற்பாடானது பிரதம மந்திரியினாலோ முக்கிய கபினட் அமைச்சர்களினாலோ மேற்கொள்ளப்படுகின்றது. இவை சட்டமன்ற அங்கத்தவர்களின் பெரும்பாலானோரிலும் பார்க்க பெரும் எண்ணிக்கையிலான நிருவாக அதிகாரிகளின் ஒரு சிறுபகுதியினர் தமது கடமைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு சிறிய எண்ணிக் கையில் காணப்படும் இந்த அமுக்கக்குழுக்கள் உண்மையான தீர்மானங் களை மேற்கொள்வனவாக காணப்படும் அளவிற்கு விளங்குகின்றன. அமுக்கக்குழுக்களின் நலன்களைப் பாதிக்கின்ற பிரதம மந்திரி அல்லது அவரது அமைச்சர்களின் தீர்மானங்கள் பாராளுமன்றத்திற்குள் கொண்டு வரப்படும் போது அமுக்கக்குழுக்கள் அந்த மசோதாவினை முறியடிப்ப தற்கு முயற்சிகள் எடுப்பதில் இருந்து நாம் இதனை உணர்ந்து கொள்ள முடியும்.

ஊழல் மற்றும் முறைகேடான நிருவாக நடவடிக்கைகள் சம்பந் தமான செய்தியினை செல்வாக்கான நிலையில் இருந்து அமைச்சர் ஒருவர் அமுக்கக்குழுவிற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வெளிப்படுத்தப்படுகின்றது. இது தேர்தல் காலங்களில் அந்த மந்திரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துகின்ற ஊழல் மற்றும் லஞ்சம் சம்பந்தமான விடயங்களை குழுவின் நலன்களுக்கு எதிராக அதிகாரத்திற்கு வந்தபின்பு அவர் மேற்கொள்வாராயின் அவரது பழைய நடவடிக்கைகள் வெளிப்படுத்தும் அளவிற்கு பெருமளவு சக்திபடைத்ததாக அமுக்கக்குழுக்கள் நிருவாகத் துறையில் தமது தாக்கத்தினைச் செலுத்திவருகின்றது.

### இ. நீதித்துறை

நீதித்துறை எனக் குறிப்பிடப்படுவது அரசியலில் ஒரு முக்கியமான அம்சமாக கருதப்படுகின்றது. நீதிபதிகளை நியமனம் செய்வது என்பது ஓர் அரசியல் சார்ந்த விடயமாக காணப்படுகின்றது. எனவே முன்னணி வகிக்கும் அமுக்கக்குழுக்கள் நீதிபதிகளை நியமனம் செய்வதில் பெருமளவிலான அக்கறைகளைச் செலுத்திவருகின்றன. அவை நீதிபதி களை நியமிப்பதில் எப்பொழுதுமே உயர்வான நீதித்துறை சார்ந்த அதிகாரிகளை அரசின் உயர் பதவிகளை அவர்களுக்கு அது அனுகூல மானவற்றைச் செய்வதன் மூலம் தமது பக்கசார்பானவர்களை உரு வாக்கிக்கொள்வதற்கு முயல்கின்றனர். அந்தவகையிலே மேல்நீதி மன்றத்தின் நீதிபதியாக குறிப்பிட்ட ஒருவரை நியமிக்குமாறு அழுத்தம் கொடுக்கின்றனர். இதிலிருந்து விடுபட்டவழியில் குறிப்பிட்ட சில வழிகளில் அவர்களுக்கு பணக் கொடுப்பனவினை மேற்கொள்ளுவதன் மூலம் தமது சட்ட ஒழுங்குகளை அரச செயற்பாடுகளை தமக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத வகையில் செயற்பட வைக்கின்றனர்.

## 7. பணித்துறை ஆட்சியில் அமுக்கக்குழுக்களின் பங்களிப்பு

பணிக்குழு ஆட்சிமுறை என்பது அரசின் அரசியல் ரீதியான ஒரு நடு நிலையான செயற்பாட்டினையே குறிக்கிறது. ஆனால் அரசியல் கோட் பாட்டினைக் கற்கும் மாணவர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசின் எந்த ஒரு பகுதியிலும் அரசின் சாயலில் இருந்து சுதந்திரமாக இயங்கமுடியாது. பணிக்குழு ஆட்சித்துறை தமது சுயநலங்களைக் கொண்டுள்ளது, எனவே அமுக்கக்குழுக்களின் தலைவர்கள் குறித்த நாடொன்றின் பணித்துறை ஆட்சியாளர்களுடன் நெருங்கிய உறவி னைப் பேணுவதற்கு முயல்கின்றனர். இங்கு அவர்கள் தமது பாதுகாப்பு நிலையினை உறுதிப்படுத்த முனைகின்றனர். ஒரு நாட்டின் நிரந்தர சிவில் பணியாளர்களைக் கொண்டிருப்பதில் சட்டசபையின் உறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினர்கள் விரும்பும் தொகுதியினரையே ஆகும். இந்தவகையில் அவர் கள் ஒரு சிறந்த நிலையை பொதுப் பணியாளர்களை வைத்திருப்பதில் தமது நோக்கங்களை அடைந்து கொள்கின்றனர். பொதுப்பணித்துறை ஆட்சியினருக்கு அன்பளிப்புகள், நன்கொடைகள், வெகுமானங்கள் போன்ற வேறுபட்ட லஞ்ச கொடுப்பனவுகளை மேற்கொள்வதால் அவர்களை தம் பக்கம் ஈர்த்துக் கொள்கின்றனர். பணித்துறை ஆட்சி யினர் தமது நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அரச சேவையில் மேல்பதவிகளில் இருக்கும் அதிகாரிகளை காக்காபிடிக்கும் ஒரு வழிமுறை கூட ஓர் அம்சமாக காணப்படுகின்றது. இந்தவகையில் நிரந்தர அரச அதிகாரிகள் நாட்டின் அரசால் பின்பற்றப்படுகின்றது. அமுலாக்கப்படுகின்றதுமான தேசியக்கொள்கையின் அடிப்படையில் அரசர்கள் செயற்படுபவர்களாக காணப்படுகின்றனர்.எனவே இவற்றின் ஊடாக அமுக்கக்குழுக்கள் பணித்துறையினரிடம் தங்களது செல் வாக்கினை செலுத்திவருகின்றனர்.

மேலும் பல்லின மற்றும் அரசின் நடைமுறையினை சிறந்த வகையில் கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்தில் அல்லது ஜனநாயக நாடொன்றில் பிரயோகிக்கத்தக்கதான வகையில் அமுக்கக்குழுக்கள் சம்பந்தமான இரண்டு முக்கிய கருத்துகள் காணப்படுகின்றன. ஆனால் நாடுகளைப் பொறுத்தவகையில் இவை வேறுபட்டு காணப்படுகின்றன. இந்தவகையில் ஓரினசமூக முறைமையினைக் கொண்ட நாடுகளில் அமுக்கக்குழுக்களின் செயற்பாடுகளானது சற்று குறைவாகவே காணப் படுகின்றது. பல்லின நாடுகளின் அமுக்கக்குழுக்களின் செயற்பாடுகள் அதிகமாக காணப்படுகின்றன. ஆனால் அவை ஒரு நெறியற்ற பங்களிப் பினையே வழங்கிவருகின்றன. அமுக்கக்குழுக்கள் யாவும் தலைவரை விமர்சித்தும் எதிர்த்தும் அதிகாரத்தில் இருக்கும் அவரது ஆட்சியினை பலவந்தமாகச் செயற்படுத்தியும் வருகின்றனர். இது ஒரு வேறுபட்ட நிலையாகும். அத்தகைய நிலையில் இவ்வாறு செயற்படுகின்ற அமுக்கக் குழுக்கள் சமூகவிரோத சக்திகளாக மாற்றம் பெறுகின்றது. தொடர்ந்து அவை அரசியல் நீரோட்டங்களில் மாற்றமுறும் அல்லது வெற்றி கரமான இராணுவ சதிப்புரட்சிகளை மேற்கொள்ள முயற்சிக்கும். அடுத்ததாக ஜனநாயக நாடுகளைப் பொறுத்தவரையில் கருத்தில் எடுக்கப்படவேண்டியவிடயம் மனிதனின் மேற்கத்தைய உலகில் முன்னேறிய நாடுகளுக்கு இத்தகைய அமுக்கக்குழுக்களை எங்ஙனம் பிரயோகிப்பது என்பதாகும். அரசியல் கலாசாரம் மிகவும் பின்தங்கி யுள்ள அபிவிருத்தியடைந்துவரும் சமூகங்களுக்கு இது பிரயோகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தக்கதல்ல. ஆனால் மிகப்பிரதானமான உண்மையாதெனில் நவீன அல்லது மரபு ரீதியான ஜனநாயக மற்றும் பல்லின சமூகங்கள் வாழத் தக்கதாக இருக்கின்ற ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் நடமுறைக்கு ஏற்ப தமது பங்களிப்பினை அமுக்கக்குழுக்கள் வழங்கிவருகின்றன. இவற்றினுடைய பங்களிப்பானது அமுக்கக்குழுக்களிடையே உற வினைப் பேணவும் உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளு வதும் அரசாங்கத்தின் சார்பில் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் தாக்கத் தினை செலுத்திவருவதாகக் காணப்படுகின்றது.

## 8. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் அமுக்கக்குழுக்கள்

### அ. பிரித்தானியாவில் அமுக்கக்குழுக்கள்

பொதுவாக மக்களுடைய சமுதாய பொருளாதார வாழ்வில் அரசாங்கம் கூடுதலாக பங்கு கொள்கின்ற காரணத்தினால் அமுக்கக்குழுக்கள் பிரித்தானியாவில் மிக உன்னத வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. பிரித்தானிய அரசாங்க முறையில் அரசாங்க இயந்திரத்தின் பிற பாகங் களுடன் இணைந்து அமுக்கக் குழுக்கள் செயற்படுகின்றன. பதினான் காம் நூற்றாண்டிலேயே அமுக்க குழுக்களின் செயற்பாடுகள் இருந்த போதிலும் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்து அதன் வளர்ச்சி கூடியளவு அவதானிக்கப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் அடிமை ஒழிப்பு குழுவாகவும், தானிய எதிர்ப்பு சட்ட கலகமாகவும் அக்காலப் பகுதியில் செயற்பட்டன. தொழிற் கட்சியின் தோற்றத்தை தொடர்ந்து தொழிற் சங்கமும், சோசலிச இயக்கமும் முக்கியம் பெறத்தொடங்கின. பிரித்தானியாவில் அமுக்க குழுக்களானது அரசியல் கட்சிகளுடன் இரகசியத் தொடர்புகளை வைத்துக் கொள்கின்றன. குடியாட்சி கோட் பாடுகளையும் அரசியலமைப்பு தத்துவ கோட்பாடுகளையும் அவை கவனமாக பின்பற்றுகின்றன. அமுக்க குழுவானது தமது கருத்துக்களை மக்களிடம் தெரிவித்தல் என்ற வழிமுறை மூலமாக தனது கருத்தை தெரிவிக்கின்றது. அடுத்து வரும் பொதுத்தேர்தலில் தங்களுடைய ஆதரவை கொடுக்க மாட்டோம் என கட்சிகளுக்கு அச்சுறுத்தலும் கொடுக்கின்றன. தனது நலனை பாதுகாத்துக் கொள்வதற்காக ஜனநாயகத் துக்கு புறம்பான எந்த முறையினையும் கையாள்வது இல்லை.

பிரித்தானிய தேசத்தில் வணிகக்குழுக்கள், கூட்டுறவு அமைப் புக்கள், தொழிற்சங்கங்கள் போன்றன அமுக்கக்குழுக்கள் பொருளாதார நலன்களை பாதுகாக்கின்றன. அனால் வேறு சில அமுக்கக்குழுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம், அணுவாயுதக்குறைப்பு, விலங்குகள் பாதுகாப்பு போன்ற சில நோக்கங்களையுடைய அமுக்கக் குழுக்களும் காணப்படுகின்றன. இங்கு அமுக்கக் குழுக்கள் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதனால் அரசியலில் அவற்றின் செயற்பாடுகள் நிர்வாகம், பாராளுமன்றம், பொதுமக்கள் ஆகிய மூன்று நிலைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இம் மூன்று நிலைகளில் கொள்கை வகுத்தல், நிறைவேற்றல் முதலிய அரசாங்க அதிகாரங்கள் நிர்வாக துறையினரிடம் குவிக்கப் பட்டிருக்கின்ற காரணத்தினால் அமுக்கக் குழுக்கள் நிர்வாகத் துறையின் மீது கூடுதலான ஆதிக்கம் செலுத்துகின்றன. நிர்வாகத்துறையினரிடம் இருந்து பயனேதும் பெறாவிட்டால் அது தனது கோரிக்கையை பாராளுமன்றத்துக்கு எடுத்துச் செல்கின்றது. இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளுதல், தீர்மானங்களை கொண்டு வருதல், விவாதம் நடத்தக்கோருதல் போன்ற வழிமுறைகளைக் கைக்கொள்கின்றன. அமுக்கக் குழுக்களின் உதவியினால் தேர்தலில் வெற்றி பெற்று சட்ட மன்றத்தில் அமர்ந்திருக்கும் பிரதிநிதிகள் மூலமாக தமது நோக்கினை நிறைவேற்றுகின்றன.

பிரித்தானியாவில் அமுக்கக் குழுவானது பாராளுமன்றத்துக்கும் ஆட்சியாளர்களுக்கும் சில உதவிகளை செய்கின்றன. சில வேளைகளில் அரசியல் துறையின் நிர்வாகத்துக்கு உதவியும் செய்கின்றன. அதே வேளை பாராளுமன்றத்தினாலோ அல்லது நிர்வாகத்தினாலோ ஏதேனும் ஓர் எதேச்சாதிகார சம்பவம் நடை பெறுவதை தடுக்கும் நடவடிக்கையிலும் அமுக்க குழுக்கள் ஈடுபடுகின்றன. மேலும் அமுக்க குழுக்கள் தங்களுடைய நலன்களை பாதுகாப்பதற்கு பலவந்தம், கையூட்டல் போன்ற அரசியல் அமைப்புக்கு புறம்பான வழிமுறைகளையும் கையாள்கின்றன.

பிரித்தானியாவில் ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பொதுமக்கள் கருத்தை அமுக்க குழுக்கள் உருவாக்குகின்றன. உள்ளூர் செய்தியாளர்கள், திருச்சபையினர், மருத்துவர், ஆசிரியர் ஆகியோரின் கருத்துக்களை பொதுமைப்படுத்தி பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதும் இவ் அமுக்கக்குழுக்களே. இவ்வாறு பிரித்தானியாவின் அரசியலில் அமுக்க குழுக்கள் ஆட்சியாளர்களையும் மக்களையும் சிறப்பான முறையில் இணைத்து அந்நாட்டின் பாராளுமன்ற அரசியல் சிறப்புப் பெற பங்களிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. அமெரிக்காவில் அமுக்கக்குழுக்கள்

ஐக்கிய அமெரிக்கா உலகப்பெரும் வல்லரசாக இருக்கின்ற அதே வேளையில் சிறந்ததோர் அரசியல் கலாசாரத்தையும் வளர்த்தெடுத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் அங்கு அமுக்கக்குழுக்கள் சிறப்பாக வளர்ச்சி கண்டிருப்பதாகும். ஆரம்ப காலத்தில் அமுக்கக்குழுக்களின் செயற்பாடுகள் அவசியமற்றது என உணர்ந்திருந்தனர். ஆனால் இன்று அதன் அவசியம் உணரப்பட்டு ஏறக்குறைய ஐம்பதுக்கும் மேற்பட்ட அமுக்கக்குழுக்கள் இங்கு சிறப்பாக செயற்படுகின்றன. இவை அளவில் பெரியனவாகவும் சிறியனவாகவும் இருந்து தேசிய மட்டத்திலும் மானில மட்டத்திலும் செயற்படுவதை அவதானிக்கலாம்.

அமெரிக்காவில் அமுக்கக்குழுக்கள் பெருமளவிற்கு சுயஆட்சி தன்மையுடன் செயற்படுகின்றன. இதனால் அங்கு எண்ணிக்கையில் அதிகமான அமுக்கக்குழுக்கள் காணப்படுகின்றன. அத்துடன் அரசியல் நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்பட முடியாத அளவிற்கு வலிமை மிக்கனவாகவும் காணப்படுகின்றன. அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் கூட இக் குழுக்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. அமெரிக்க அரசியல் அமைப்பானது அதிகார பிரிவினை கோட்பாட்டின் வியாபகத்தொகுப்பாக இருப்பதனால் அதன் எல்லா ஆட்சித்துறை மையங்களிலும் பங்குகொள்கின்றன. அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் நாட்டின் ஆட்சியாளராக இருப்பதனால் அமுக்கக் குழுக்கள் எப்போதும் அவரை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன. இக் குடியரசுத் தலைவர் மீது அதிருப்தி அடையும் போது அவை சட்ட மன்றத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முனைகின்றன. இச் செயல் சில வேளை அமெரிக்க ஆட்சியாளரை முடக்கக்கூடிய வலிமை பெற்றனவாக திகழ்கின்றன. குடியரசுத் தலைவர் மீதோ அல்லது காங்கிரசின் மீதோ தமது செல்வாக்கை கையாள முடியாமல் போய் விட்டால் நிர்வாகத்துறையின் ஆணைகளையோ சட்டத்துறை சட்டங்களையோ கையாள இயலாமல் போய் விட்டால் நிர்வாகத்துறையின் ஆணைகளையோ சட்டத்துறை சட்டங்களையோ செல்லுபடியாகாமல் செய்வதற்கு நீதித்துறை அதிகாரிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயல்கின்றன. முடிவு சட்ட மன்றத்தினாலோ குடியரசுத் தலைவரினாலோ எடுக்கப்படுமாயின் தனது ஆதரவு திரட்டும் உத்தி மூலம் கட்டுப்படுத்தும் முறை கையாளப்படுகின்றன. அமெரிக்காவில் செயற்படும் பிரதான அமுக்கக் குழுக்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வணிகர் நல அமுக்கக்குழுக்கள்
2. பணியாள் நல அமுக்கக்குழுக்கள்
3. பண்ணையாட்கள் அமுக்கக்குழுக்கள்
4. சிந்தனையாளர் அமுக்கக்குழுக்கள்
5. சிறுபான்மையோர் அமுக்கக்குழுக்கள்

அமெரிக்காவில் வணிகக்குழுக்களிடையே ஆட்பலமும் பண பலமும் இருப்பது இக் குழுக்களின் மனோதிடத்தை அதிகரிக்கச் செய்கின்றது. இந்த வகையில் வணிகக் குழுக்களுக்கிடையே சிறந்த எடுத்துக்காட்டாக வணிகர் சங்கமும் தேசிய பொருள் உற்பத்தியாளர் சங்கமும் இருக்கின்றன. இவற்றைத்தவிர அமெரிக்காவில் பெரிதும் சிறிதுமாக வேலை செய்கின்ற பல தொழிலாளர் நலன் பேணுவதற்கான அமுக்கக்குழுக்கள் இயங்குகின்றன. மேலும் வழக்கறிஞர்கள், சட்ட வல்லுனர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், கட்டிட கலைஞர்கள் எல்லாம் தங்களுடைய நலன்களை அடையும் பொருட்டு பல பணியாளர் நிறுவனத்தின் மூலமாக தங்களுக்கு பிரதிநிதித்துவத்தை தேடிக்கொள்கின்றனர். நீக்ரோக்கள் சில குறிப்பிட்ட இன, மத, சமுதாய நலன்களை பாதுகாக்கும் பொருட்டு தங்களுக்கே உரிய சில குழுக்களை அமைத்துக் கொள்கின்றன. இவை சிறுபான்மை குழுக்களுக்கான நலன் பேணுபவையாக இருக்கின்றன.

ஐக்கிய அமெரிக்க அரசியலில் அமுக்கக் குழுக்கள் அந்த நாட்டின் அரசியல் செயல் முறையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல சட்ட மன்ற உறுப்பினர்களை தெரிந்து கொள்ளும் முறையை பின்பற்றுகின்றன. சாதாரணமாக விருந்து அளிக்கும் முறையில் இருந்து வெகுமானங்கள் அளிக்கும் வகையில் அவை சட்ட மன்ற உறுப்பினர்களுடன் தொடர்புபடுகின்றது. அது மட்டுமன்றி வேட்பாளர் சார்பாக பிரச்சாரம் மேற்கொள்கின்றது. இங்கு தங்களுடைய நலன்களை பேணும் பொருட்டு குடியாட்சி முறைக்கு ஒவ்வாத முறைகளையும் பின்பற்றுவதாக அதனை குறை கூறுவர். இவ்வாறு ஐக்கிய அமெரிக்க அமுக்கக் குழுக்களில் குறைபாடுகள் காணப்பட்டாலும் அமெரிக்க குடியாட்சி முறையானது வெற்றிகரமாக செயற்படுவதற்கு அமுக்க குழுக்களின் பங்களிப்பு காத்திரமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. பிரான்சில் அமுக்கக்குழுக்கள்

பிரான்ஸ் பல கட்சி முறையை பின்பற்றும் நாடு என்ற வகையில் அங்கு பல வகையான அமுக்கக்குழுக்களும் செயற்பாட்டில் உள்ளன. இங்கு ஆரம்பத்தில் நிலையான அரசியல் கட்சிகள் செயற்பாட்டில் உள்ளன. ஆரம்பத்தில் நிலையான அரசியல் கட்சிகள் இல்லாத காரணத்தினால் பல அமுக்கக்குழுக்கள் அங்கு தோன்றியுள்ளன. காரணம் பன்முக கலாசாரமும் கடுமையான தத்துவ போக்கும் அங்கு காணப்படுவதாகும். பிரான்சிய அமுக்கக்குழுக்களுக்கிடையே பொதுவான நோக்கமும் நலன்களும் இருந்த போதிலும் அவை சிறு உட் குழுக்களாக பிரிந் துள்ளன. முன்னாள் இராணுவத்தினர், குடியானவர்கள், தொழிலாளிகள் ஆகியோர் பல்வேறு முரண்பட்ட அரசியல் தொடர்புகளையும் இலட் சிய நோக்கங்களையும் உடைய பல்வேறு அமைப்புகளுக்கிடையே பிரிந்து காணப்படுகின்றனர்.

பிரான்சிய மக்களுக்கு திட்டவட்டமான அரசியல் நோக்கங்களை உருவாக்கும் இயல்பு கிடையாது. ஆகையால் எந்தவோர் அரசியல் கட்சியும் சமுதாயத்தின் எந்தவொரு குறிப்பிட்ட பிரிவின் அல்லது வகுப்பின் உறுதியான ஆதரவைக் கோருதல் இயலாது. இதனால் அரசியல் முறையில் அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக்குழுக்களுக்கும் இடையில் எந்த வேறுபாடும் கிடையாது. இதற்கு காரணம் அரசியலில் ஒருமித்த கருத்து எதுவுமில்லாதிருப்பதுதான். ஆகையால் எந்தவோர் அரசியல் கட்சிக்கும் சமுதாயத்தின் எந்தவொரு குறிப்பிட்ட பிரிவின் அல்லது வகுப்பின் உறுதியான ஆதரவைக்கோருதல் இயலாது. பிரான்சில் கட்சிகளை விட அமுக்கக்குழுக்களே வலுவான இடத்தைப்பெறு கின்றன. இதனால் அரசியலில் தடம் பதிப்பவைகளாக அரசியல் கட்சிகளை விட அமுக்கக்குழுக்களே முக்கியம் பெறுகின்றன.

சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான பல அமுக்கக் குழுக் களைக் கொண்ட பிரான்சில் ஒவ்வொரு குழுவும் பல்வேறு கழகங் களைக் கொண்டு இயங்குகின்றன. வேலை வழங்குவோர் , தேசிய கழகம் போன்ற பெரிய அமைப்புகளையுடைய குழுக்கள், ஓய்வு பெற்ற இராணுவ அமைப்பைக்கொண்ட குழுக்கள் மற்றும் மத ரீதியான அமுக்கக்குழுக்கள் என அமுக்கக்குழுக்கள் விரிவுபட்டதாக பிரான்சில் அமையப்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈ. இலங்கையின் அமுக்கக் குழுக்கள்

இலங்கையின் அமுக்கக் குழுக்களின் செயற்பாடுகளை நோக்கும் போது அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், அகில இலங்கை தோட்ட தொழிலாளர் காங்கிரஸ், தொழிற்சங்க அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த வகையில் இலங்கையில் உள்ள அமுக்கக்குழுக்களின் மிகவும் சக்தி வாய்ந்த அமைப்பாக இலங்கையில் உள்ள பௌத்த துறவிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான பௌத்த காங்கிரசைக் குறிப் பிடலாம். இந்த அமைப்பானது பௌத்த மக்கள் முன்னிலையில் தமக்குள்ள ஆதரவினையும் செல்வாக்கினையும் பயன்படுத்தி தமக் குள்ள கோரிக்கைகளை வென்றெடுப்பதிலும் அரசாங்க தீர்மானங்களை வென்றெடுக்கவும் சக்திவாய்ந்த அமைப்பாகவும் காணப்படுகின்றது.

இலங்கையில் இன ரீதியான முரண்பாடுகள் வலுவடைந்த மைக்கும் இனப்பிரச்சினை ரீதியான தீர்வு முயற்சிகள் தோல்வியடைந் தமைக்கும் பௌத்த காங்கிரசின் செயற்பாடு காரணமாக அமைகின்றது. உதாரணமாக 1958 பண்டா – செல்வா ஒப்பந்தம், 1965 டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன தோல்வி அடைந்தமைக்கு இவ்வமுக்கக்குழுவின் செயற்பாடே குறிப்பிடத்தக்கதாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பண்டாரநாயக்கா அவர்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் யாப்பு சீர்திருத்த கோரிக்கையும் நடைமுறைப்படுத்த முடி யாமல் போனமைக்கும் இவ் அமுக்கக்குழுவே பிரதான காரணமாக இருந்தது என்பதை அவதானிக்கமுடிகிறது.

இலங்கையில் மற்றொரு முக்கியம் வாய்ந்த அமுக்கக்குழுவாக தோட்டத்தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பை குறிப்பிடலாம். 1947, 1948ஆம் ஆண்டு குடியுரிமை வாக்குரிமை சட்டத்தின் கீழ் குடியுரிமை வாக்குரி மையை இழந்த பல இலட்சக்கணக்கான இந்திய வம்சாவளியின மக்கள் உரிமைகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு இந்த அமைப்பின் செல் வாக்கே பிரதானமான காரணமாகும். எனவே இன்று இவ் அமைப்பு ஓர் அமுக்கக்குழுவாக இருந்துவருவதையும் அதேநேரம் ஒருகட்சியாகவும் இருப்பதையும் காணலாம். இதன் அடிப்படையில் இதனை இலங்கை அரசியலில் ஒரு புறநடை அம்சமாக குறிப்பிடுகின்றனர். இது இவ்வாறு பல்வேறுபட்ட அமுக்கக்குழுக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் செயற்படுவதை அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட நாடு ஒன்றின் அரசியல் நடைமுறையில் காணப் படுகின்ற பல்வேறுபட்ட அமுக்கக்குழுக்களின் பங்குபற்றுதலானது வேறுபட்டதாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்தவகையில் நலக் குழுக்கள் எனக் கூறப்படுபவை அரச செயற்பாட்டின் ஊடாக தமது நலன்களைப் பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அர்ப் பணித்த குழுவாகவும் அத்தோடு ஓர் அமைப்பாகவும் உள்ளடக்கிய வகையில் அரசியல் விஞ்ஞானத்தின் பரந்த நோக்கத்தில் அதன் கற்கை நெறியில் பரந்துவிரிந்து காணப்படுகின்றது. அரசறிவியல் என்பது அதிகாரத்துக்கான ஒரு போராட்டமாகும். அந்தவகையில் சகல முகவர் அமைப்புக்களும் அரசியல்துறையோடு தொடர்பினை பேண விரும்பு கின்றன. எனவே ஒரு ஜனநாயக முறை வெற்றிகரமாக செயற்படுவதற்கு அரசியல் கட்சிகளோடு இணைந்தவகையில் பல்வேறுபட்ட அமுக்கக் குழுக்களுடைய செயற்பாடும் அவசியமானதாக காணப்படுகின்றன. அரசியல்கட்சிகளுக்கும் அமுக்கக்குழுக்களுக்கும் இடையிலான தொடர் பானது இரட்டைப்பாதை போன்றது. அரசியல்கட்சிகள் குழுக்களோடு இணைந்தவகையில் ஜனநாயக முறையின் செயற்பாடானது சாத்திய மானதாகவும் அரசியல் முறையில் எந்த ஒரு நிலைப்பாட்டிலும் அதி காரத்தைப் பிரயோகிப்பதில் திறமையாக செயற்படத்தக்கவகையிலும் அமுக்கக்குழுக்கள் உதவுகின்றன. இந்தவகையில் அரசியல் செயற் பாட்டால் இவ்விருதுறைகளின் பங்களிப்பு சமநிலையில் பேணப்படுவது அவசியமாகும். ஒரு ஜனநாயகமானது அரசியல்கட்சிகள் இன்றி செயற் படுத்தமுடியாமல் இருப்பது போன்று அமுக்கக்குழுக்களின் உதவி இல்லாமலும் அத்தகைய அரசியல்கட்சிகள் நிலைத்துநிற்கமுடியாது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அரசறிவியலில் இந்த அம்சத்தைப்பற்றிய விமர்சனம் பல்வேறு பட்ட விவாதங்களைத் தூண்டியுள்ளது. அரசியல் ஆய்வாளர்கள், துறை சார்பாகவும் உள்நாட்டு நலன்கள் சார்பாகவும் அமுக்கக்குழுக்கள் தோற்றம் பெறுகின்றன எனக்குறிப்பிடுகின்றனர். பல நிலைகளில் அவற்றினுடைய பங்களிப்பானது மிகவும் முக்கியமானதாக விளங்கு கின்றது. ரூசோவினுடைய கருத்தின்படி அமுக்கக்குழு என்பது மிகவும் முக்கிய ஓர் அம்சமாக காணப்படுகின்றது. குழுக்களின் தலைவர்கள் பொது நலனையோ அல்லது பிரத்தியேக அம்சங்களையோ கருத்தில் கொண்டு செயற்படவேண்டும் என்பது அவரது வாதமாகும். வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள், வன்முறைகள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணா விரதபோராட்டங்கள் போன்ற பல்வேறுபட்ட அமுக்கக்குழுக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் மேற்கொள்வது கவனத்தில் தக்கது. இது முழு ஜன நாயக முறைமையிலும் தாக்கம் செலுத்துவதாக காணப்படுகின்றது. மேலும் சில அமுக்கக்குழுக்கள் சமாதானம் மற்றும் பாதுகாப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக பிரயோகிக்கப்படும் சட்டங்கள் என்பவற்றை எதிர்க்கும் செயற்பாட்டையும் கொண்டிருக்கின்றன. சமூக ஒருங்கின்மையில் சீர்குலைவுகள் முறைகேடான வகையில் இத்தகைய அமைப்புக்களால் பலவந்தப்படுத்துகின்ற நிலையில் அரசாங்கத்தின் ஒழுங்குக்கட்டுப்பாடு அவற்றுக்கு எதிராக திரும்புவதை தவிர்க்க முடியாத ஒன்றாக விளங்குகின்றது. பேற்றிக்ஸ் என்பவர் இதுபற்றி குறிப்பிடும் பொழுது அமுக்க குழுவானது குறிப்பிட்ட தேவைகளையும் தமது நோக்கங்களையும் அடைந்து கொள்ளத்தக்கவகையில் புரட்சி களைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் இத்தகைய குழுக்கள் மீது அரசாங்கம் அதிகாரத்தை பிரயோகிக்கின்றது' என்கின்றார்.

எனினும் உண்மையிலேயே ஜனநாயகம் ஒன்று இருக்கவேண்டு மானால் அமுக்கக்குழுக்களும் அவசியமாக இருந்தே தீரவேண்டும். அமுக்கக்குழுக்களை இல்லாது ஒழிப்பது என்பது ஜனநாயகத்தை அஸ்தமிக்க செய்வதேயாகும். அமுக்கக்குழுக்கள் நேர்வழியிலும் சிறந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையிலும் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றன. இந்த காரணத்துக்காக அவை இருப்பதற்கும் செயற்படு வதற்கும் அனுமதிக்க வேண்டும். ஆனால் சில குழுக்கள் அழிவுப் பாதையில் செயற்படுவதற்கும் முயல்கின்றன. இவற்றினை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைப்பது அவசியமாகும். அமுக்கக்குழுக்கள் அரசியலைப்பற்றி சொல்வதான முழுவதையும் சரியெனக் கருதிட முடியாது. உண்மையில் சுயநலம் பேணுவதாகவும் இருக்கலாம். இந்த வகையில் நலன் என்பதை ஓர் அடிப்படை சக்தியாகக் கொண்டு குறிப் பிட்ட குழுவானது தன்னைப்பாதுகாத்துக் கொள்வதற்கும் அபிவிருத்தி செய்கின்றது.

எனவே ஆக்கபூர்வமான செயற்பாட்டின் பங்களிப்பினை அமுக்கக் குழுக்கள் இனம் காண்பது அவசியமாகும். எனவே இவை அழிவுப் பாதையில் செல்வதை ஏற்கக்கூடாது. மிக சுருக்கமாக கூறுவதானால் டொம் என்பவர் குறிப்பிடுவதுபோன்று அமுக்கக்குழு ஒன்றினோடு செய்துகொள்வதற்கு இரண்டு விடயம் மாத்திரமே காணப்பட்டது. அதனுடைய ஆதரவினைப் பெற்றுக்கொள்ளுவார்கள். அதனை நீதியாக ஏற்காவிட்டால் நிராகரித்துவிடுவார்கள் என்கின்ற அவரது கருத்துக்கள் சக்திமிகு அமுக்கக்குழுவானது ஒரு நாட்டின் அரசாங்கத்துக்கு இன்றி யமையாததாகவே விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 3

# பொதுசன அபிப்பிராயம்

## (Public Opinion)

### 1. அறிமுகம்

அரசாங்கம் மற்றும் அதன் செயற்பாடுகள் அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள், அரசியல் ரீதியாக முக்கியத்துவமிக்க நிகழ்வுகள் என்பன பற்றி பொதுமக்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் பொதுமைப்படுத்தப்பட்ட நிலையே பொதுசன அபிப்பிராயமாகும்.

'அபிப்பிராயத்தினடிப்படையிலே அரசாங்கம் தாபிக்கப்படுகின்றது' என்ற நீதிமொழி மிகக் கொடுங்கோன்மையான அரசாங்கத்துக்கும் நியாயமான அரசாங்கத்துக்கும் பொதுவானதாகும். பொதுசன அபிப்பிராயம் என்பது தனிநபர்களின் கருத்துக்களின் ஓர் ஒழுங்கமைப்பாகும். அதாவது தொடர்பாடலின் ஒத்துழைப்பானது பெறுபேறும் பரஸ்பர செல்வாக்குமாகும். ஆனால் சனநாயகம் மற்றும் சனநாயகமல்லாத அரச அலகுகளில் பெறக்கூடிய அபிப்பிராயத்தில் ஒரு வித்தியாசம் இருக்கின்றது. சனநாயகமல்லாத அரச அலகில் அபிப்பிராயம் என்பது வெறும் ஆமோதித்தல், சம்மதித்தல் அல்லது அதிகாரத்துக்கு மரியாதையாக அடிபணிதல் அல்லது கீழ்ப்படிதல் அல்லது அதிகாரத்துக்கு மரியாதையாக அடிபடிதல் கீழ்ப்படிதலின் ஒருபழக்கம் அல்லது கொடுங்கோன்மைக்கான அச்சம் என்பனவாகவே இருக்கும். அந்த அபிப்பிராயம் இயல்பாக ஏற்பட்ட ஒன்றோ அல்லது தனிநபரின் சுதந்திரமான ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட கருத்தாகவோ இருக்காது.

அதே வேளை சர்வாதிகார அரசாங்கங்களில் பொதுசன அபிப்பிராயம் என்பது இட்டுக்கட்டித் தயார்படுத்தப்பட்டதாகவும். அரசாங்கத்தாலேயே ஒழுக்காற்று செயற்படத்தக்கதாகவும், கருத்தியல்சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவும் இருக்கும். கருத்துக்களின் அபிப்பிராயங்களின் மோதலில் இருந்து சுதந்திரமாக வெளிப்படும் அபிப்பிராயம் மேலும் சமுதாயத்தின் சேமநலன்பால்பட்டதும் மக்களின் கருத்தை பிரதிநிதித்துவம் செய்வது மான அபிப்பிராயம் என்பது அடிப்படையிலேயே ஒரு சனநாயக ரீதியான செயன்முறையாகும். அத்தகைய ஓர் அபிப்பிராயம் பொதுசன அபிப் பிராயம் என்ற வகிபங்கை மேற்கொள்ளும் என்பதுடன் மக்ஐவர் குறிப்பிடுவதுபோல பொதுசன அபிப்பிராயத்தின் இந்த இடையறாத நடவடிக்கைதான் சனநயாகத்தின் உந்து சக்தியாகும்.

பொதுசன அப்பிப்பிராயம் உருவான வரலாற்றை திட்டவட்ட மாகக் குறிப்பிட முடியாது. மக்கள் குரலுக்கு தெய்வீகத் தன்மை உண்டென கிரேக்கர்கள் நம்பினார்கள். உரோமானியர்கள் மக்களின் சம்மதம் என்ற பதத்தை நியாயாதிக்கம் சார் கருத்தில் மட்டும் பயன் படுத்தினர். மத்தியகால யுகங்களில் மக்களின் குரல் கடவுளின குரல் - என்ற பழமொழி பொதுவான நம்பிக்கையாக இருந்ததுடன் அரசியல் நடத்தையின் நியமமாகவும் இருந்தது. நிக்கலோ மாக்கியவலி என்பவர் மக்களின் குரலை கடவுளின் குரலுடன் ஒப்பிட்டார். ரூசோ எல்லோ ருடைய அபிப்பிராயம் பற்றிய தன்னுடைய கோட்பாட்டை அவர் வேறுபடுத்திக் காட்டினார். பொதுசன அப்பிப்பிராய எண்ணக்கருவுக்கு அடிப்படையான எண்ணம் பிரான்சியப் புரட்சியின் பின்னர் முதிர்ச்சி யுற்று அது ஒரு சனநாயக செயல் முறையாகியதுடன் பொதுவான இணக்கப்பாட்டின் தொழிற்பாட்டுக்கான ஓர் அளவு கோலாகவும் அரசாங்க நடவடிக்கையினதும் கொள்கையினதும் உந்து சக்தியாகவும் மலர்ச்சியுற்றது.

அண்மைக்காலங்களில் சில புகழ்வாய்ந்த அறிஞர்கள் இப்பகு தியை ஒரு விசேடமான ஆய்வுப்பகுதியாக தன் வாயிலாக பொதுசன அபிப்பிராயத்தின் எண்ணக்கரு ஒரு புதிய பொருளையும் பெற்றுக் கொண்டது. பொதுசன அபிப்பிராய எண்ணக்கருவின் அடிப்படையான அனுமானங்களின் செல்லுபடித்தன்மையை அவர்கள் ஆட்சேபிப்ப துடன் அது வாழ்க்கையின் யதார்த்தங்கள் எதுவுமற்ற ஒரு பாரம்பரிய அணுகுமுறை என்றும் கண்டனம் செய்கின்றனர்.

இன்றைய மக்களாட்சியில் பொதுசன அபிப்பிராயம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. மக்கள் விரும்பும் ஆட்சியையே அரசாங்கங்கள் நடத்துகின்றன. சர்வாதிகார ஆட்சியாளர்கள் கூட மக்கள் கருத்துக்கு முக்கியத்துவமளித்து கடுமையான சட்டங்கள் மூலம் அரசுக்கு ஆதரவான கருத்தை உருவாக்க பெரும் முயற்சியை மேற் கொள்கின்றனர். மாற்றுக்கருத்தைத் தடை செய்கின்றனர். இதிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகையான அரசியலமைப்பாக இருந்தாலும் மக்கள் கருத்து முக்கியத்துவம் இருந்தாலும் மக்கள் கருத்து முக்கியத்துவம் பெற்று விளங்குவது தெளிவாகின்றது.

பொதுசன அபிப்பிராயம் என்பது உண்மை. எல்லா மக்களின் ஒட்டு மொத்தமான கருத்தாக இருப்பதில்லை. பெரும்பான்மையான மக்கள் அரசியல் நடவடிக்கையில் கவனம் செலுத்துவதில்லை. விபரமறிந்த ஒரு சிலரின் கருத்தே மக்கள் கருத்து என்றும், பின்னர் மக்களால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு பொதுக்கருத்து உருப் பெறுகின்றது எனும் கூற்று நிலவுகின்றது. இதில் ஓரளவுக்கே உண்மை இருக்கின்றது. பெரும்பாலான பிரச்சினைகளில் மக்கள் தங்களுக்கென தனிக்கருத்தைக் கொண்டுள்ளார்கள். அக்கருத்திற்கு எதிரானவற்றை நிராகரிக்கின்றனர்.

## 2. பொதுசன அபிப்பிராயம் - பொருள் விளக்கம்

பொதுசன அபிப்பிராயம் என்னும் சொல் மிக எளிமையான தமக்குத் தாமே பொருள் விளக்கம் உடையதாகத் தோன்றினாலும் உண்மையில் தெளிவுபடுத்த முடியாத சொற்பதமாகவே உள்ளது. ஏனெனில் பொதுசன அபிப்பிராயம் என்பதற்கு சரியான விளக்கம் இதுவரை அளிக்கப்படவில்லை. பொதுசன அபிப்பிராயம் என்பதை ஒரு நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் ஒட்டுமொத்த விருப்பம் என்பதா? அல்லது அந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களின் விருப்பம் என்பதா? அல்லது வாக்காளரின் விருப்பம் என்பதா? இவை முடிவு காணப்படாத வினாவாகவே உள்ளது. பொதுசன அபிப்பிராயமெனில் எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு பிரச்சினையிலும் பொதுவிருப்பம் உருவாவது கிடையாது. ஒவ்வொரு பிரச்சினையிலும் மாறுபட்ட பல கருத்துக்கள் இருப்பதைத்தான் நாம் காண்கிறோம்.

பரிஸ் (Paris) எனும் அரசியலறிஞர் 'சமுதாயத்தைப் பாதிக்கின்ற அல்லது மக்களுக்கு விருப்பமான ஒரு பிரச்சினை பற்றி நாட்டிலுள்ள மக்களின் பல பிரிவினரும் கொண்டிருக்கின்ற பொதுக்கருத்தே பொதுசன அபிப்பிராயம்' என்றார்.

ஆர். ஏச். சோல்டு (R.H. Soltou) என்பவர் 'மக்கள் எந்தக் கருத்துக்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றார்களோ அதுவே பொதுசன அபிப்பிராயமாகும்' என்றார். இவ்வாறு பொதுசன அபிப்பிராயம் பற்றி பல்வேறு வரைவிலக்கணம் கூறப்பட்டாலும் அது பற்றிய பொதுவரைவிலக்கணம் பெறுவது கடினமானதாகும். அரசாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் செயற்பாடு பற்றிய ஒரு பிரச்சினையே அரசாங்கத்தைச் செயற்பட வைக்கும் என்று கூறலாம்.

## 3. பொதுசன அபிப்பிராயத்தின் முக்கியத்துவம்

அரசியல் முதிர்ச்சியும் கல்வியறிவும் உடைய மக்கள் கொண்ட நாடுகளில் அரசுகளின் செயற்பாடும் திருப்திகரமாக இருப்பதற்கு காரணமே அங்கு பொதுமக்கள் கருத்தை உருவாக்குவது மிகவும் எளிதாக இருப்பது தான். பொதுசன அபிப்பிராயமானது தற்கால அரசுகள் மற்றும் அரசியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் பொதுமக்களின் கருத்தைத் தட்டிக் கழிக்க முடியாதளவுக்கு பொதுசன அபிப்பிராயம் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. மகாஜனங்களின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்கும் எந்த அரசும் அரசாங்கக்கட்சியும் அரசியல்வாதிகளும் நிலைத்திருக்க முடியாது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தற்கால அரசுகளும் கட்சிகளும் தங்கள் நேரத்தில் பெரும் பகுதியை சாதகமாக மக்கள் கருத்தை உருவாக்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஓர் அரசின் வெற்றியானது அந்த அரசு எந்தளவிற்கு பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தை திருப்திப்படுத்துகின்றது என்பதைப் பொறுத்தே அமைகின்றது. மக்களாட்சியின் வெற்றிக்கு மக்களின் விழிப்புணர்வே அடிப்படையானதாகும். இதனை வெளிப்படுத்துவதே பொதுசன அபிப்பிராயமாகும். மேலைத்தேச நாடுகளில் மக்களாட்சி நாடுகள் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு காரணமே அந்த நாடுகளின் மக்கள் கருத்தை உருவாக்கும் சாதனங்கள் வெற்றிகரமாகவும் முழுமையாகவும் பயன்படுத்தப்படுவதேயாகும்.

## 4. பொதுசன அபிப்பிராயமும் ஜனநாயகமும்

ஜனநாயகம் என்பது பொதுசன அபிப்பிராயத்தின்படியான ஆட்சி என்பது ஒரு பிரத்தியட்சமான உண்மையாகும். அது உடனடியாக ஒரு பொதுவான இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் அரசாங்க இயந்திரத்தை இயக்குவதற்கான உந்து விசையையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. அது எப்போழுதும் பெரும் கௌரவத்தை செலுத்தி வந்துள்ளதுடன் இடைக்கிடையே அதற்கு அமானுஸ்ய பெருமை பொருந்திய கௌரவமும் அளிக்கப்படுகின்றது. சமூக ஒற்றுமைகள் விரோதங்கள் வாயிலாக அபிப்பிராயம் தவறான வழியில் திசை திருப்பப்பட்டுள்ளது, அது திரிபுபடுத்தப்பட்டுள்ளதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினைசார் அபிப்பிராயங்களால் பிளவுபடுத்தப்பட்டுள்ளது என்பதும் உண்மையே. இக்குறைபாடுகளுக்கு மத்தியிலும் ஒரு சனநாயக அரசில் அது ஒரு துடிப்பானதும் உந்துசக்தியாகவும் இருக்கின்றது. காலத்துக்குக்காலம் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்யும்படி வேண்டப்படுகின்றனர். வாக்காளர் வெவ்வேறு அரசியற் கட்சிகளால் முன்வைக்கப்படும் கொள்கைக்கு சாதகமாகவோ பாதகமாகவோ தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவர்.

பெரும்பான்மை வாக்குகள் ஒரு கட்சிக்கு சாதகமாகச் செல்லுமாயின் அது அக்குறிப்பிட்ட கட்சிக்கோ அல்லது கூட்டணிக்கோ தேர்தலுக்கு முன் சில அடிப்படைக் கொள்கைகளில் இணக்கப்பாட்டை எட்டிய கூட்டணிக்கட்சிகளுக்கோ அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆணையை வழங்கும். அவை மீது வைக்கப்பட்ட நம்பிக்கைக்கு துரோகமிழைக்கப்பட்டால் அடுத்துவரும் தேர்தலில் மக்கள் ஆணை வாபஸ் பெறப்படும்.

உண்மையில் அதிகாரத்திலிருக்கும் கட்சி அல்லது எதிர்க்கட்சியாயிருக்கும் எந்தக்கட்சியும் எதிர்காலத் தேர்தலை மறந்து ஒருபோதும் செயற்பட முடியாது. இறுதி மனு மக்களிடமே உள்ளது. கட்சிகளுக்கு பொறுப்புணர்ச்சியையும் எச்சரிக்கையை வழங்குவனவாக பொதுசன அபிப்பிராயம் அமையும். அதன் வழி சிறுபான்மை மக்கள் தொடர்பில் பொறுப்புடன் நீதி, நியாயம், நேர்மை என்பவற்றை உறுதி செய்கின்றது.

பொதுசன அபிப்பிராயம் அரசியல் நிறுவனங்களைத் தொழிற்படுத்துவதில் பெறுமதிவாய்ந்த வகிபங்கை வகித்துள்ளதுடன், மிகச் சக்திவாய்ந்த ஒருங்கிணைப்பு முகவராண்மை ஒன்றாகவும் சேவையாற்றுகின்றது. ஜனாதிபதி சார் ஒழுங்கு முறையில் சட்டவாக்க, நிறைவேற்றுத்துறைகளின் தொழிற்பாட்டை சமூகமயமாக்கியதுடன் ஒன்றுக்கு மற்றொன்று பொறுப்பில்லாத வகையில் இரண்டுக்குமிடையில் இணைவுச் செயற்பாட்டை ஏற்படுத்துகின்றது.

சனநாயகம் சுதந்திரத்தை உருவாக்குவதுடன் பொதுக் கொள்கைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் அபிப்பிராயங்களின் வெளிப்பாடுகளை உத்தரவாதப்படுத்துகின்றது. பொதுமக்களுக்குத் தமது குரலை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் சனநாயகம் அவர்களை அரசாங்கத்துடன் முக்கியமான விடயமாக பிணைக்கின்றது. எனவே அதிகார தானத்தில் இருந்து வெளிப்படும் கட்டளைகள், சட்டங்கள் போன்ற விடயங்கள் மட்டுமன்றி மக்களின் விருப்புகள், ஆலோசனைகள் என்ற வடிவத்தின் உள்வரும் நீரோட்டங்களும் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள ஒதுக்கீட்டை சீர் செய்வதில் அரசு முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன் இது சமூகத்துக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. சமூகக் கட்டுப்பாட்டை சனநாயகம் ஆழப்படுத்துகிறது. அரசியல் நிறுவனங்களைச் சனநாயக மயப்படுத்துவதற்கு பொதுசன அபிப்பிராயம் இயலுமையை வழங்குகின்றது. அத்துடன் அவர்கள் அவ்வகி பங்கை நேர்மையாகச் செய்வதற்கு உந்து சக்தியாக அமைவதுடன் நிபுணத்துவத்தில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கவும் உதவுகிறது. ஆளும் வர்க்கம் குறிப்பிடத்தக்க வகையில் தனது கட்டுப்பாடுகளுக்கு உணர்வுபூர்வமானதாக இருக்கும் அதே வேளை ஆட்சியில் அமர்ந்துள்ள பெரும்பான்மைக்கட்சி முழுநாட்டினதும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கவனக்குறைவால் ஆட்சி செய்யப்படுகின்றதென்பதை நினைவில் இருத்திச் செயற்படுகின்றது. இந்நிலமை பெரும்பான்மைக் கட்சியினர் பொதுசன அபிப்பிராயத்தின் மீது ஆக்ரோசமான தாக்குதலை மேற்கொள்ளக் கூடாது என்பதில் எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்துகின்றது. அதன்வழி கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் எல்லா முகவர்களையும் சேவை வழங்குனர்களையும் ஒரே தராதரம் உடையவர்களாக ஆக்குகிறது. அத்துடன் நட்டங்களிலுள்ள குறைபாடுகளையும் நீக்குகிறது. காலத்துக்கேற்ற நீதிபரிபாலனம் செய்வதில் பொதுசன அபிப்பிராயம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.

ஜனநாயகமானது பொதுசன அபிப்பிராயத்தின் வாயிலாகவே மேலோங்குகின்றது. அதாவது பொதுசன அபிப்பிராயம் நேர்மையானதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் இருப்பின் குறிப்பிட்ட ஒரே வகையான தன்மை என்பதற்கு சனநாயகத்தில் இடமே இல்லை. சனநாயக அரசில் உள்ள ஒரு பிரஜை சிந்திக்கக்கூடிய ஆற்றலுடையவனாகவும் அரசினுடைய விவகாரங்களில் உணர்வுடன் பங்குபற்றுபவனாகவும் மனிதாபிமானத்துடன் முழுமையாக உண்மைத் தகவல்களுக்குப் பதிலிறுப்பவனாகவும் இருக்க வேண்டும். எல்லா பொதுப்பிரச்சினைகள் மீதும் பொது மனிதனால் அபிப்பிராயம் ஒன்றை உருவாக்க முடியுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் ஆட்சியுரிமையும் கட்சி பொதுநடத்தைக்கான தராதரங்களைப் பேணுகிறதா, அரசியலில் விதிகளை முறையாகப் பேணுகிறதா என்று கண்டுணரக் கூடியவனாக இருக்க வேண்டும். அத்துடன் அவன் முதன் முதலில் ஆதரவளித்த கட்சி இப்போது ஆதரவு அளிக்க விரும்பும் கட்சி பொதுவாக சமூகத்தின் சேமநலனை மேம்படுத்த முடிகிறதா? என்பதைக்கண்டு பிடிக்கக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். இதனைப் பொதுசன அபிப்பிராயத்தின் மூலமே கண்டு பிடிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் முகவர்கள்

தற்காலத்தில் ஒவ்வொரு சமூகத்திலும் அவசியமாகத் தேவைப்படும் பொருள் எதுவாயினும் மாற்றமே இல்லாதவை மக்கள் மத்தியில் உறங்கிக் கிடக்கும். இவ்வாறான மக்கள் ஏறத்தாழ அரசியல் பற்றி சிரத்தையற்றவர்கள் வாசிப்பது, சிந்திப்பது குறைவு. பொதுவாக இவர்கள் சமூகத்தில் வியாபித்திருக்கும் ஏதாவது அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்வார்கள். அறிவாற்றல் நிரம்பிய இராஜதந்திரிகள், பத்திரி கையாளர்கள், நிருவாகிகளோ பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கு கின்றனர். சமுதாயத்திற்கு அக்கறையான மற்றும் சமுதாயத்தைப் பாதிக்கும் விடயங்களில் அபிப்பிராயங்களை உருவாக்கவும், தீர்மானிப் பதற்கும் அவர்களுக்கு ஆற்றலிருக்கின்றது. அவர்கள் விடயங்களை ஒழுங்குவரிசைப்படுத்தி விரிவான அபிப்பிராயங்களை உருவாக்கி தொடர்பாடலின் பல்வேறு வசதிகளூடாக பொதுமக்களின் ஆலோச னைக்காக விவாதித்திருப்பார்கள். தொடர்பாடல் வழிமுறைகள் ஒரு புறமிருக்க அபிப்பிராயத்தை உருவாக்கி, வடிவமைக்கும் ஏனைய முகவர் அமைப்புகளும் இருக்கின்றன. அவற்றில் சில அறிவைப்பரப்பி புரிந்து கொள்ளும் சக்தியை கூர்மைப்படுத்தி புத்திசாதூர்யமான தீர் மானத்தை எட்டுவதற்கு உதவுகின்றன. அவைகளின் தாக்கம் நீடித்து நிலைபேறானதாக இருக்கும். இதற்காக பல்வேறு முகவர்கள் உழைக் கின்றனர்.

### அ. வெகுசனத் தொடர்பு சாதனங்களும் அச்சு ஊடகமும்

குறிப்பிட்ட காலகட்ட அடிப்படையில் வெளியிடப்படும் இலக்கிய ரீதியான அசாதாரணமான சக்தி வாய்ந்தது ஊடகங்களாகும். அதில் மிகவும் சக்திவாய்ந்தது பத்திரிகையாகும். மக்களுக்குப் பொதுக்கல்வி ஊட்டி அபிப்பிராயங்களை உருவாக்குவதில் தலைசிறந்த ஊடகமாக விளங்கும் பத்திரிகைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுடன் அதனை 'சனநாயகத்தின் வேதாகமம்' (Bible of Democracy) என லிப்மன் என்பவர் அழைத்தார். விரைந்து பரவும் திரண்ட கல்வி போக்குவரத்தில் ஏற்பட்ட பிரமிக்கத்தக்க விருத்தி, அச்சுக்கலை செயன்முறையின் விருத்தி இவையாவும் சேர்ந்து பத்திரிகைகளின் சுழற்சியை வெகுவாக அதிகரித்துள்ளன. அத்துடன் உலகின் தொலை தூர இடங்களிலும் பத்திரிகைகள் கிடைக்கத்தக்கதாக இருப்பதாலும் சாதாரண மனிதனால் விலை கொடுத்து வாங்கக் கூடியதாக இருப்பதாலும் மக்கள் ஆவலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளை எதிர்பார்த்து காத்திருப்பர். கல்வி கற்றோர் தினசரி நாளேடுகளை முதல் வேலையாக பத்திரிகை வாசிப்பதற்கே முன்னுரிமை வழங்குவர். அதே வேளை நகர்ப்புறங்களில் அதிகாலைத் தேனீரை பத்திரிகை வாசித்துக் கொண்டே பருகுவர். தினசரிப்பத்திரிகைகள் தேசிய, சர்வதேச செய்திகளை சட்டமன்ற நடவடிக்கைகளை விவாதங்களை வெளியிடுகின்றன. சட்டசபைகளின் கலந்துரையாடல்கள், பிரகடனங்கள், அரசாங்கச் செய்தித்தகவல்கள், இராஜதந்திரிகளின் கூற்றுக்கள், புகழ்வாய்ந்தோர், கட்சித்தலைவர்களின் அறிக்கைகள், பத்திரிகை எழுத்தாளர்களின் கட்டுரைகள் மற்றும் பல்வேறு முக்கிய விடயங்களும் வெளியிடப்படும். இவற்றுடன் மட்டும் பத்திரிகைகளின் தொழிற்பாடு முடிந்து விடுவதில்லை. செய்திகள், தகவல்கள் முறையாக்கப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டு அழுத்தம் கொடுக்கப்பட்டு விமர்சனமும் மேற்கொள்ளப்படும். வாசகன் தமது இரசனைக்கேற்ப பத்திரிகைகளின் பகுதிகளை முக்கியத்துவம் கொடுத்து வாசிப்பான்.

அரசாங்கக் கொள்கைகள், மனக்குறைகளை வெளிப்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பான கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு மேடையையும் பத்திரிகைகள் வழங்குகின்றன. ஏறக்குறைய எல்லாப்பத்திரிகைகளும் பதிப்பாசிரியர் பக்கத்தில் அத்தகைய கருத்துக்கள் மனக்குறைகளை வெளிப்படுத்தல் போன்றவற்றிற்கான சில பந்திகளை ஒதுக்கிவைக்கும்.

ஆசிரியரின் கடிதம் (Letter to the Editor) என்ற பெயரின் கீழேயே இவை பிரசுரிக்கப்படும். ஒரு சனநாயக அரங்கமென்றால் அது விளம்பரத்தால் நடைபெறும் அரங்கமாகவே இருக்கும். எல்லா ஜனநாயக அரசாங்கங்களும் உயர்தரமாக ஒழுங்கமைக்கப்பட்ட பொதுசன உறவு அரசுக்கும் மக்களுக்கும் நெருங்கிய உறவை வைப்பதற்காகவும் இவை பத்திரிகைகளைப் பயன்படுத்துகின்றன. வெற்றிகரமாகத் தொழிற்படும் ஒரு சனநாயக அரசாங்கத்துக்கு ஒரு சுதந்திரமான பக்கச்சார்பில்லாத பத்திரிகை இன்றியமையாததாகும். குடிமக்களின் உரிமைகள் சுதந்திரங்களைக் காவல்செய்யும் அக்கறையான பாதுகாவலனாக பத்திரிகைகள் இயங்குகின்றன. மக்களின் மனநிலையை நாடிபிடித்துப் பார்ப்பதற்கு அரசாங்கத்துக்கு இயலுமையை ஏற்படுத்துவதற்கு பொதுக் கொள்கைகளை விவாதிப்பதற்குமான ஒரு மன்றமாகவும் செயற்படுகின்றது.

பத்திரிகைகள் எப்போதும் தர்மத்துடன் செயற்பட வேண்டும். அவ்வாறின்றேல் செய்திகளைத் திரித்துக்கூறி, குறுகிய இலாபம் கருதி மக்களுக்கு அறிவூட்டுமானால் சிறந்த பொதுசன அபிப்பிராயம் உருவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது போய்விடும். சில பத்திரிகைகள் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கில் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் பிரபலங்களின் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப் பதால் பத்திரிகைத் தர்மம் கெட்டுப் போவதுண்டு. அது சனநாயகத் திற்கு பாரதூரமான அச்சுறுத்தல்களை உண்டுபண்ணிவிடும். எனவே நிலைத்து நிற்கக் கூடிய முன்னேற்றம் அறிவு பூர்வமான பொதுமக் களிலேயே தங்கியுள்ளது. அதற்கு பத்திரிகைகள் பொதுசன அபிப் பிராயத்தினூடாக சேவையாற்றலாம்.

பொதுவிவகாரங்களில் மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் அவர்களது அபிப்பிராயங்களை வடிவமைப்பதற்கு உதவுவதற்கும் தொலைக்காட்சி, திரைப்படம் முதலானவை பயனுறுதியான கருவிகளாகும். பத்திரிகைகள் சமூகத்தின் கல்வி கற்ற வர்க்கத்தினரின் கரங்களுக்கு மட்டுமே எட்டக் கூடியவை. அபிவிருத்தியுறும் மற்றும் குறைவிருத்தியுடைய நாடுகளில் எழுத்தறிவின்மை நியாயமான அளவில் அதிகமாக இருப்பதால் ஒலி, ஒளி ஊடகம் பெருமளவுக்கு இடைவெளியை நிரப்புகின்றது. ஆனால் திரைப்படம் ஏறக்குறைய முற்றாக ஒரு விருந்தளிப்பு மார்க்கமாகவே இருந்து வந்துள்ளது. வானொ லியும் தொலைக்காட்சியும் மக்களால் விரும்பப்பட்ட தொடர்பாடல் பொதுசன ஊடகங்களாகும். அவற்றைக் கேட்போர் மில்லியன் கணக் கானவர்களாகும். அத்துடன் அபிப்பிராயத்தலைவர்களூடாக ஏறக் குறைய ஒவ்வொரு வீட்டையும் எட்டமுடியும். விரைவாக மனிதன் உலகை அடுத்தவர்களின் கண்களூடாக காண்கின்றான். எனவே அவனுடைய பாரபட்சமற்ற சிந்திக்காத மனதில் அபிப்பிராயத் தலைவர்கள் உருவாக்கும் பிரதிமைக் காரணங்களாகவே அபிப்பிராயம் உருவாகின்றன. இந்தப் பொதுசன ஊடகம் ஏகபோக உரிமையாக அரசில் கட்டுப்படுத்தப்படுமிடத்து அதனால் பெரியளவு நன்மையை எதிர்பார்க்க முடியாது. ஊடகவியலாளர்களின் பணி செவிமடுப்போரை மகிழ்விப்பது தகவல் தெரிவிப்பதுடன் நின்று விடுவதில்லை. சமுதாயத்தை ஆட்சியாளர்களுக்கும் அவர்களது கொள்கைகளுக்கும் பின்னால் ஐக்கியப்படுத்துவதாகும். இது நடுநிலமையான ஊடகவிய லாளர்களாலேயே முடியக் கூடியது. ஒலி பரப்பு அட்டவணைக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டு தகவல்கள், பிழைகள் சீர் செய்யப் பட்டு ஏன் வெட்டிச் சுருக்கப்படவும் கூடும். ஆனால் இவை அனைத்தும் பொதுமக்களுக்குச் செய்திகளை வழங்குவதற்கான சீராக்கமாகவே இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மிகவும் தீவிரமான உரிமைகளின் மத்தியில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரமும் உடையவன். இவை பொதுசன அபிப் பிராயத்தின் உருவாக்கத்தின் மையமாகும். வெவ்வேறு அபிப்பிராயங் களை பிரதிநிதித்துவப்படுத்தச் செய்யும் அபிப்பிராயத்தலைவர்கள் மக்கள் முன்பாகத் தமது அபிப்பிராயங்களை வைப்பதற்காகவும். செவிமடுப்பதற்காகவும் சீர்தூக்கிப்பார்ப்பதற்காகவும் அதாவது தாங்கள் கூறுவதை, அவர்களின் எதிர் விளைவுகளை கவனிப்பதற்காகவும் கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் மகாநாடுகளையும் ஒழுங்கு செய்வார்கள். இறுதியில் மக்களின் ஆணித்தரமான கருத்துக்களுக்கு பதிலிறுப்பதற்காக ஆகக் கூடிய ஆதரவை வெளிக் கொணர்வதற்காக தமது அபிப்பிராயங்களைத் திருத்தம் செய்வர். மாற்றம் செய்வர். ஆனால் பொதுவாக சபையோர் அபிப்பிராயத்திற்கு வரவேற்பாகவே இருப்பார். விமர்சனம் செய்வோராக இருப்பதில்லை. எனவே மனிதர் அபிப்பிராயத் தலைவர்கள் முன்வைப்பதை அப்படியே ஏற்றுக் கொள்வர். ஒன்றில் அபிப்பிராயத்தலைவர்களின் கவர்ச்சிகரமான ஆளுமை அல்லது விசுவாசம் காட்டப்படவேண்டியதான குழுவின் மதிப்பு அல்லது ஆள் எவரும் மரியாதை செய்யக் கூடியவாறான அபிப்பிராயத்தலைவர்களின் உயர் அந்தஸ்து போன்ற காரணங்களால் உண்மைகள் அரிதாகவே விவாதிக்கப்படும் யதார்த்தங்கள் அபூர்வமாக விளங்கப்படுத்தப்படும். மேடை பொதுவாக ஒருவருடைய சொந்தக்கருத்தின் உண்மையை மனங்கொள்ளச் செய்வதற்கும் ஏனையவர்களின் பொய்ப்பிரச்சாரத்தை வெளிப்படுத்துவதற்குமே பயன்படுத்தப்படும்.

மேடையின் இந்தக் குறைபாடுகளுக்கு மத்தியிலும், அபிப் பிராயத்தலைவர்கள் , அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் மீதான பொதுமக்களின் சிந்தனைச் செயன்முறை, வெகுநேர்த்தியாகத் திட்டமிட்டு செயற்படுகின்றார்கள் என்பதையும் அதன்வழி அச் செயன் முறை பொதுமக்களை பொதுசன அபிப்பிராய முறைமையாக்கு வோருடன் நேரடியான தொடர்பு கொண்டு வருகின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகிறது. இந்தியாவின் ஜவகர்லால் நேரு, இந்திராகாந்தி, மொராஜிதேசாய் போன்ற தலைவர்களின் பரந்து பட்ட இந்தத் தொடர்புகளுக்கு இப்பிரயாணங்கள் அத்தாட்சியாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. பிரச்சாரம்

ஒருவருடைய கருத்துக்களைப்பரப்புவதற்கு ஏனையோரை ஒருவருடைய கருத்துக்கு மாற்றம் செய்வதற்குமான உரிமை, பேச்சுசுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் என்பவற்றுடன் தொடர்ந்துவரும் ஒன்றாகும். ஒரு பன்மைச்சமூகத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒவ்வொரு குழுவுக்கும் அதன் சொந்த, பிரசித்த பிரசார அறை இருக்கும். அதன் பிரதான தொழிற்பாடு சிற்றேடுகள், சஞ்சிகைகள், இலக்கியம் போன்ற ஊடகத்தினூடாக அதன் மேடையை அறிமுகப்படுத்துவது தகவல் பரவச் செய்வதுமாகும். பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்குமான குழுவின் அணுகுமுறையை தெரியப்படுத்துவது அது முன்வைக்கும் தீர்வுகள் சமுதாயத்தின் சிறந்த நலன்களுக்காகவே என்பதை பொது மக்களிடம் நம்பிக்கையை ஊட்டுவதற்குமாகும். அபிப்பிராய உருவாக்கத்தை ஏற்படுத்துவதற்காக தூண்டுதலைப் பிரயோகிக்கும் ஒரு தந்திரமிங்கு காணப்படுகின்றது. ஆளப்படுவோர் மத்தியில் சம்மதத்தை உருவாக்கும் கலையில் இடம் பெற்று வரும் மிக முக்கியமான புரட்சி இதுவாகும் என்று கூறப்படுகின்றது.

பிரபல்யமான பிரச்சாரத்தின் திரை மிகவும் விசாலமானது. தேசத்துடன் சம்பந்தப்பட்ட தேசிய, சர்வதேசப்பிரச்சினைகளையும் அவற்றின் சர்வதேச தாக்கத்தையும் தழுவும் ஒவ்வொரு சர்வதேச அங்கத்தின் கொள்கைகளையும் அதன் சர்வதேச தாக்கத்தையும் உன்னிப்பாக கவனித்து ஆராய்ந்து பார்க்கும் ஒரு எச்சரிக்கையுடைய உலகப் பொதுசன அபிப்பிராயத்தை புதிய சர்வதேச ஒழுங்கு முன் கூட்டியே அனுமானம் செய்து கொள்கின்றது. உலக அபிப்பிராயத்தின் கண்களில் மரியாதையைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு அங்கத்தினதும் இடையறாத முயற்சியும் பிராயத்தனமும் சர்வதேச மட்டத்தில் தேசிய கொள்கைகளுக்கு ஆதரவைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இருக்கிறது.

பிரச்சாரம் முன் கூட்டி இருந்துவரும் மக்கள் மனப்பாங்கு அல்லது போக்குடன் அல்லது சமூக அனுதாப சாய்வுகள் சார்ந்து எடுத்துச் செல்லப்படாவிட்டால் அதுவெல்ல முடியாது. முன்கூட்டியே இருப்பில் இருந்து வரும் மனப்பாங்குகள், மனச்சாய்வுகள் என்பவற்றுடன் முரண்படும் அந்தக்கணப்பொழுதிலேயே பிரச்சாரம் உத்திகள் தலை கவிழும் அரசியல் ஒழுக்கத்திலும் நடத்தையிலும் பகுத்தறிவற்றவனாக இருக்கக் கூடும் அல்லது அவன் சார்ந்துள்ள குழுவுக்கான விசுவாசம் நிமித்தம் அவன் உணர்ச்சிவசப்பட்டு ஊசலாடக் கூடும் அல்லது மனிதன் மதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிக்கும் ஓர் உயர்வான தலைவருக்கு அவன் விசுவாசம் காட்ட வேண்டிய கடப்பாடு காரணத்தால் ஊசலாடக் கூடும். எவ்வாறாயினும் மனிதன் சிந்திக்கும் ஒரு பிராணி என்பதுடன் சிந்திப்பது அவனுடைய பிறப்பியல்வு என்பதையும் மறுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட எல்லைக் கப்பால் சுத்த சுயாதீனமற்ற புகலிடத்து வசிக்கும் மனிதனாகக் கூட எப்பொழுதும் கையைப்பிடித்து வழிநடத்த முடியாது. காரணம் பைத் தியத்தனமான மனிதனிடம் கூட முறை உண்டு. ஆபிரகாம் லிங்கன் 'மக்கள் ஒரு பகுதியினரை எப்பொழுதும் ஏய்க்கலாம் எல்லா மக்களை யும் காலத்தின் ஒரு பகுதி ஏய்க்கலாம் ஆனால் எல்லா மக்களையும் எல்லா நேரமும் ஏய்க்க முடியாது'.

மனிதன் தேர்ந்தெடுத்து தெரிவு செய்வதில்லை. அவனுக்கென்று சில முன் விருப்புகள் இருக்கின்றன. இது வாழ்க்கையின் பொதுவான வழியாகும். இந்த மனப்பாங்கும் ஒழுக்கமும் அவனுடைய அரசி யல் நடவடிக்கைகளையும் அதேபோல் அவனுடைய வாழ்க்கையின் ஏனைய அம்சங்களையும் மேவிச்செல்லும் பொதுசன அபிப்பிராயத் தின் உண்மைப்பிரச்சினை மனிதன் முன்பாக வைக்கப்படும். அவை பிரச்சாரத்தினாலேயே மக்களிடம் சென்று பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றன.

## இ. அரசியற் கட்சிகள்

தற்போதைய பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் கட்சிகள் என்பதும் பெரும்பங்கு வகிப்பது போல் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவ திலும் அது குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்துகின்றது. அரசியற் கட்சிகள் வேட்பாளர்களைத் தெரிவு செய்து வாக்காளர் முன்பாக அவர்களை அறிமுகப்படுத்தி தேர்ந்தெடுப்புக்களை மேற்கொள்ளச் செய்யும். வாக்காளர்களின் ஆலோசனைக்காக கட்சியின் நிகழ்ச்சி நிரலையும் கொள்கையையும் முன்வைத்து அவர்களின் ஆணையைக் கோரும் ஒரு கட்சியின் நிகழ்ச்சி நிரலையும் கொள்கையையும் வாக்காளர் சாதகமாக மதித்தால் அக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆதரவு வழங்கப்படும். பொதுசன அபிப்பிராயத்தின் வெளிப்படுத்தல் மற்றும் மாற்றீடுகளுக்கான தேர்ந்தெடுப்புமே ஆட்சியில் அல்லது எதிர்க்கட்சி யில் இருக்கும் கட்சிகள் சட்டத்தில் பல சீர் திருத்தங்களை கட்டாயப் படுத்தியுள்ளன.

அரசியற் கட்சிகள் வேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளன. பிளவு களைக் கூர்மைப்படுத்தி உள்ளன. அதன்படி மக்களை போரிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாம்களாக மாற்றியுள்ளன. பிரஜைகளை கைப்பற்றப்பட வேண்டிய வாக்காளர்கள் என்ற நோக்கத்திலேயே கட்சிகள் நோக்குகின்றனவே யன்றி திடநம்பிக்கையூட்டப்பட வேண்டியவர்கள், அறிவுறுத்தப்பட வேண்டியவர்கள் என்றல்ல. கட்சி மேடையொன்றில் வரையறை செய்வதற்கோ அல்லது அறிவுறுத்துவதற்கோ அல்ல. ஆனால் மிகச் சரியாக வசீகரித்துக் குழப்புவதற்கே ஆகும். அந்தவகையில் அரசியலை அது விளம்பரத்தின் விஞ்ஞானம் கலையின் ஒரு பாகமாகச் சுருக்கு கின்றது. எனவே பொதுசன அபிப்பிராயப்படியான அரசாங்கம் என்பது வெறும் கேலிக், கூலிக்கூத்தன்றி வேறொன்றுமல்ல என்ற பிரைசு குறிப்பிடுவார்.

கட்சி ஒழுங்கு முறை பற்றிக் குறிப்பிடுகையில் கட்சி முகாமை யாளர்கள் இப்போது போலியான சம்மதத்தை உற்பத்தி செய்வதற்கு உளவியலைப் பயன்படுத்துவதாக மதிநுட்பம் வாய்ந்த அவதானிப் பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கிரஹாம், வெலாஸ், லிப்மன் ஆதலானோர் கட்சிகளால் செய்யப்படும் பிரதான விண்ணப்பம் சின்னங்கள் சுலோகங்களூடாக மனக்கிளர்ச்சி சார் பதிலிறுப்பை தூண்டுவதாகத்திட்டமிட்டு வெளிப்படுத்துவதாக உதாரணமாக காந்தி, நேரு என்போரின் பெயர்கள் தர்மசக்கரம், கலப்பை என்பன கட்சிச் சின்னங்களாக வெளிவருவதாக நிரூபணம் செய்துள்ளனர். இப்பரி சோதனைகள் அரசியற்கலையை பிரக்ஞையற்ற பகுத்தறிவற்ற அனு மானங்களை திட்டமிட்டு தவறாகப்பயன்படுத்தி உருவாக்கும் அபிப் பிராயம் எனக் குறை கூறப்படுகின்றது. இவ்வாறான குறைபாடுகள் பலவீனங்கள் மத்தியிலும் பொதுசன அபிப்பிராயத்தைத் தெளிவு படுத்துவதிலும் ஜனநாயகத்தைத் தொழிற்படக் கூடியதாகச் செய்வதில் ஒன்றுபடுத்தும் முகவராண்மையாகவும் விளங்கும் கட்சி ஒழுங்கு முறையின் முக்கியத்துவத்தை ஒன்றில் அலட்சியப்படுத்தவோ அல்லது குறைத்து மதிப்பிடவோ முடியாது. கட்சிகள் பொதுசன அபிப்பிரா யத்தை குவிமையத்துக்கு கொண்டுவந்து, பொதுமக்கள் தீர்ப்புக்கு பிரச்சினைகளை ஒன்றுபடுத்தும் என்று லாஸ்வெல் (Lasswell) குறிப் பிடுகின்றார்.

அரசியற் கட்சிகள் என்பது பொதுமக்களின் பொது அங்கம் என்பதும் அவை பொதுநல ஆர்வமுடையதாகவும் விழிப்புடைய தாகவும் ஆக்கப்பட்டால் கட்சிகளின் தீமைகளை பெருமளவில் குறைக்க முடியும். மக்களை அரசியல் சார் வழியில் கல்வி புகட்டவும் கட்சிகள் எவருக்கும் குரோதம் புரியாமல் உண்மையான நிகழ்ச்சிகளின் நடப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நம்பத்தகுந்த தரவுகளின் ஆதாரத்துடன் முக்கியத்துவத்திற்கு கொண்டுவருவதற்கும் கட்சிகளை எச்சரிக்கையாக இருக்கச் செய்வ தற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டால் சிறந்த பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கலாம்.

### ஈ. கல்வி

பொதுசன அபிப்பிராயத்தின் பொருள் சமூக நிறுவனங்களின் பொது வான குணப்பண்புகள் கல்வியால், சஞ்சிகையால், இலக்கியத்தால், பத்திரிகையால், கட்சி அரசியலின் நடவடிக்கையால் மேற்கொள்ளப் படும். இதற்கு அடிப்படையாக அமைவது கல்வியே. அறிவாற்றல் கண்டறியும் சக்தி, மனிதனை மனிதன் ஏற்றுக் கொள்ளும் சமூகப்பழக்க வழக்கங்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றைக் கல்வியின் மூலமே ஏற்படுத்தலாம். அரசியலில் ஈடுபட்டுள்ள முழுப்பிரஜை களுக்கும் கல்வி முக்கியமானதென்பதை பிளேட்டோ மற்றும் அரிஸ் ரோட்டில் போன்றோர் அங்கீகரித்தனர் என்பதுடன் அதுவே பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் பிரதான முகவராகவும் அமைந்தது என்கின்றனர். அதே போன்று ரூசோவும் கல்வியின் முக்கியத்துவத்தை பெரிதும் உணர்த்தினார்.

கல்வியானது மனித சிந்தனை ஸ்தம்பிதமடைவதை தடை செய்யும், சிந்திக்கும் ஆற்றலைத்தூண்டும் எண்ணங்களைப் பட்டை தீட்டும் தீவிர உணர்வுகளை விரட்டிவிடும் உறுதியானதும் நம்பக மானதுமான நம்பிக்கைக்கான மன உறுதியை , சக்தியை பலப்படுத்தும் தலைமைத்துவப்பண்பை மேன்மையாக்கும். மனிதனது அபிப்பிரா யங்களை அச்சமின்றியும் சலுகையின்றியும் வெளிப்படுத்துவதற்கும், உண்மையை ஒப்புக் கொள்ளவும், பொய்மையை நேர்மையை விலக் கவும் ஆற்றல் இருக்கும். அத்தகைய சூழ்நிலை மக்களினதும், மக்கள் தலைவர்களினதும் எதிர்பார்ப்புக்களின் ஒழுக்கத்தின் தன்மையை மேம்படுத்தும். இதன் மூலம் சிறந்ததொரு பொதுசன அபிப்பிராயம் வளர உதவும்.

பொதுவாக வழங்கப்படும் கல்வி முறையானது மானிட சமூகத் தில் அவனது சிறந்த கல்வியில் பெறும் அனுபவம் அவனது பொது வாழ்க்கையை சீரமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் மூலம் அவனது பொதுவாழ்வில் வழங்கும் அபிப்பிராயங்கள் சிறந்ததாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. சட்டவாக்க சபைகள்

ஒரு நாட்டின் சட்டவாக்க சபையாகக் காணப்படுவது பாராளுமன்ற மாகும். பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் ஒரு முகவரே பொது விவகாரங்கள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கலந்துரையாடும் விவாதிக்குமிடமுமாகும். இங்கேயே பொதுவிவகாரங்கள் விவாதிக் கப்பட்டு இறுதித் தீர்மானங்கள் எட்டப்படும். நாட்டின் சட்டங்கள் இயற்றப்படும் ஓர் ஆலோசனை மன்றமாகும். இவை வெவ்வேறு வகையான அபிப்பிராயங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வெவ்வேறு நலன்கள் என்பவற்றை உள்ளடக்கம் செய்யும் பல அங்கங்களைக் கொண்டவையாகும்.

சட்டமன்றங்கள் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கம் செய் வது வடிவமைப்பதைப்பார்க்கிலும் பிரதிபலிப்புச் செய்வனவாகும். ஆனால் பொதுசன அபிப்பிராயங்கள் சட்டங்களாவதற்கு முன்னர் சட்டமன்றங்கள் எல்லா பொதுச்சட்டங்கள் தொடர்பான அபிப்பிரா யத்தை தெளிவு படுத்தும் பணியை சட்டமன்றங்கள் ஆற்றும்.

சட்டவாக்க சபையில் காலதாமதம் என்பது முக்கிய விடயமாகும். ஒரு மசோதா மூன்று தடவை வாசிக்கப்பட்டு வெவ்வேறு கட்டங்களில் பரீட்சிக்கப்பட்டு ஆராயப்படும். சட்ட மன்றங்களின் குழுநிலை ரீதியான ஆராய்வு உட்பட மக்கள் அபிப்பிராயத்தை அறிவதற்காக மக்கள் கருத்துக்கணிப்பீட்டிற்குட்படும். ஒரு சபையால் அனுமதிக்கப்பட்ட பின்னர் அடுத்த சபைக்கு அதேவாறான நடைமுறைக்காக அனுப்பப் படும். அது முறையாக இயற்றப்பட்ட ஒரு சட்டமாக வருவதற்கு முன்பாக இரண்டு சபை சட்டமன்ற முறை சிறந்ததொரு பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும்.

சட்டவாக்க சபைகள் இரண்டு மன்றத்தினை உடையனவாக இருந்தால் அவசரமாகச் செய்யப்படும் சட்டதிட்டங்களில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்க்கலாம். அதற்காகவே ஒரு மேலதிக சட்ட மன்றம் அமைக்கப்படுகின்றது.

ஹென்றி மெயின் கூறியதுபோல சுதந்திரத்துக்கான ஒரு மேலதிக பாதுகாப்பாகும். சட்டத்தின் நிறைகுறைகளை ஆராய்ந்து ஆலோசனை களை மக்கள் தங்கள் அபிப்பிராயங்களை பத்திரிகை வாயிலாகவும் ஏனைய மூலங்களினூடாகவும் முறையீடுகளைச் செய்வதற்குமான ஒரு சந்தர்ப்பத்தை இது ஏற்படுத்துகின்றது. ஒரு பலமான எதிர்க்கட்சி சட்டமூலத்தில் மாற்றம் செய்யுமாறு பலவந்தப்படுத்த முடியும் அல்லது எதிர்க்கட்சிகளின் அழுத்தம் இடையறாத மக்கள் போராட்டம் என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றினூடாக சட்டமூலத்தில் மாற்றம் திருத்தம் சிலவேளைகளில் கைவிடவும் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். சட்டமன்றத்தின் களம் எதிர்க் கட்சியின் விவாத மேடையாகும் செய்திப்பத்திரிகைகள், அதன் ஒலி பெருக்கிகள், மக்கள் அதன் சபையோர், பொதுமக்கள் ஆதரவை இழக்கும் ஓர் அரசாங்கம் இறுதியில் அதன் பெரும்பான்மையையும் இழந்துவிடும். அது அரசாங்கத்தின் அஸ்தமனமாகவும் அமைந்து விடலாம் என்கின்றார்.

எதிர்க்கட்சி பொறுப்புணர்வுடனும் பாராளுமன்ற சனநாயக மரபுகளுக்கு அமைவாகவும் விதிகளை அனுசரித்தும் நடந்துகொள்ள வேண்டும். எதிர்க்கட்சி ஓர் எதிர்கால அரசாங்கமாகும். ஆளும் கட்சி வெளிப்படையாகவும் நேர்மையாகவும் ஆட்சி புரிய வேண்டும் என்ற அதன் கடமையை உணரவேண்டும். எனவே ஆளும்கட்சி எதிர்க் கட்சியின் விமர்சனத்தை எதிர்கொள்ளவேண்டும். பலவந்த முறை களால் அடக்க முற்படாது பகுத்தறிவான வாதங்களால் முறியடிக்க வேண்டும்.

இதே போன்று தெளிவான கடப்பாடு எதிர்க்கட்சிக்கும் உண்டு. எதிர்க்கட்சி பொறுப்பற்றவாறாகவும் கலந்துரையாடல் விவாதங்கள் முதலான எல்லாவழிகளையும் முடக்க முற்பட்டால் அது பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை கேலிக்கூத்தாக்குவது மட்டுமன்றி பொதுசன அபிப்பிராயம் தெளிவுபடும் வாய்ப்புக்கள் அனைத்தையும் இல்லாமல் செய்துவிடும். அவ்வாறான சூழ்நிலையும் அல்லது பொறுப்பற்ற தன்மையும் அரசாங்கம் தன்னிச்சையாகவும் அவசரகால நிலமைகளின் அடைக்கலம் பெறுவதற்கான வாய்ப்பை அளிப்பதாகவே இருக்கும்.

பொதுசன அபிப்பிராயத்தை எப்படி ஆராய்ந்து எதிர்கொள்வது? பொதுசன அபிப்பிராயத்தை ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்கான வழிமுறை எதுவும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பத்திரிகை பிரசங்க மேடை, பிரச்சாரம் முதலானவை அறிவைப் பெருக்குவதற்கான சக்திவாய்ந்த உபகரணங்களாகும். அபிப்பிராயத்தை உருவாக்கம் செய்வதற்கும், பொதுசன அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கு மான சாதனம் பொதுசன அபிப்பிராயத்தை ஆராய்ந்து கண்டறியும் பணியில் மிக அரிதாகவே துணை புரிகின்றது.

பத்திரிகையின் பக்கச்சார்பற்ற தன்மை கேள்விக்கிடமானதல்ல. பத்திரிகையை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏறக்குறைய எல்லாப்பத்திரிகைகளுக்கும் ஒரு போக்கு, மாறக் கூடாத கொள்கை பாதுகாக்கப்பட வேண்டிய நலன்கள் என்பன இருக்கின்றன. பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அரசியல் பதவிக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரி போன்று கூட்டத்தினரை வசியப்படுத்தி அடிமையாக்குவதற்கு கலையைப் பயன்படுத்த வேண்டும். பத்திரிகை வாசகருக்கு தேவையானவற்றையும் அவர்களின் மனப்பாங்குக்குமேற்ற செய்திகளை அளிக்கும். அவ்வாறே பிரசங்க மேடையும் உறுதியான குறிகாட்டியல்ல.

சமூகத்தின் ஒழுங்குமுறையான நடத்தைக்கு ஒரு பெறுபேறாக அபிப்பிராயத்துடன் அபிப்பிராய மோதலிலிருந்து தோன்றுவது சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுப்பு. அவ்வாறு எட்டப்பட்ட கருத்தொருமிப்பு அல்லது சில அடிப்படைகளில் பல்வேறு அபிப்பிராயங்களை சரிப்படுத்துவது அவ்வாறு எட்டப்பட்ட கருத்தொருமிப்பு அபிப்பிராயத்தின் எல்லாப்பகுதியினக்குரும் திருப்தியைக்கொண்டுவரும். ஏனெனில் அவர்களது கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் விவாதத்துக்குமுட்படுத்தப்பட்டு உரிய கவனம் கரிசனை அளிக்கப்பட்டது. மேலும் அவற்றிற்கு உரிய இடமும் வழங்கப்பட்டது. பொதுக் கொள்கை முறைப்படுத்தும்போது கருத்தொருமிப்பு, திசைப்பட்ட கொள்கை , அரசியல் ரீதியில் தெளிவான வெவ்வேறு சாயலுடைய அபிப்பிராயத்தைப் பிரயோகிக்கும் முகவராண்மை அமைப்புக்கள், அரசியல் திசைமுகப்படுத்தப்பட்ட செல்வாக்குகள் யாவற்றிற்கும் பதிலிறுப்புச் செய்யும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தகுதியுடன் தலைமை தாங்கப்பட்ட பொதுமக்கள் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்ட அபிப்பிராயம் எப்பொழுதும் கவனமாக மதிப்பீடு செய்யப்படும். அத்தகைய ஏனைய பிரார்த்தனைக்ளுடன் அளவுகோல்களிடப்பட்டு செல்வாக்குச் சமரசத்தின் பெறுபேறு பொதுக் கொள்கைகளில் பிரதிபலிப்புச் செய்யும். அதுவே பொதுசன அபிப்பிராயத்தின் சாராம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


Agawal, N.N., *Principles of Political Science*, R.Chand and Com. Publishers, New Delhi, 1980.

Cooray, Joseph A.L., *Constitutional Government and Human Rights in a Developing Society*, The Colombo Apothecaries Com.Ltd., 125, Glennie Street, Colombo, 1996.

Guild and Palmer, *Introduction to Politics*, John Wiley, New York, 1968.

Johar, J.C., *Comparative Politics*, Sterling Publishers, New Delhi,1995.

Johari, J.C., *Contemporary Political Theory*, Strerling Publishers, New Delhi, 1993.

Kapur, A.C., *Principles of Political Science,* S.Chand and Company, New Delhi, 2002.

Key, V.O., *Public Opinion and American Democracy*, Alfred A Knof , New York, 1964.

Lawson, k., *Political Parties and Linkage: A Comparative Perspective*, Yale University Press, 1980.

Martin Slann, *Introduction to Politics,* Jane Vaicunas Publication, 1998.

Maurica Duverger, *Political Parites*, Methoen Press, London, 1964.

Mehra Ajayk, K., Khann, D.P., Kurck Gerf, W., *Political Parties and Party Systems*, Sage Publication India, New Delhi, 2003.

Ramaswamy, P., *Comparative Government*, Balmusus Printers, 74, Sri Theagaraya Road, Pandy Bazaar, Madras, 1978.

Samuel P. Hundington, *Political Institution*, Yale University Press, 1968.

Sarmah, D.K., *Political Science,* New Age International Publishers, 1995.

Somjee, *Party Linkages and Strife Accommodation in Democratie India,* Boobbs Press, New York, 1973.

William Ebenstein, *Modern Political Thought*, Oxford and IBH Publishing Co, New Delhi ,1974.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற்கட்சிகள், அமுக்கக்குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்

### வேலுப்பிள்ளை குணரத்தினம்

---

ஜனநாயக நாடுகளில் நல்லாட்சியைக்காண விளையும் இன்றைய சமூகத்தில் அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் ஆகியவை பலராலும் பேசப்படும் விடயமாக மாறிவருகின்றது. இம் மூன்று விடயங்களும் ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் உயிர்நாடிகளாக விளங்குகின்றன எனின் மிகையாகாது. இவை ஆட்சியாளர்களை தீர்மானிப்பதற்கும், அரசாங்கத்தின் உறுதித்தன்மை, பலம், பலவீனம் என்பவற்றை மதிப்பிடுவதற்கும், கட்சிபற்றிய பொதுமதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்கும் துணையாக கொள்ளப்படுகின்றன.

இந்நூல் இத்தகைய அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் ஆகியவற்றை கோட்பாட்டு ரீதியாக ஆய்வு செய்வதுடன் தெரிவுசெய்யப்பட்ட சில நாடுகளில் இவ்விடயங்கள் எவ்விதம் பிரயோகிக்கப்படுகின்றன என்பதையும் எடுத்துக்கூறுகின்றது.



**வேலுப்பிள்ளை குணரத்தினம்:** இலங்கையின் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்துறை தலைவராக பணியாற்றுகின்ற இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியற் துறையில் தனது இளங்கலைமாணி சிறப்புப்பட்டத்தையும் (B.A.Hons.), முதுதத்துவமாணி பட்டத்தையும் (M.Phil.) பெற்றவராவார். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ள இவர் இந்தியா, நோர்வே, ஜப்பான், இந்தோனேசியா முதலான நாடுகளில் நடைபெற்ற பல்வேறு ஆய்வரங்குகளில் பங்குபற்றியுமுள்ளார். தன்னுடைய நீண்டகால ஆய்வுச் செயற்பாடுகளின் ஊடாக பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் 'மனித உரிமைகள்: கோட்பாடுகளும் வியாபகமும்', 'முரண்பாடும் சமாதானமும் - ஓர் அறிமுகம்', 'அரசியல் கட்சிகள் - அமுக்கக்குழுக்கள் - பொதுசன அபிப்பிராயம்', 'இலங்கையில் அரசியல் திட்டங்களின் பரிணாம வளர்ச்சி', 'பொது நிருவாகவியல்', 'அரசியல் புவியியல்', 'சமூகத்தில் முரண்பாட்டினை தவிர்த்தலும் நல்லுறவை கட்டியெழுப்புதலும்', 'சமாதானமும் சமூகத்தில் சமாதானத்தை கட்டியெழுப்புதலும்', 'சமூக ஒழுங்கும் மாற்றமும்', 'சிறுவர் உரிமையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் எதிர்நோக்கும் சவால்களும்' ஆகியவை உள்ளிட்ட பல்வேறு நூல்களையும் இதுவரையில் வெளியிட்டுள்ளார்.

ISBN 978-955-659-181-1

குமரன் புத்தக இல்லம்

விடயம்: அரசியல் விஞ்ஞானம்

விலை ரூபா 250.00

#367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org